

கல்கி
KALKI
30 காசு
13.10.1963

கல்கி

பொருளடக்கம்

சோபகிருது, புரட்டாசி 27 ★ அக்டோபர் 18



பட விளக்கம் :
53-ம் பக்கம் பாருங்கள்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்

உதவுவீர் முன்னே, ஊதுவீர் பின்னே



நாலுபேருக்கு நடுவில் புழங்கும் போது. சொந்த சிகரெட்டைப் பற்றவைப்பதற்கு முன்பாக. பிறருக்கு வழங்குவதே ஒழுங்கு. ஒரு பெட்டியைக் கச்சிதமாக நீட்டினீர்களேயானால் அதுவே மெச்சதற்குரிய வழி. பிறரிடமிருந்து பெறும் ரகங்களைக் குறைகூறாமலிருத்தல் சிறந்த பண்பாட்டுக்கு அறிகுறி.

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது **பனமா**




இழுக்க இழுக்க இன்பம்- இறுதிவரை

விசேஷக் கவனை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 616 TAM — Greens' Advtg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 11

ஏன் இந்த எதிர்ப்பு?

ராஜாஜி

நானும் ஜவாஹர்லால் அவர்களும் ஒன்று சேரவேண்டும்; இப்போது போல் பரஸ்பரம் எதிர்ப்பு இல்லாமல் நாட்டை இருவருமாக முன்னேற்ற வேண்டும் என்று பலர் எனக்கு வருத்தத்துடன் எழுதுகிறார்கள். நல்ல எண்ணத்தோடும், பணிவுடனும், மிக்க பக்தியுடனும் இப்படி எழுதுகிறார்கள்.

ஆனால், இந்த வருத்தத்தில் அரசியல் முதிர்ச்சி இல்லை. குடும்ப விஷயங்களில் 'ராஜி' செய்வதுபோல் ஒரு நாட்டு அரசியலில் செய்ய இயலாது. தங்கள் மனச்சாட்சி காட்டும் மார்க்கத்தை விட்டு, தவறு என்று கருதும் மார்க்கத்தை ஒப்புக்கொண்டு ராஜி செய்து கொள்வது அரசியலுக்கும் தருமத்துக்கும் விரோதமாகும்.

குருஷ்சாவும் மாவ்-ஸே-துங்கும் ஒரே லட்சியம் கொண்டவர்கள். ஒரே கம்யூனிஸக் கட்சியைச் சேர்ந்தவர்கள். என்றாலும் தங்கள் மார்க்கங்களில் மாறுபாடு இருப்பதால் பரஸ்பரம் கடுமையாக எதிர்த்துக் கொள்கிறார்கள். இதனால் மேல்நாடுகளின் கை ஓங்கி விடக்கூடும், கம்யூனிஸத்தின் செல்வாக்கும் பலமும் குன்றக்கூடும் என்று நன்றாகத் தெரிந்தும் அந்த ஆபத்தை எதிரிட்டு நிற்கிறார்கள். பல கோடி மக்களை நிர்வகிப்பவர்கள் தங்கள் கருத்துக்களுக்காகப் பிரிந்து நிற்கிறார்கள்.


இப்போது காங்கிரஸ் ஆட்சியில் நடப்பது தேசத்துக்குப் பெரும் தீமை என்று நான் திடமாகக் கருதுகிறேன். கட்டுக்கோப்பும் வலிவும் உள்ள ஓர் எதிர்க்கட்சியில்லாமல் ஏக கட்சி ஆதிபத்தியம் நடப்பது நல்லதல்ல, பெருந்தீமை என்பதை வியக்தமாகக் காண்கிறேன். 'ஏன் எதிர்க்கிறீர்கள்? நேரு அவர்களுடன் ஒன்றாகிவிடுங்கள்!' என்று சொன்னால் நான் எப்படி ராஜி செய்துகொள்ள முடியும்?

நல்ல நிர்வாகத்துக்கு சக்தி வாய்ந்த எதிர்க்கட்சி எவ்வளவு அவசியம் என்று மக்கள் உணர்ந்தால் இப்படிப் போலி ஒற்றுமை பற்றிப் பேசமாட்டார்கள். மேற்கு ஜெர்மானிய அரசாங்கத்தைப் பற்றி எழுதும் ஓர் அரசியல் நிபுணர் எதிர்க்கட்சியின் அவசியத்தைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:

"பிரதமர் எர்ஹார்ட் அவர்களுக்குச் சக்திவாய்ந்த உண்மையான எதிர்ப்பு இராது என்பது வருந்தவேண்டிய விஷயம். அரசாங்கத்தின் சாதனைகளை ஊக்குவது எதிர்க்கட்சிதான். எதிர்ப்பு இல்லாமல் எந்த அரசாங்கமும் முன்னேற்றம் காண முடியாது. அரசாட்சியிலுள்ள சுயநலக் கும்பல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பொறுப்பேற்றுள்ள பிரதமருக்கு உண்மையான எதிர்க் கட்சிதான் சகாயம் செய்யும். எதிர்க்கட்சி பலவீனமாக இருந்தால் அது ஆட்சித் தலைவருக்கு இந்த விதத்தில் பயன்படாது" என்கிறார் அவர்.

பிரதமர் நேரு அவர்கள் உண்மையாகவே அரசாட்சியில் சுயநலக் கும்பல் சேராமல் தூய்மையைக் காக்க விரும்பினால் எதிர்க்கட்சியே அவருக்குப் பக்கபலமாகப் பயன்படும். எதிர்ப்பு சக்தி வாய்ந்ததாகவும் இருக்கவேண்டும். நல்ல அரசாட்சிக்கு எதிர்க்கட்சி பலவிதங்களில் அத்தியாவசியமாகும்.

இந்த அவசியத் தேவையைத்தான் நமது அரசாங்கம் விரும்பவில்லை. இது பரிதாபப்படவேண்டிய விஷயம். எதிர்க்கட்சி வளராமல் தடுப்பதோடு, காங்கிரஸ் ஸ்தா



பனத்துக்குள்ளும் எந்த விதமான எதிர்ப்பு எண்ணமும் எழக் கூடாது என்று ஆட்சியாளர்கள் தற்போது கருதுகிறார்கள். யதேச்சாதிகாரத்தினால் கட்சி அங்கத்தினர்களையும் அடக்கி, சுதந்திரச் சிந்தனையை அழிக்கிறார்கள். எல்லா ராஜ்யங்களிலும் தம் கட்சியில் உட் பூசல்கள் மூண்டிருப்பதைக் கண்டு பயந்து, கட்டுப்பாட்டைக் கடுமையாக வலியுறுத்த நினைக்கிறார்கள். மாறுபட்ட கருத்தை யாரேனும் தெரிவித்தால் அது தேசத் துரோகம் என்றும் அபாயமென்றும் கருதுகிறார்கள். வலிவான எதிர்க் கட்சி இல்லாமல், ஆள்கிற கட்சியிலும் எல்லாரும் தலையாட்டிப் பொம்மைகளானால் ஆளும் கட்சியும் அதனுடன் நாடும் அதோகதி ஆகிவிடும். ஆள்கிற கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் சுதந்திர சிந்தனையிருந்து, கருத்துக்கள் பரிவர்த்தனை ஆனாலொழிய நல்ல முடிவுகள் எடுக்க முடியாது; நிர்வாகம் முறையாக நடைபெறாது; நாடு முன்னேற்ற மடையாது. இன்று எங்கும் பயம் சர்வ வியாபகமாக இருக்கிறது. அச்சம்தான் எங்கும் ஆட்சி செலுத்துகிறது. ஒருவன் கூட்டாளியா, எதிராளியா என்று பரீட்சித்துப் பார்ப்பதற்கு ராணுவ முகாம்களில் குழூஉக் குறி அல்லது பிரமாணச் சொல் வைத்துக் கொள்வதுபோல், பயம் என்பதையே பிரமாணச் சொல்லாக வைத்து நாட்டை ஒரு யதேச்சாதிகார முகாமாக்கியிருக்கிறார்கள். கைது ஆவோமோ, சிறைப்படுவோமோ என்றெல்லாம் பயப்பட்டால் அந்த அச்ச உணர்ச்சி ஓரளவு நியாயமாகும். ஆனால் நேருஜியின் நல்லபிப்பிராயத்தை இழந்துவிடுவோமோ என்கிற மன்னிக்க முடியாத பய உணர்ச்சி நாட்டில் நிலவி யிருக்கிறது. வெளிப் பார்வைக்குப் புலி போல் தோன்றுகிற பத்திரிகைகள் கூட நேரு அவர்களின் முகம் கோணக் கூடாது என்று உள்ளூறப் பயந்து பயந்து எழுதும் தலை

யங்கங்களைப் பார்க்கிறோம். அச்சத்தை வென்றாலொழிய தனி மனிதனோ, நாடோ உயிர் வாழ முடியாது என்பதே காந்திஜி அளித்த மகா மந்திரம். இன்று காந்திஜியைப் பற்றி ஓயாமல் புகழ்மாரி பாடுகிறவர்கள் பயம் என்கிற வலையில் நாட்டையே பிடித்து விட்டார்கள். ஆட்சித் தலைவர்களும் உண்மையில் அச்சம்தான் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மை திரம் இருப்பின் விவாதங்களையும் கட்சியில் தோன்றும் சந்தேகங்களையும் அடக்க மாட்டார்கள். யாரும் தங்கள் கருத்தைச் சொல்லச் சுதந்திரம் அளித்து அதைத் தைரியமாக விவாதித்துத் தீர்ப்பார்கள். தங்கள் கொள்கையை நிலை நாட்டிக் கொள்ள தீரம் இல்லாததால் தான் இன்று எதிர்ப்பே எழாதபடி செய்யப் பார்க்கிறார்கள்.

சுதந்திரத்துக்கு ரஜாக் கொடுத்து நாட்டை விட்டே அனுப்பிவிடுகிற இந்த நிலையை நாம் அனுமதிக்கலாமா? யாரேனும் துணிச்சலாக எதிர்ப்பைத் தொடங்க வேண்டாமா? மக்களைப் பெர்மிட், லைசென்ஸ், கோட்டாவிலிருந்து விடுவித்து, சுதந்திரமாகத் தொழில் புரிந்து, சம்பாதிக்கும் சொத்துக்களைப் பயமின்றி ரட்சித்துக் கொள்ள யாரேனும் முயற்சி எடுக்க வேண்டாமா? பல்லாண்டுகளாக வளர்ந்து வந்த நமது தேசப் பண்பை அப்படியே தலைகீழாக்குகிற திட்டம் அல்லவா தற்போது காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கையாளும் முறை? இதை எதிர்க்காமல் விட்டால் நாடு பிரக்ஞை இழந்து சவமாகாதா? ஆனபடியால்தான் நான் என்னால் முடிந்தமட்டும் எதிர்க்கிறேன். இதில் சிலர் ஆச்சரியமோ கவலையோ கொள்வதுதான் வியப்பாக இருக்கிறது. நாட்டில் மகத்தான உணர்ச்சி இருப்பது எனக்குத் தெரியும். அதற்குத் தகுந்த அளவில் எதிர்ப்பு இல்லாதது தான் ஆச்சரியமும் கவலையும் பட வேண்டிய விஷயம்.

என்ன சேதி?

பயனற்ற முயற்சி

பஞ்சாப் முதன் மந்திரி கெய்ரோன் அவர்களைப் பற்றிப் பலத்த கண்டனங்களும், ஒழுங்கீனக் குற்றங்களும் சாட்டப்பட்டிருக்கும்போதும் பிரதமர் நேரு அவர்கள் ஓயாமல் மீண்டும் மீண்டும் அவரைப் பாராட்டியும், அவர் செயல் திறமையைப் புகழ்ந்தும் பேசி வருகிறார். அகில இந்திய உயர்நீதி மன்றமே கெய்ரோன் அவர்களைப் பற்றித் தீர்ப்புக் கூறிய பின்னர் பிரதமர் எவ்வளவுதான் கெய்ரோனைப் பாராட்டினாலும் அவர் இழந்த மதிப்பைப் பெறப் போவதில்லை. சந்தேகாஸ்பதமான கெய்ரோனைப் பதவியிலிருந்து விலக்கிக் கட்சி வேலையில் ஈடுபடுத்துவதானால் கட்சியின் தரக் குறைவு தெளிவாக வெளியாகிவிடும்.

கெய்ரோன் விவகாரத்தால் பிரதமர் நேருவுக்கு இருக்கும் செல்வாக்குத்தான் பொதுமக்களிடை குறைந்து கொண்டு வருகிறது. ஆட்சித் தலைமையை விரும்பவர்களுக்கு முதல் தேவை நீதி உணர்ச்சி. எல்லோருக்கும் சமநீதி என்ற கொள்கையை அவர்கள் அனுஷ்டிப்பார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு வேண்டும். நீதி மன்றத் தீர்ப்பை உதாசீனம் செய்கிற பிரதமர் தமது நீதி உணர்ச்சியைக் குறித்தே மக்கள் அவநம்பிக்கை கொள்ளுமாறு செய்து அவர்களுடைய மதிப்பில் மிகவும் குறைந்து விட்டார்.

சமய சமரஸம்

"**ஹி**ந்து மதத்தைக் கிறிஸ்தவ சமயத்தினர் நன்கு பயின்று புரிந்துகொள்ள வேண்டும்" என்று அலகாபாத் பிஷப் லெனார்ட் ரேமாண்ட், கத்தோலிக்க மத குருவான போப் வசிக்கும் வாடிகன் நகரில் நடைபெறும் கத்தோலிக்க குருமார்களின் மகாநாட்டில் கூறியிருக்கிறார். "ஒரு மதம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறது என்பது நமது மதிப்புக்கும் வியப்புக்கும் உரிய விஷயமாகிறது. ஆகவே அதனை நல்லெண்ணத்தோடு அணுகி ஹிந்து மத சிந்தனைகளை நன்கு ஆராய்ந்து புரிந்துகொள்ள முயல வேண்டும்!" என்று லெனார்ட் ரேமாண்ட் கூறினார்.

உலகில் நாளுக்கு நாள் அமைதி அழிந்து வருகிறது. இதற்குக் காரணம் நிரீசுவரவாதம் பரவி வருவதுதான். உலகில் அமைதி ஏற்பட, ஆண்டவனிடம் நம்பிக்கை கொண்டுள்ள எல்லா மதத்தினரும் ஒன்றுபட்டு எல்லா மதத்தினருக்கும் பொது விரோதியான நிரீசுவர வாதக் கொள்கையை எதிர்த்து ஆஸ்திகத்தை வளர்க்க முயலவேண்டும் என்று சமீபத்தில் ராஜாஜி ஒரு காந்தி ஜயந்தி கூட்டத்தில் கூறினார். அவ்வகையில் முயன்ற கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார் அவர்கள் நமது பாராட்டுக்கு உரியவராகிறார்.

போகிற போக்கில்....


காமராஜின் திட்டத்தைக் கௌதம புத்தர் திட்டம் என்று சொல்லுகிறார்களல்லவா? இந்தக் கௌதம புத்தர்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் இருக்கிறார்கள்... அதாவது பதவியைத் துறந்து விட்டு ஸ்தாபனத்தை வளர்ப்பதற்காகப் பாத யாத்திரைகள் மேற்கொள்ளப் போகிறவர்களையே இப்படிக் குறிப்பிடுகிறோம். இந்த மாதிரியான 'புத்தர்கள்' என்ன செய்கிறார்கள், தெரியுமா? போகிற.... புளிய மரத்தை அசைத்து விட்டுச் சென்றதாம் என்கிறபடி மந்திரி சபையில் தமது ஆட்களை நியமிக்க முயற்சி செய்து விட்டுப் போகிறார்கள், தொலை தூரம் போகும் முதலாளி தமது ஏஜண்டுக்கு ''மேடோவர்'' எழுதித் தந்து விட்டுப் போவது மாதிரி. இதனால் என்ன ஏற்பட்டிருக்கிறது? ஒரு மாகாணத்திலாவது போட்டியின்றி முதலமைச்சர் தேர்தல் நடைபெற வில்லை. இது வரை ஐந்து மாகாணங்களில் தேர்தல் நடந்திருக்கிறது. ஐந்து தேர்தல்களும் கௌதம புத்தர்களால் நடத்தப்பட்டவை. கூர்ஜரத் தேர்தலும் இதன் எதிரொலிதான். அப்படியானால் ஆறு தேர்தல்கள். இந்த ஆறு தேர்தல்களும் அடிதடி இல்லாது, வோட்டு என்ணுது நடைபெறவில்லை: ஆகவே இந்தத் திட்டம், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

ஆப்பிரிக்க ஆசிய நாடுகளிடம் இந்தியாவுக்கு இருக்கிற செல்வாக்கை ஒழிப்பதற்காகவே, சீனு இந்தியா மீது படையெடுத்துத் தாக்கியது என்று திரு நேரு அவர்கள் ஒரு பேட்டியில் கூறுகிறார்.

ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் நமக்கு என்ன செல்வாக்கு இருந்தது என்பதுதான் நமக்குத் தெரிய வில்லை. தென்னுப்பிரிக்காவில் உள்ள அரசாங்கம் இந்தியர்களை நாயினும் கேடாக நடத்துகிறது. அதே போல வட ஆப்பிரிக்காவில் சுதந்திரமடைந்து வரும் ஒவ்வொரு நாட்டிலும், இந்திய வியாபாரிகள் புது சர்க்கார்களிடம் துன்பத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். ஆப்பிரிக்காவின் நிலைமை இது. ஆசியாவைப் பற்றிக் கூறத் தேவையேஇல்லை. மலேயா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை இங்கெல்லாம் குடியேறிய இந்தியர்கள் அடி உதை பட்டுச் சொத்து சுகமிழந்து, பிரஜா உரிமைகளையும் இழந்து, அனாதைகளாக ஓடி வரு

மோரார்ஜி போனவழி





கிறார்கள். இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சீனா தாக்குவதற்கு முன்பே ஏற்பட்டது. அப்படி இருக்கும் போது நேரு ஏன் இப்படிச் சொல்கிறார் என்றால் இதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். அதாவது உழைத்து உழைத்து அவருக்கு ஓய்வே இல்லாது போய் விட்டது. ஓய்வே இல்லாத உடம்பில் தெளிவு இருக்காது என்பார்கள். தெளிவில்லா இடம் குழப்பத்தின் பிறப்பிடம். எனவே, குழம்பி யிருக்கும் நேருவுக்கு ஓய்வு தேவை. அந்த ஓய்வு அவருக்குக் கிடைக்குமானால் பாரதத்தின் மீது விழுந்திருக்கும் சீனாவின் நச்சுக் கரம் தானாகவே அகன்று விடும். காங்கிரசார் இந்த முறையில் அவருக்கு ஆலோசனை கூறுவார்களாக!

ஃ ஃ ஃ

தமது வெளியேற்றத்துக்கும் அமெரிக்க ரேடியோ ஒப்பந்தத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையெனத் திரு கோபால் ரெட்டி கூறுகிறார். திரு ரெட்டியின் அறிக்கை எங்களப்பன் குதிருக்குள் இல்லை என்ற வாசகத்தை நினைவூட்டுகிறது. அமெரிக்க ஒப்பந்தம் காரணமாக இல்லையென்றால் வேறு காரணம் எதுவும் இருந்ததா? அக்காரணம் மாளவியா, கிருஷ்ணமேனன் ஆகியோருக்கு இருந்த காரணத்தைப் போல் இருந்ததா அல்லது வேறு விதமாக இருந்ததா? இதற்கு அடுத்த கூட்டத்தில் திரு ரெட்டி விளக்கம் தர வேண்டும்.


ஃ ஃ ஃ

பாஞ்சால கெய்ரோன் ஓர் ஊழலை வெளியிட்டிருக்கிறார். என்ன, அவரே ஊழலைச் சொல்லுகிறாரா என்று மயங்க வேண்டாம். ஊழல், கண்டிராக்டர்களும் இஞ்சினியர்களும் செய்த ஊழலாம். மின் விசை உற்பத்தித் திட்டம் சம்பந்தப் பட்டது. சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் நஷ்டத்தை இவர்கள் இருவரும் அதாவது கண்டிராக்டர்களும் — இஞ்சினியர்களுமாய்ச் சேர்ந்து அரசாங்கத்துக்கு ஏற்படுத்தி விட்டார்கள் என்று அவர் குற்றம் சாட்டுகிறார். திரு கெய்ரோன் மந்திரியாக இருக்கும் இக்காலத்தில்தான் இந்த ஊழல் ஏற்பட்டிருக்கிறது.

திருடுகிறவனும் குற்றவாளி, திருடக் கொடுத்தவனும் குற்றவாளி என்பது அரசாங்கத் துறையின் மரபு. இஞ்சினியர்களும் கண்டிராக்டர்களும் குற்றம் செய்தார்களோ என்னவோ, தெரியாது. ஆனால் அவர்களைத் திருட விட்ட கெய்ரோன் என்னவோ குற்றவாளிதான். அவரே இதைச் சொல்லி சர்க்கார் கணக்கில் இரண்டரைக் கோடி நஷ்டத்தைக் காட்டுகிறார் அல்லவா? —சிட்டுக் குருவி

இலங்கைக் கடிதம்

அட்டன் மகாநாடு



சென்ற வாரம் திரு சௌமியமூர்த்தி தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 19வது வருடாந்தர மகாநாடு அட்டன் நகரில் நடைபெற்றது. இதுவரை காங்கிரஸ் எத்தனையோ கூட்டங்களையும் மகாநாடுகளையும் தோட்டப் பிரதேசத்தில் நடத்தி யிருந்தும் கூட அட்டனில் கடந்த வாரம் நடந்த மகாநாடு பல வகைகளிலும் சரித்திரப் பிரசித்தி பெற்று விட்டதென்றே சொல்ல வேண்டும். காங்கிரஸ் இதுவரையில் கடைப்பிடித்து வந்த அரசியல் கொள்கையிலே ஒரு புதிய திருப்பத்தை இம் மகாநாடு ஏற்படுத்தியிருக்கிறது.

திரு தொண்டமான் தமது அக்ராசனப் பிரசங்கத்தில் நாடற்ற நிலைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் இந்திய வம்சாவளியினரான பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்களுடைய பிரஜா உரிமைப் பிரச்னையை இலங்கை இந்திய அரசாங்கங்கள் பேசித் தீர்க்க முடியுமென்பதில் காங்கிரஸுக்கு அறவே நம்பிக்கை இல்லை என்பதைத் தெளிவாக அறிவித்தார். 'நாடற்றவர்களாக்கப் பட்டிருக்கும் மக்கள், இந்நாட்டிலே வசிப்பவர்கள், இலங்கையையே தாயகமாகக் கொண்டிருப்பவர்கள். அவர்களுடைய பிரச்னை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையே தவிர அது இலங்கை இந்தியப் பிரச்னையல்ல. ஆகையால், அதைச் சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும், இலங்கை அரசாங்கமும் பேசித் தீர்க்க வேண்டுமே அல்லாது இந்திய அரசாங்கத்துக்கு இதில் சம்பந்தம் கிடையாது. இந்திய அரசாங்கத்தின் தலையீட்டை நாம் நாடவோ அல்லது விரும்பவோ இல்லை.' இவ்வாறு கூறிய திரு தொண்டமான் நாடற்ற மக்களின் பிரதிநிதிகளுடன் பேசி ஒரு நல்ல முடிவு செய்ய முன்வருமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்தார்.

நாடற்ற நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் பத்து லட்சம் மக்களும் இந்திய வம்சாவளியினர் என்ற அடிப்படையிலேயே அவர்களிடம் இந்தியா அக்கறை காட்டி வந்திருக்கிறது. இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகள் விரைவில் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. இலங்கை இந்தியப் பிரதமர்கள் பேசுவதைத் தொழிலாளர் காங்கிரஸ் இதுவரையில் ஆட்சேபிக்கவில்லை. அதற்கு மாறாகக் காங்கிரஸ் தனது நிலைமையை விளக்கி இந்திய அரசாங்கத்துக்கு அடிக்கடி அறிக்கைகளையும் மகஜர்களையும் அனுப்பி வந்திருக்கிறது. கடந்த வருடம் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு இலங்கைக்கு வந்தபோதுகூடக் காங்கிரஸ் தலைவர்கள் அவரைச் சந்தித்துத் தங்களுடைய நிலையை விளக்கி ஓர் அறிக்கையை அவரிடம் சமர்ப்பித்தார்கள். இரு தேச அரசாங்கங்களுக்கு மிடையில் நடக்கும் பேச்சுகளில் தங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் தங்களுடைய சம்மதமில்லாத எந்த முடிவையும் தாங்கள் ஏற்க முடியாதென்றும் மட்டுமே இதுவரை காங்கிரஸ் சொல்லி வந்தது.

இக்கொள்கைக்கு மாறாக இப்பொழுதுதான் முதன் முறையாக இந்திய அரசாங்கம் உள்பட எந்த அந்நிய அரசாங்கமும் தங்களுடைய பிரச்னையில் தலையிடத் தேவையில்லை யென்றும் தங்கள் நிலையைச் செப்பனிட்டுக் கொள்ளத் தங்களுக்குத் தெரியுமென்றும் காங்கிரஸ் பட்டவர்த்தனமாக அறிவித்திருக்கிறது. சர்வதேச ஸ்தாபன மனித உரிமை சாஸனத்தைத் தழுவி பிரஜாவுரிமைப் பிரச்னைக்கு ஒரு நியாயமான முடிவு கட்டுமாறு காங்கிரஸ் மகாநாடு நிறைவேற்றிய தீர்மானம் அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது.

இம்மகாநாட்டில் பல ஆயிரம் பெண்கள் பங்கு கொண்டிருந்தது ஒரு விசேஷமான அம்சம். தோட்டங்களில் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாகக் கடும் வேலை செய்யும் பெண்கள், அரசியலிலும் அவர்களுக்குச் சமதையாகப் பணிபுரிய முடியுமென்பதைக் காட்டிக் கொண்டது அட்டன் மகாநாட்டில் தான். மாதர் காங்கிரஸ் தலைவி செல்வி சங்கரவடிவு பேசியபோது குடும்பத்தின் கட்டுக்கோப்பில் பெண்கள் அக்கறை செலுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். தொழில் மந்திரி திரு குணசேகராவும் அநேகம் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் மகாநாட்டுக்குச் சமூகம் தந்திருந்தார்கள். நான்கு தினங்கள் வரையில் அட்டன் நகரம் கோலாகலமாகக் காட்சியளித்தது.

—ரஜனி



முதல் மூவர்

ராஜாஜி·சோமு

27

நின்ற பெருமானே
    நீரேற்று!

[நீரேற்று நின்ற பெருமானே - மகாபலியி னுடைய யாகத்தில் யாசகம் பெற்று, அவன் தாரை வார்த்துக் கொடுக்க, அதை ஏற்றுக் கொண்டு, திருவிக்கிரமனுக வளர்ந்து நின்ற பெருமானே.]

தானம் செய்யும்போது, பொருளைக் கொடுத்தபின் தனக்கு இனி அதில் பங்கில்லை என்பதைக் காட்டுவதற்காகத் தண்ணீரைக் கையில் தாரையாகத் தானத்தோடு ஊற்றுவது நமது பரம்பரை முறை.

'நின்ற பெருமானே' என்பதைத் தனியாகக் கொண்டு, நின்ற திருக்கோலத்தில் காட்சி தரும் திருவேங்கடநாதனைத் தியானித்து ஆழ்வார் பாடலைத் தொடங்கியதாகவும் வைத்துக் கொள்ளலாம்.

நின்ற பெருமானே
    நீரேற்று உலகெல்லாம்
சென்ற பெருமானே
    செங்கண்ணு —

[உலகெல்லாம் சென்ற பெருமானே - திருவிக்கிரமனுக உலகனைத்தும் அளந்து வியாபித்து நின்றவனே! செங்கண்ணு - செவ்வரி படர்ந்த அழகிய கண்களையுடைய திருமாலே.]

— அன்று
துரகவாய் கீண்ட
    துழாய்முடியாய் —

[அன்று - முற்காலத்தில். துரகவாய் - குதிரை உருவம் கொண்ட கேசி என்ற அசுரன் வாயை; கீண்ட - கிழித்த. துழாய் முடியாய் - திருத்துழாய் மாலையை முடியில் அணிந்தவனே.]

— நங்கள்
நரகவாய் கீண்டாயும்
    நீ!

[நங்கள் - எங்களுடைய. நரகவாய் - நரகத்தின் வாயிலை. கீண்டாயும் நீ - அழித்தவனும் நீயே.]

கேசியின் வாயைக் கிழித்த நீதான் எங்கள் நரக வாசலையும் கிழித்தாய் என்று, அவன் திருவருளினுல் நாம் பெறும் பயனை விளக்குகிருர்.

நின்ற பெருமானே
    நீரேற்று உலகெல்லாம்
சென்ற பெருமானே
    செங்கண்ணு — அன்று
துரகவாய் கீண்ட
    துழாய் முடியாய் நங்கள்
நரகவாய் கீண்டாயும்
    நீ!

ஜபல்பூருக்கு அருகே வனாந்தரமான ஒரு பிரதேசத்தின் வழியே ஒரு மனிதன் சென்று கொண்டிருந்தான். ஆங்காங்கே சற்று நின்று அவன் சுற்று வட்டாரத்தை நன்கு கவனிப்பான். பின்னர் தலையசைத்துவிட்டு மேலே செல்வான்.

திடுமென அவனெதிரே ஓர் ஆறு எதிர்ப்பட்டது. வெள்ளப் பெருக்கெடுத்தோடும் அந்த ஆற்றினைக் கண்டதும் அந்த மனிதன் ஏதோ யோசிப்பது போல் நெற்றியைத் தடவி விட்டுக் கொண்டான். ஆற்றங் கரையோடு சற்று மேலே போனான். அங்கே அழகான ஓர் அருவி திபுதிபுவென்று கொட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். நீண்ட பெருமூச்சு எழுந்தது அம் மனிதனிடம். அருகே இருந்த ஒரு பாறையில் அமர்ந்து தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்து விட்டான்.



அதிசய மனிதரின் அரிய சாதனைகள்



மறுநாளே சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம் சென்றது ஜம்ஷெட்ஜி டாடாவிடமிருந்து. ஜபல்பூருக்கு அருகே உள்ள 'மார்பிள் ராக்' என்னுமிடத்தில் அற்புதமான அருவி ஒன்றிருக்கிறது. அத்தனை சக்தியும் வீணாகிக் கொண்டிருக்கிறது. அதனைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க எனக்கு அனுமதி அளியுங்கள் என்று விண்ணப்பத்தில் கேட்டிருந்தார் அவர்.


அரசாங்கம் அவர் கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டது அதனுடைய துரதிர்ஷ்டம்; நாட்டின் போதாத காலம்! ஆனால் இந்த நிகழ்ச்சியில் ஜம்ஷெட்ஜி டாடா என்கிற அதிசய மனிதரின் மனப்பான்மையை நன்கு காண்கிறோம்.

கவி உள்ளம் படைத்தவனாயிருந்திருந்தால் அந்த அருவியைப் பார்த்ததும் அதன் அழகில் கட்டுண்டு அப்படியே நின்றுவிடுவான். அல்லது அடுத்த ஊருக்குப் போகின்ற பிரயாணியாக இருந்திருந்தால், 'சனியன்! வெள்ளப் பெருக்கெடுத்துத் தொல்லை கொடுக்கிறதே; பாழாய்ப் போன சர்க்கார் ஒரு பாலம்கூடக் கட்டவில்லை!' என்று அலுத்துக் கொண்டு படகோட்டி எவனையாவது தேடுவான், ஆற்றைக் கடக்க. ஆனால் ஜம்ஷெட்ஜி டாடாவுக்கு ஆற்றினையும் அருவியையும் கண்டதும் அதன் சக்தி - நாட்டுக்கு நலன் விளைவிக்க வேண்டிய சக்தி — பாழாய்ப் போவதாகத் தோன்றியது. உடனே அதனை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று திட்டம் போட ஆரம்பித்துவிட்டார்.


அரசாங்கம் அவர் கோரிக்கையை மறுதலித்ததும் ஒரு விதத்துக்கு நல்லதாகத்தான் போய்விட்டது. ஏனென்றால் ஜம்ஷெட்ஜிக்கு எதிர்ப்பிலே காணும் வெற்றியிலே தான் இன்பம் அதிகம்! 'அப்படியா சங்கதி? அனுமதி தரமாட்டாயா? விட்டேனா பார்!' என்று உடனே ஒரு உறுதி உண்டாகிவிட்டது, அவர் உள்ளத்தில். அதன் காரணமாக முதலில் அவர் நினைத்ததைக் காட்டிலும் மிகப் பெரிய அளவில் நீர் மின்சார நிலையம் அமைப்பதற்கான யோசனைகள் உருவாயின. பம்பாய்க்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள மலைப் பகுதிகளை ஆராய்ந்து மின்சார உற்பத்திக்குச் சிறந்த இடம் ஒன்றைக் கண்டார் ஜம்ஷெட்ஜி.

ஆனால் ஒன்று. அங்கே ஆறுகளெல்லாம் கிழக்குத் திக்கு நோக்கி ஓடின. ஜம்ஷெட்ஜியின் திட்டத்துக்கு இது ஒத்து வரவில்லை. அவை மேற்கு நோக்கிச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார். ஜம்ஷெட்ஜி மனது வைத்தால் நடக்காததும் உண்டா? அவருக்காக நதிகள் கூடத் திசை மாறின! அந்த நீரின் சக்தி கொண்டு 1915ல் முதன் முதலாகத் தயாரான மின்சாரம்தான் இன்


றைக்கும் பம்பாய் நகரில் விளக்குகளை எரியச் செய்கிறது; ரயில்களை ஓடவைக்கிறது; பருத்தி ஆலைகளை இயங்கவைக்கிறது; இன்னும் பலப் பல விதங்களில் மதிப்பிட முடியாத அளவுக்கு நாட்டின் செல்வத்தை பெருக்குகிறது!



ஆரோக்கியமான நோயற்ற வாழ்க்கைக்கு உடலுக்கு இரும்புச் சத்து எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு நாட்டின் வளத்துக்கும் இரும்பு அவசியம். இதனை நன்கு உணர்ந்திருந்தார் ஜம்ஷெட்ஜி. தமது இருபதாவது வயதிலேயே தந்தையாருடைய வியாபாரத்தில் கைகொடுத்து உதவ ஆரம்பித்த ஜம்ஷெட்ஜி, பாரத நாடு விரைவில் தொழில் துறையில் நிறைய அபிவிருத்தி அடைய வேண்டும் என்றால் அதற்கு முதற்படியாக இரும்பு







ஆலைகள் பெரிய அளவில் தோன்ற வேண்டும் எனக் கண்டார். இத்துறையி லும் தமது பங்கினை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற அரிப்பு உரு வாகியது அவர் உள்ளத்தில். நினைத்த காரியத்தை நிறைவேற்றி வைத்தால் ஒழிய நிம்மதி காண முடியாத இதயம் படைத்த அவர், அமெரிக்காவுக்குக் கிளம்பி விட்டார்.

அங்கே சார்ல்ஸ் பேஜ் பெரின் என்ற நிபுணரைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவ்வளவுதான்; உடனே அவருடைய அலுவலகத்துக்கு விஜயம் செய்தார் ஜம்ஷெட்ஜி. ''சார்ல்ஸ் பேஜ் பெரின் என்பவர் நீங்கள்தானே? இந்தியாவில் கென்னடி ஸ்தாபனத்தார் ஓர் இரும்பு உருக்கு ஆலையை அமைக்கப் போகிறார்கள்; நீங்கள் ஆலோசனைகள் கூறி உதவும் பொறி இயல் நிபுண ராகப் பணியாற்றுங்கள்; பணம் திரட்ட நான் இருக்கிறேன்! என்ன சரிதானே? எப்போது கிளம்ப லாம்?'' என்று இந்த ரீதியிலே வார்த்தைகளை விழுங்காது சுற்றி வளைக்காது பேசிய ஜம்ஷெட்ஜி அறிஞர் பெரினை எடுத்த எடுப்பிலேயே வெகு வாகக் கவர்ந்து விட்டதில் வியப்பில்லை. டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி (TISCO) ஆரம்ப மான கதை இது.

பம்பாய்க்கு அருகே நீர்மின் நிலையம் உருவாகி அதன் காரணமாகப் பம்பாய் நகரமே உருமாறி,



தொழில் வளம் மிக்கதும், செல்வம் கொழிப்பதுமான மிகப் பெரிய பட்டணமாய்ச் சிறப்புறுவதைக் காண ஜம்ஷெட்ஜி உயிர் வாழ்ந்திருக்க வில்லை. அதே போல் 'இந்தியா மேன்மையுற இரும்பு ஆலை' என்கிற அவரது கனவுநினைவாவதையும் அவர் பார்க்க முடியவில்லை. ஆனால் தாம் ஊன்றிய விதைகள் வீணாகாமல் செடிகளாகவும் மரங்களாகவும் தழைத்து வளர பாடுபட்டு உழைக்கக் கூடிய 'டாடா குடும்பத்தினர்' என்ற பெருஞ் செல்வத்தை விட்டுச் சென்றார் அவர்.

சுதேசி இயக்கம் என்பது நமது நாட்டில் தோன்று முன்னரே சுதேசி என்று தமது பருத்தி ஆலை ஒன்றுக்குப் பெயர் வைத்தார் ஜம்ஷெட்ஜி. சுதேசி என்ற அந்தச்சொல்தான் டாடா குடும்பத்தினரின் லட்சியமாக அன்று முதல் இன்று வரை இருந்து வந்திருக்கிறது. நமது நாட்டில் நாம் செய்யமுடியாதது இல்லை; தேவைப்படுவதெல்லாம் ஊக்கம், உற்சாகம், உழைப்பு இம்மூன்றும்தான் என்பதேஅவர்கள் குறிக்கோளாக இருந்து வந்திருக்கிறது. இந்த லட்சியத்தை எட்டிப் பிடிப்பதில் அவர்கள் கடக்க வேண்டி யிருந்த மேடு பள்ளங்கள் எத்தனை எத்தனையோ!

இன்றோ நாளையோ என்று இருந்த இன்னல் மிகுந்த காலங்களை யெல்லாம் கடந்து அடிபட்டு இடிபட்டு உயர்ந்தவர்கள்தான் டாடா குடும்பத்தினர். அவ்வாறு பட்ட சிரமமெல்லாம் வீண் போகவும் இல்லை. அனைத்திலும் சுதேசி என்கிற லட்சியத்தை எட்டிப் பிடித்து விட்டார்களென்றே சொல்லலாம். பிரதிதினமும் அதிகாலையில் எழுந்தது முதல் நீங்கள் செய்கின்ற காரியங்கள் ஒவ்வொன்றும் எண்ணிப் பாருங்கள். குளித்து விட்டு வந்தீர்களா? நீங்கள் உபயோகித்த சோப்பு, தலைக்குப் பயன்படுத்திய வாசனைத் தைலம், அணியும் உடை, பூசிக்கொள்கிற செண்டு இவை யெல்லாம் டாடா குடும்பத்தினர் செய்து அளித்தவை என்பதை சற்று யோசித்தால் புரிந்து கொள்வீர்கள். காரியாலயத்துக்குப் பஸ்ஸில் செல்கிறீர்கள். பஸ்ஸின் பெயரைக் கவனியுங்கள்! டாடா—மெர்ஸிடஸ்! தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போகத் திட்டம் போட்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏறி அமரவிருக்கிற ரயிலை இழுத்துப் போகும் எஞ்சின் 'டாடா லோகோமோடிவ்' தயாரிப்பு. காரியாலயத்தில் உங்கள் அதிபதி வியாபார நிமித்தமாக மேல்நாடுகளுக்குச் செல்ல விருக்கிறார். அவர் செல்லப் போகும் விமானம் ஏர் — இந்தியா இன்டர்நேஷனலைச் சேர்ந்தது. இந்தக் கம்பெனியை நிர்வகிப்பவர் ஜே. ஆர். டி. டாடா. விமானத்தில் ஏறுமுன்னர் உங்கள் முதலாளி பிரயாண இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ளப் போகிறார். நியூ இந்தியா இன்ஷ்யூரன்ஸ் ஒரு டாடா ஸ்தாபனம். பம்பாயில் உள்ள பிரும்மாண்டமான தாஜ்மகால் ஓட்டலில் அயல்நாடுகளிலிருந்து பல பிரயாணிகள் வந்து தங்குகின்றனர். அந்த ஹோட்டல் 1903ல் ஜம்ஷெட்ஜியினால் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஹோட்டலின் அறைகள் 'ஏர் கண்டிஷன்' செய்யப்பட்டுள்ளன. ஏர் கண்டிஷனர்களைத் தயாரிக்கும் வோல்டாஸ் கம்பெனியுடன், டாடா குடும்பத்தினருக்குத் தொடர்புண்டு. இன்னும் விவசாயிகளுக்காகக் கிருமி நாசினிகள், உரங்கள், உப்பு, மோட்டார் கார்கள், ஸிமென்ட் போன்ற அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பல பொருள்கள் டாடாக்களின் தயாரிப்புகளாய் உள்ளன.

இன்றையத் தினம் பதினாறுக்கு மேற்பட்ட கம்பெனிகளின் சேர்மனாகவும் ஐந்து கம்பெனிகளின் டைரக்டராகவும் பதினேழு அல்லது பதினெட்டு ஸ்தாபனங்களில் முக்கிய அங்கத்தினராகவும் பணியாற்றி வருகிறார் பத்ம விபூஷண் ஜே. ஆர். டி. டாடா. இவ்வளவையும் கட்டிக் காத்து நிர்வகிப்பது என்பது எவ்வளவு சிரம சாத்தியமான காரியம்? இத்தனைக்கும் இடையில் ஜே. ஆர். டி.க்கு கோல்ப் விளையாடவும் நீச்சல் குளத்தில் சற்று நேரம் பொழுது போக்கவும் அவகாசம்கிடைக்கிறது என்றால், அவர் கம்பெனிகள் பலவற்றை நிர்வகிப்பது போலவே தமது வாழ்க்கை முறையையும் அழகாக நிர்வகித்துக் கொள்கிறார் என்பதுதான் பொருள். 1929ல் பாரத நாட்டிலேயே முதன் முதலாக விமான ஓட்டி லைசென்ஸ் எடுத்தவர் ஜே. ஆர். டி. டாடா. 1932ல் தபால்களைத் தமது சிறிய விமானத்தில் ஏற்றிக் கொண்டு கராச்சியிலிருந்து பம்பாய்க்கு அவர் வந்து சேர்ந்தது, பாரத சரித்திரத்திலேயே முக்கிய இடம் பெற்று விட்ட ஒரு நிகழ்ச்சி. முப்பதாண்டுகளுக்குப் பிறகு சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில், மீண்டும் ஒரு முறை அந்தச் சரித்திர சம்பவத்தை நிகழ்த்தி மகிழ்ந்தார். டாடா கம்பெனிகளின் சேர்மனாக இருபத்தைந்து வருஷங்களாக இருந்துவரும் ஜே. ஆர். டி. வெள்ளி விழா கொண்டாடினார் இரண்டு மாதங்களுக்கு முன்பு.

இவை யெல்லாவற்றையும் விடச் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது ஊருணி நீர் போலத் தங்கள் குடும்பத்தின் செல்வத்தைப் பல நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துகிற மனப்பான்மை. 1877லேயே பென்ஷன் முறைகளைத் தமது தொழிலகங்களில் அமுல் நடத்தியவர் ஜம்ஷெட்ஜி. 1890ல் இங்கிலாந்தின் தொழிற்சாலைச் சட்டங்களை அறிஞர்கள் போற்றிக் கொண்டிருந்த போது இங்கே ஜம்ஷெட்ஜி அதற்கு அதிகமாகவே தமது ஊழியர்களுக்குச் சம்பளமும் இதர சலுகைகளும் கொடுத்து வந்தார். அவரது வழித்தோன்றலாய் இன்று விளங்கும் ஜே. ஆர். டி. டாடாவும், டாடா குடும்பத்தினரின் சுமார் எட்டு தர்ம ஸ்தாபனங்களின் தர்மகர்த்தாவாக இருந்து தொண்டாற்றி வருவதுடன், 1,35,000 தொழிலாளர்களின் நலன்களையும் நன்கு கவனித்துக்கொள்கிறார். எவ்வளவு அக்கறையுடன் என்பதை, டாடா இரும்பு ஆலைக்குப் பக்கத்தில் உள்ள புனல்கள் சூழ்ந்த அழகிய பூங்காவனத்தைப் பற்றி ஜே. ஆர். டி. கூறுவதிலிருந்து எளிதில் ஊகிக்கலாம்: ''இரும்பு ஆலையைவிட ஒரு படி அதிகமாகவே இந்த பூங்காவைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். ஏனெனில், அந்த இரும்பு ஆலையில் அழுக்குக்கும் இரைச்சலுக்கும் மத்தியில் வியர்வைசொட்ட உழைப்போரைவிட இந்தப் பூங்காவை அனுபவிக்கத் தகுதி உடையோர் வேறு யாருமில்லை!''



கலாநிகேதனின் சேலை: கந்தார்க்கலை

எழிலுக்கு எழில் கூட்ட... லக்மே முகப் பவுடர்

சரும எழிலோடு நேர்த்தியாய் இணையும் 6 வித நிறங்களில் கிடைக்கும் பரிபூரணப் பவுடர்—முகத்திற்கு மெல்லிய மோகனத் திரையிட்டு, களங்கங்களை மறைத்துவிடுகிறது. மேனியெழிலோ பட்டுப் போன்ற மென்மையினைப் பெறுகிறது.

நேசுரல்-ரசேல்-கோல்டன் பீச்-ரோஸ் கோரல்-ஸன்டான்-க்ளோயிங் அம்பர்



லக்மே

தாயில்லாப் பெண்ணாகிய உமா, 'நீயும் எனக்கு ஒரு பெண் மாதிரி' என்று திரிபுரசுந்தரி அம்மாள் கூறக் கேட்டதும் தனக்கு ஏற்பட்ட மன நெகிழ்ச்சியை வெளியே காண்பித்துக் கொள்ளாமல் மறைத்துவிட நினைத்தாள். அதற்காக, சட்டென்று ஒரு மூலையில் சாத்தியிருந்த வீணையை எடுத்து வந்து திரிபுர சுந்தரியம்மாளின் முன்னிலையில், உட்கார்ந்து மூத்த பெண்ணான ராஜிக்கு வீணைப் பயிற்சி அளிக்கத் தொடங்கினாள்.

''உமா! 'கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற பாடலை நீ பாடம்மா!'' என்றாள் திரிபுர சுந்தரியம்மாள் ஏதோ ஒரு கனவு மயக்கத்தோடு. அந்த அம்மாள் கல்யாணமான புதிதில் அந்தப் பாடலைப் பாடித்தான் தன் கணவரின் துறவு உள்ளத்தைச் சம்சார பந்தத்தில் இழுத்துத் தன் கணவரையே தன் கைகளுக்குள் குழந்தையாக்கி ஒன்பது விளையாட்டுப் பிள்ளைகளைச் சிருஷ்டித்தாள்.

பாரதியாரின் அந்தப் பாடலை உமா இனிமையான குரலில் பாட, அதற்கேற்றபடி ராஜி வீணை வாசிக்க, மற்றக் குழந்தைகளெல்லாம் அந்தப் பாடலுக்குத் தங்கள் மனம் போனபடி அபிநயம் பிடித்து டான்ஸ் ஆடினார்கள்.

''பின்னலைப் பின்னின்று
இழுப்பான்—தலை
பின்னே திரும்பு முன்னே
சென்று மறைவான்.''

இந்த வரிகளைப் பாடும்போது உமாவுக்கு இதுவரை உண்டாகாத புளகாங்கிதமும், குறும்புத் தனத்தை ரசிக்கும் நாணமும், தன் பின்னலை யாரோ பின்னின்று இழுத்து மறைவது போன்ற ஓர் இன்பப் பிரமையும், அதைத் தொடர்ந்து ஏதோ ஒருவித ஏக்கமும் உண்டாயிற்று.

பாட்டு முடிந்ததும் இன்னிசையின் பரவசத்தால் திரிபுர சுந்தரியம்மாள் புது பலம் பெற்றவள் போல் முகம் மலர்ந்து விளங்கினாள். அவள் உமாவை ஆர்வத்தோடு கூர்ந்து நோக்கி, ''உமா!



குன்று மல்லிகை

அரு. ராமநாதன்

நீ மட்டும் இந்த வீட்டுக்கே வந்து எப்போதும் எங்களுடனே இருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்'' என்று பெருமூச்செறிந்து விட்டு எதையோ யோசித்தவளாக, ''உமா! என் குழந்தைகளின் சித்தப்பா ஜகந்நாதன் சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கிறாரே, நீ பார்த்தாயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். பார்த்தேன்!'' என்று சொன்ன உமா சட்டென்று எழுந்து, ''எனக்கு நேரமாகி விட்டதம்மா! வீட்டில் என் பாட்டி காத்துக் கொண்டிருப்பாள்!'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு மாடியறையிலிருந்து கிளம்பி வேகமாக மாடிப் படிக்கட்டில் இறங்கினாள்.

படிக்கட்டின் திருப்பத்தில், இருட்சரிவில் ஜகந்நாதன் நின்று கொண்டிருந்ததால் உமா எதிர்பாராத விதமாக அவர் மீது பட்டு இடித்துக் கொள்ளும்படி நேர்ந்தது.

ஒரு கணம் உமா செயலற்று நின்றாள்! அவள் கூந்தலில் அணிந்திருந்த மலரின் நறுமணமும், முகப்பவுடரின் வாசனையும், ஜகந்நாதனின் முகத்தருகே கமழ்ந்தன. ''உமா....'' என்றார் ஜகந்நாதன்.

அடுத்த கணம் உமா சட்டென்று ஜகந்நாதனிடமிருந்து விலகி ஓடினாள்.

''ஸாரி !....'' என்று சொல்லிக் கொண்டே அவள் பின்னால் ஓடி வந்த ஜகந்நாதன், ''மிஸ், உமா! பொழுது நன்றாக இருட்டி விட்டது! உனக்குத் துணையாக வருகிறேனே!'' என்றார்.

''வேண்டாம், பரவாயில்லை! இத்தனை நாளும் நான் தனியாகத்தானே போனேன்!'' என்றாள் உமா.

''இருந்தாலும் இன்று பேச்சுத் துணையாக வருகிறேன். உன்னிடம் நான் சில விஷயங்கள் பேச வேண்டும்!''

''என்ன விஷயங்கள்?''

''அறிவாளிகள் தீராத விளையாட்டுப் பிள்ளையாக மாற முடிவதில்லை! அது தான் பெரிய துக்கம்!'' என்று சொன்ன ஜகந்நாதன் வழக்கமான விஷமப் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, ''ஆண்டவனாலும் அறிவில்லாத இளம் முட்டாள்களாலும்தான் விளையாட்டுக் குழந்தைகளாக மாறி, ஆனந்தம் பெறவோ, தரவோ முடிகிறது! அறி



வாசிகளுக்கு இல்லாத அந்த வாய்ப்பு முட்டாள்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவு மோசம், பார்த்தாயா?'' என்றார்.

உமா பதில் சொல்லவில்லை. தெருவில் இறங்கி வேகமாக நடந்துசென்றாள். ஜகந்நாதனும் வேகமாகப் பின் தொடர்ந்து அவள் அருகிலேயே நடந்தார்.

தெரு விளக்குகளின் வெளிச்சத்துக்கு மேலாக வானத்து நிலவின் வெளிச்சம் குளுமையாகப் பொழிந்தது. இரவின் குளிர்ந்த காற்றில் உமாவிடமிருந்து எழும்பும் நறுமணமும் கலந்து மனோ ரம்மியமாகக் கமழ்ந்தது.

''உமா! சிலரை முதலில் பார்த்தவுடனேயே அவர்கள் மீது நமக்கு ஏதோ ஓர் இனம் புரியாத அபிமானமோ, மதிப்போ உண்டாகி விடுகிறது. சிலரைப் பார்த்தால் காரணமில்லாமல் ஒரு வெறுப்பும் உண்டாகிறது. இது ஒரு மனோ தத்துவ மர்மம்!'' என்றார் ஜகந்நாதன்.

இதை அவர் ஏன் சொல்லுகிறார் என்பதை உமா புரிந்து கொள்ள விரும்பவில்லை. ஆனாலும் ஜகந்நாதனின் புதுமையான பேச்சிலும், போக்கிலும், சிரிப்பிலும் ஏதோ ஓர் அலாதியான காந்த சக்தி இருப்பதை மட்டும் உணர்ந்தாள்.

இருவரும் தெருவில் சிறிது தூரம் மௌனமாக நடந்து சென்றார்கள்.

அந்த மௌனம் 'கருக்' கொள்வதை உமா அநுமதிக்க விரும்பவில்லை. ''உங்கள் அண்ணாவின் குழந்தைகளுக்கு நீங்கள் சிங்கப்பூரிலிருந்து, ரிப்பன், மிட்டாய் எல்லாம் வாங்கி வந்தீர்களாமே!'' என்று மெல்லப் பேச்சை ஆரம்பித்தாள்.

''அண்ணாவுக்குக் கைப் பிரம்பு; அண்ணிக்குத் தலைச் சவுரி எல்லாங்கூட கொண்டு போய்க் கொடுத்தேன். ஆனால் அவற்றை நான் சிங்கப்பூரிலிருந்துவாங்கவில்லை. அண்ணாவின் வீட்டுக்கு வருகிற வழியில் மூர்மார்க்கெட்டில்தான் வாங்கினேன்!'' என்று சிரித்த ஜகந்நாதன், ''உமா! நான் உலகச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இந்தச் சென்னை மாநகரத்துக்கு வந்து ஒருமாதத்துக்கு மேல் ஆகப் போகிறது. என் அண்ணாவின் வீட்டின் பக்கம் எட்டிப் பார்க்கவே எனக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால் அந்த வீட்டில் நீ டியூஷன் கற்றுக் கொடுக்கிறாய் என்று தெரிந்ததும் உறவு முறையைத் தேடி வந்து விட்டேன்!'' என்றார் அர்த்த புஷ்டியுடன். அதைக் கேட்டு உமா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''உமா! நீ குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறதே தனி அழகு!''

''கள்ளங் கபடமற்ற குழந்தைகள் என்னிடம் அளவில்லாத அன்பு வைத்திருக்கின்றன!''

''குழந்தைகளே அப்படித்தான்! கொஞ்சம் அன்பு காட்டினால் போதும்; அட்டைகள் போல் பெரிதாக ஒட்டிக் கொண்டு விடும்! அது சில சமயங்களில் நமக்குப் பரமானந்தமாக இருக்கும்; சில சமயங்களில் பிராணாவஸ்தையாகி விடும்!''

இந்த அபூர்வமான சித்தாந்தத்துக்கு உமா பதில் சொல்ல விரும்ப வில்லை.

''உமா! சாந்தோமில் பிச்சுமணியின் வீட்டுக்குப் பின் வீதியில், அதாவது உன் தங்கை வசந்தியின் வீடு இருக்கும் வட்டாரத்தில் 'மோகன் ராஜ் நர்ஸிங் ஹோம்' என்று ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரி இருக்கிறதே, அதை நான் விலைக்கு வாங்கி அங்கேதான் குடியிருக்கிறேன்!'' என்றார் ஜகந்நாதன்.

''உங்களுக்கு எவ்வளவோ விஷயங்கள் தெரிந்திருக்கிறதே!'' என்று உமா திகைப்புடன் கேட்டாள்.

''உமா! நான் ஒரு டாக்டர் மட்டுமல்ல! ஓர் எழுத்தாளனும் கூட! விஷயங்களை வேகமாகச் சேகரிப்பதில் விருப்பமுள்ளவன்! துப்பறிவதிலும் எனக்குத் திறமையுண்டு!''

''வசந்தியை உங்களுக்குத் தெரியுமா?''

''நேரில் பார்த்ததில்லை! கேள்வி ஞானம்தான்!'' என்று சொன்ன ஜகந்நாதன், ''ஆனால், உமா! பிச்சுமணியின் தாத்தாவை நான் வெகு சுலபமாகச் சிநேகம் பிடித்து விட்டேன்!'' என்றார்.

''அது எப்படி உங்களால் முடிந்தது?''

''முகஸ்துதி, பரம்பரைப் புகழ்ச்சி, சீட்டாட்டம், மந்திராலோசனை, உலகியல் பேச்சு இவை போன்ற ஏதாவது ஒன்றில் எப்பேர்ப்பட்ட பெரியவரையும் அறிவாளியையும் கூட எளிதில் சிநேகம் பிடித்து விடலாம். ஆனால் அது ஒரு தனி வித்தை!'' என்றுசிரித்த ஜகந்நாதன், ''பிச்சுமணியிடமும் நான் நெருங்கிப் பேசினேன்! அவன் மிகவும் உணர்ச்சிகரமான பையன்! ஆனால் உணர்ச்சிக்கும் அறிவுக்கும் வெகுதூரம். இரண்டும் இருதுருவங்கள் போன்றவை. இரண்டுக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்படுவது துர்லபம்!'' என்றார்.

பிச்சுமணியைப் பற்றிய பேச்சை எடுத்ததுமே உமாவுக்கு ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு, ''நீங்கள் எல்லாரையும் எளிதில் எடை போட்டு விடுகிறீர்களே!'' என்றாள்.

''அதுமட்டுமல்ல! ஒரு தீர்க்கதரிசனமும் சொல்கிறேன், கேள்! என் அண்ணா

குறிப்பாக எங்கள் பாப்ளின்கள், சின்ட்ஸ், வாயில்கள் போன்ற ஆணிகளில் அச்சிடப்பட்டுள்ள மனோகரமான பொட்டுப் பூவேலைகள் ஆடைகளை ஒரேயடியாக மாற்றிவிடுகின்றன. கணக்கற்ற கண்கவர் வர்ணங்களில் நவீன மோஸ்தரிலோ, பண்டைய பாணியிலோ எழில்மிகு ஸல்வார் கமீஸ் ஜோடிகள், புடவைகள், மற்றும் விளையாட்டுக்கான ஆடையணிகள் எதையுமே நீங்கள் உயரிய வகையில் அமைத்துக்கொள்ளலாம். ஸாயாஜி மில்ஸ் அளிக்கும் பிரின்ட் வகைகள் அழகிய அமைப்புடையவை. மீண்டும் மீண்டும் அவற்றை அணிய விரும்புவீர்கள்.

ஸாயாஜி மில்ஸ் நெ. 1. பரோடா.
ஸாயாஜி மில்ஸ் அஹமதாபாத்தின் ஒரு பிரிவு. சுபலக்ஷ்மி மில்ஸ் லிட்., கேம்பே



பூவேலை ஆடையை ஒரேயடியாக

மாற்றி விடுகின்றன!

SPY-8

10 ஆண்டு
டிபென்ஸ் டெபாஸிட்
சர்டிபிகேட்டுகள்

தலைமை தபால் நிலையங்களிலும்
உப - தபால் நிலையங்களிலும்
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

மேலும்

ரிஸர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் காரியாலயங்கள்
ஸ்டேட் பாங்க் மற்றும் அதன் உப பாங்குகள்
டிரெஷரிகள், மற்றும் உப டிரெஷரிகளிலும்
ஏற்றுக் கொள்ளப்படும்

சர்டிபிகேட்டுகளை வாங்குங்கள்
ஆண்டிற்கு வரி இல்லாத
$4\frac{1}{2}$ சத வீத வட்டியைப் பெறுங்கள்

தேசிய சேமிப்பு நிறுவனம்

DA-63/217

வின் வீட்டுக்கு எதிரில் உள்ள, அதாவது டியூஷன் சொல்லிக் கொடுக்கும் ஜன்னலுக்கு எதிரில் உள்ள சோடாக் கடையைப் பிச்சுமணி கூடிய சீக்கிரம் குத்தகைக்கு எடுத்து அதில் குடியேறி விடுவான்! ஆனால் அதிகமாகச் சோடா குடித்தால் 'காஸ்டிக் டிரபிள்' (வாயுக் கோளாறு) வந்துவிடும் என்று அவனுக்குச் சொல்லி வைக்க வேண்டும்!'' என்று ஜகந்நாதன் கலகலவென்று சிரித்தார்.

இதற்குள் உமாவின் வீடு வந்துவிட்டதால் அவள் ஜகந்நாதனுக்கு ஒரு வணக்கம் போட்டுவிட்டுச் சட்டென்று வீட்டுக்குள் போய் தெருக் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அன்றிரவு —

உமாவுக்குத் தூக்கமே வரவில்லை.

அவளுடைய நினைவு அலைகளில் பிச்சுமணியும் ஜகந்நாதனும் மாறி மாறிவந்து கொண்டேயிருந்தார்கள்.

அத்தியாயம் பதினான்கு

கீதை வழியே காதல்

வசந்தி தன் கல்லூரித் தோழிகளுடன் மெரினாக் கடற்கரை மணலில் அமர்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தாள்.

இளமையின் துடிப்போடு அறிவின் துடிப்பும் இணை சேரவே, எதிலும் புதுமை காண வேண்டும், புதுமைப் பெண்ணாகத் திகழ வேண்டும் என்ற ஆர்வம் அப் பெண்களிடம் மேலோங்கி நின்றது. அந்த ஆர்வத்துக்குக் குறும்புத்தனமும், குதர்க்க வாதமும், குதூகலச் சிரிப்புகளும் குடைபிடித்து நின்றன.

அந்தப் பக்கம் நடை பழகிக்கொண்டிருந்த வாலிபர்கள் அப்பெண்களைப் பார்த்ததும் உற்சாகக் கிறுகிறுப்பு அடைந்தார்கள். குடும்ப பாரத்துடன் வந்திருந்த கணவன்மார்கள் சிலர் பெருமூச்சு விட்டார்கள். ஒருபுறம் ஓய்ந்து உட்கார்ந்திருந்த கிழவர்கள் சிலர் இடையிடையே மேலெழுந்த வாரியாகப் பார்த்து விட்டு யோக நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

அதையெல்லாம் கவனித்துவிட்ட அப்பெண்களிடையே ஆத்திரமோ அளவிலாத பெருமையோ, அந்தரங்கத்தில் ரசனையோ, ஓர விழிப் பார்வைகளோ பெருக்கெடுத்தன. அதனால் அவர்களுடைய பேச்சு உலக விஷயங்களையும், கல்லூரி நடப்புக்களையும் தாண்டிக் குதித்து, கடைசியில் காதல் ஆராய்ச்சிகளிலும், அதைப் பற்றிய தர்க்க வாதங்களிலும் இறங்கியது.

''அடி வசந்தி, இந்த ஆண்களே எப்போதும் இப்படித்தான். உலகம் தோன்றிய காலம் முதல் பெண்களை ஆடவன் ஒரே கண்ணோட்டத்தில்தான் பார்த்து வருகிறான்.'' என்று ஆரம்பித்தாள் பிரமீளா, சரித்திரப் படிப்பின் சாதுரியத்தோடு.

''அது என்னடி கண்ணோட்டம்?'' என்று கேட்ட வசந்தி, குறும்பாகப் பிரமீளாவின் தோள் மீது தன் கையைப் போட்டு இழுத்து, ''இந்த மாதிரிக் கையோட்டம்தானே!'' என்று சிரித்தாள்.

''ஆமடி வசு! பெண்களை வெறும் பொழுது போக்குக்கு உரிய விளையாட்டுப் பொம்மைகளாகவும், விரும்புகிறபோது அழகாக வாசித்துவிட்டு மூலையில் போட்டுவிடுகிற வீணைகளாகவுமே ஆண்கள் நினைக்கிறார்கள்'' என்றாள் பிரமீளா. அதைச் சொல்ல அவளுக்கு அருகதை உண்டு. ஏனென்றால் அவள் ஓர் ஆணழகனைக் காதலித்து, கல்யாணம் செய்து கொண்டு சிறிது காலத்துக்குள்ளேயே அந்தக் கணவனால் கைவிடப்பட்டவள்!

''அடி பிரமீ! நாம் காலத்தை மாற்றுவோம்! ஆண்களை நம் வேடிக்கைக்குரிய விளையாட்டுப் பொம்மைகளாகவும், நாம் முடுக்கிவிட்டால் நமக்காக ஓடியோடி வேலை செய்கிற யந்திரங்களாகவும் மாற்றுவோம்!'' என்று முழங்கினாள் வசந்தி.

''பலே, பலே!'' என்று ஆமோதித்த சாரதா, பி.யூ.ஸி., ''ஆமடி, வசந்தி! உத்தியோகங்களில் புகுந்து கைநிறையச் சம்பாதிக்கிற பெண்களும், அவர்கள் கையை எதிர் நோக்கி வாழுகிற ஆண்களின் தொகையும் பெருகும்போது ஆண் — பெண் பிரச்னை நிச்சயம் அப்படித்தான் தலைகீழாக மாறும்!'' என்றாள் ஆணித்தரமாக. ஏனென்றால் அவளுடைய அக்கா ஒரு ஆபீஸில் தலைமைக் குமாஸ்தாவாக உத்தியோகம் பார்த்துப் பணம் சம்பாதித்து வீட்டில் ஒரு கணவனை வைத்துக் கொண்டு அவன் மனத்தைக் குத்திக் குத்தி வேடிக்கை பார்ப்பவள்.

''ஆண் எப்போதுமே ஒரு சுயநலமி. தன் தேவை, தன் மகிழ்ச்சி, தன் சௌகரியம், தன் பெருமை, தன் நோக்கம், இவற்றையே பெரிதாகக் கருதும் ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தன் கைப்



''பாத்சாதி கோயிலுக்கா ஸாமி? அடேங் கொப்பா எம்மாந் தொலவு கெடக்குதுங்க! ஒரு ரூவா குடு ஸாமி!''

''வேணும்பா, காசு இல்லே. நடந்தே போயிடறேன், வழி சொல்லு.''

''இதோ இந்த சந்திலே திரும்பி பத்து அடி போ ஸாமி! அதான் திவலகேணி பாத்சாதி கோயிலு!''

பாவையாகவோ, கைவிளக்காகவோ தன் சொத்தாகவோ, ஜடமாகவோ மதிக்கிறானே தவிர, பெண்களுக்குத் தனியாக ஓர் இருதயம், உணர்ச்சிகள், விருப்பு, வெறுப்புக்கள் இருக்கும் என்பதை அவன் மதிப்பதே இல்லை. இது மகா அக்கிரமம்!'' என்றாள் விமலா டெய்ஸி.

''அதற்குக் காரணம் காதலனையோ, கணவனையோ தெய்வமாகப் பாவிக்கும் பெண் தனக்கென ஒரு தனி இதயம் இல்லாதவளாக அவனோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு விடுகிறாள்.'' என்றாள் மனோ சாஸ்திரத்தில் வல்லவளான வனஜா.

''அது அடிமைத்தனம்!'' என்று வசந்தி கூவினாள்.

''அப்படிச் சொல்லாதே வசந்தி! அன்பில் தன்னை இழப்பது அடிமைத்தனமல்ல! குடும்ப வாழ்க்கையில் ஆணோ, பெண்ணோ, யாராவது ஒருவர் இன்னொருவரில் தன்னை இழந்து அனுசரித்துப் போனால்தான் குடும்பம் என்னும் இரு சக்கர வண்டி ஒழுங்காக ஓடும். முகத்தில் உள்ள இருகண்களும் மாறின்றி ஒரே பொருளை ஒன்றாகக் காண்பது போல, கணவனும் மனைவியும் மனம் ஒன்றி வாழ வேண்டும் என்ற முன்னோர்களின் ஏாதுரைக் கருத்தும் முழுமை பெறும்!'' என்று வனஜா விளக்கினாள்.

''அந்த ஓல்ட் மாடல் தத்துவம் இப்போது வேண்டாம்! ஆண்களின் யுகம் மாறிப் பெண்களின் யுகம் தோன்றப் போகிறது. அந்தக் கால மாறுதலுக்கும் பெண்களின் முன்னேற்றத்துக்கும் நாமே முட்டுக்கட்டைகளாகிவிடக் கூடாது!'' என்று கூவிய வசந்தி நறுக்கென்று வனஜாவின் தொடையில் கிள்ளினாள்.

''நீ சொல்வதுதான் சரி வசந்தி! பெண்கள் எப்போதுமே ஆண்களுக்கு அடிமைகளாகத்தான் இருந்து வருகிறார்கள். அந்த அடிமைத்தனமே ஆனந்தம் என்றும், அமைதியான வாழ்வு என்றும் நினைக்கிறார்கள். அது தான் மகா பயங்கரம்!'' என்று குமுறினாள் கோமதி.

''அதற்கு என்ன காரணம் தெரியுமாடி, கோமூ! காதல், கலியாணம், குழந்தைகள் — இம்மூன்றும்தான்பெண்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்துகின்றன'' என்று வசந்தி தன் ஆய்வுத் திறனை அவிழ்த்து விட்டாள்.

''அதற்காக நாம் யாரையாவது கலியாணம் செய்து கொள்ளாமலோ குழந்தைகள் பெற்றுக் குடித்தனம் நடத்தாமலோ இருக்க முடியுமா? அப்படி முடியும் என்று சவால் விட்ட பெண்களெல்லாம் கடைசியில் யாராவது ஒருவனைக் காதலித்து, வேறொருவனைக் கல்யாணம் செய்துகொண்டு எத்தனையோ குழந்தைகளுக்குத் தாயாகி இருக்கிறார்கள். மேலும் காலா காலத்தில் கல்யாணம் ஆகாமல் கன்னியாகவே காலம் கடத்துகிற பெண்களின் பிற்கால வாழ்விலே ஏதோ ஒரு குறை உணர்ச்சி ஏற்பட்டு வாழ்க்கையே அர்த்தமற்றதாகவும் விரக்தியாகவும் தோன்றி இருதயத்தை வாட்டும்'' என்றாள் ருக்மிணிபாய்.

''அடியம்மா ருக்மிணிபாய்!'' என்று கிண்டலாக வசந்தி சிரித்தபடி ருக்மிணிபாயின் முகத்தைக் கொஞ்சுதலாகத் தன் பக்கம் திருப்பி, ''நாம் காதலிக்கலாம், கல்யாணம் செய்து கொள்ளலாம், குழந்தைகள் பெற்றுக் குடும்பமும் நடத்தலாம்! ஆனால் ஓர் ஆணுக்கு அடிமையாக ஆகும் அளவுக்கு நாம் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்துப் புத்தியைப் பேதலிக்க விட்டுவிடக் கூடாது! ஏனென்றால் ஓர் ஆணுக்கு நாம் அடிமைப்பட்டு விட்டோம் என்பது அவனுக்குத் தெரிந்தால் போதும். அடுத்த கணமே அவனுக்கு நம்மீது உள்ள சுவாரஸ்யமெல்லாம் பறந்து போய்விடும்!'' என்றாள்.



மேல் உலகத்தில்: நீங்க அதிர்ஷ்டக்காரர். ரொம்ப நாளைக்கு முன்னமேயே போய் விட்டீர்கள். உங்களுக்கு நல்ல சிலையாகக் கிடைத்து விட்டது. நான் இப்ப சமீபத்திலே தான் காலமானேன். என் உருவச்சிலை என்ன கதியாகப் போறதோன்னு நடுங்கிண்டு இருக்கேன்.

''அப்படியென்றால்....?''

''ஆண்கள்தான் நம்மிடம் மயங்கும்படி செய்ய வேண்டுமே தவிர, அவர்களிடம் நாம் மயங்கிவிடக் கூடாது!''

''அப்படியானால் ஓர் ஆடவன் நம் மீது காதல் பித்துக் கொண்டு தவிக்கும்படி விட்டு விட்டு, தூர நின்று வேடிக்கை பார்க்க வேண்டும் என்கிறாயா?''

''ஆமாம். அதில்தான் அதிகம் சுவையும் உண்டு; சுதந்திரமும் உண்டு. ஏனென்றால், உணர்ச்சிகளால்தான் பெண் அடிமையாகிறாள்!'' என்றாள் வசந்தி சிரித்துக் கொண்டே.

''நீ இதைச் சொன்னதும் பகவத் கீதையின் கருத்து ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது.'' என்று குறுக்கிட்டாள் ருக்மிணி, பிலாஸபி எம்.ஏ.

''கீதைக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம்?''

''உலக பந்தங்களுக்கும் துக்கத்துக்கும் மூல காரணம் உணர்ச்சிகளின் அறியாமைதான் என்றும், உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றும் பகவத் கீதை போதிக்கிறது. எதன் மீதும் பற்று வைக்காமல் தாமரை இலைத் தண்ணீர் போல் வாழ வேண்டும். இல்லையெனில், வாழ்க்கை பாரமாகி விடும். பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்ய வேண்டும். விளைவை எதிர் நோக்கிக் குழம்பாமல் செயல் புரிய வேண்டும்.''

''அடேடே! இந்தக் கருத்துப் பிரமாதமாக இருக்கிறதே!'' என்ற வசந்தி, ஏதோ குறும்புத்தனமாக யோசித்து விட்டு ''கீதை வழியே காதலுக்கு நான் ஒரு புது இலக்கணம் சொல்கிறேன் கேளுங்கள்! நாம் பற்று வைக்காமலே பிறர் நம்மீது பற்று வைக்கும்படி செய்வோம்! அதாவது நாம் காதலிக்காமலே பிறர் நம்மைக் காதலிக்கும்படி செய்வோம்! விளைவை எதிர்பாராமலே நாம் விளையாடிச் சிரிப்போம்!'' என்றாள்.

''வசந்தி! உன்னதமான அந்தக் கீதையின் தத்துவத்தை உன் கோணல் புத்திக்கும், குதர்க்க வாதத்துக்கும் திரித்துப் பயன்படுத்த முயலாதே! மேலும் ஆண்கள் நெருப்புக்குச் சமானமானவர்கள். நெருப்போடு விளையாடுவது முட்டாள்தனம், அபாயம்!'' என்று ருக்மிணிபாய் எச்சரித்தாள்.

ஆனால் வசந்தி அதைப் பொருட்படுத்தவில்லை. காதலை விளையாட்டாகவும் ஆண்களின் உள்ளத்தை அதற்குரிய விளையாட்டு மைதானமாகவும் கருதி, சாகஸமான ஒரு சிரிப்பு அல்லது ஒரு சிறு பார்வையின் மூலமே எத்தகைய அறிவாளியான ஆடவரையும் மகா முட்டாளாக்கி விட முடியும் என்று தனக்கென ஒரு சித்தாந்தத்தையும் உருவாக்கிக் கொண்டாள். அதை அவளுடைய குறும்புத்தனமான இளமையுள்ளம் கொஞ்சம் பரீட்சித்துப் பார்க்கவும் விரும்பியது.

ஒரு நாள் மாலை நேரத்தில் காலேஜ் விட்டதும் வசந்தி தன் சைக்கிளில் புறப்பட்டு வீட்டுக்கு வந்துகொண்டிருக்கும் வழியில் பலமான மழை பிடித்துக் கொண்டது. அதனால் ஒரு மரத்தடியில் வசந்தி ஒதுங்கி நின்று முன்னறிவிப்பில்லாமல் பெய்த மழையைத் திட்டிக்கொண்டிருந்தாள்.

அப்போது அவளது வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் வாலிபன் சங்கர் அந்தப் பக்கமாக ஒரு குடையைப் பிடித்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் மெல்ல நடந்து வந்தான்.

(தொடரும்)

நாடாண்ட நங்கையர்

விக்டோரியா மகாராணியார்

லண்டன் மாநகரின் மேற்குப் பகுதியில் உள்ள கென்ஸிங்டன் அரண்மனைக்கு 1837ம் வருஷம் ஜூன் மாதம் இருபதாம் தேதி விடியற்காலை ஐந்து மணி சுமாருக்கு, இரண்டு பேர் வேகமாக வந்து, அரண்மனையின் முன் வாயிற் கதவை இலேசாகத் தட்டினர். கதவு திறந்தது.

''என்ன விசேஷம்?''

''பட்டத்து இளவரசியைப் பார்க்க வேண்டும்.''

''முடியாது. அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறாள்.''

''இல்லை; அவசியம் பார்க்க வேண்டும். ராஜ காரியமாக வந்திருக்கிறோம். அவசரம்.''

இளவரசி, எழுப்பப்பட்டதும், உடனே எழுந்து வெளியே வந்தாள். இரவு நேரங்களில் அணிந்து கொள்கிற ஒரு 'கவுனின்' மேலே ஒரு சால்வையைப் போர்த்திக்கொண்டிருந்தாள். தலைமயிர் கலைந்து இரண்டு தோள்களின் மீதும் விழுந்திருந்தது

இவளைப் பார்த்ததும் வந்திருந்த இரண்டுபேரும் மண்டியிட்டு வணக்கம் செலுத்தினர்; 'மகாராணியே' என்று அழைத்து இவள் கையை முத்தமிட்டனர். இவள் ஒரு கணம் திகைத்தாள்.

''நான்காவது வில்லியம் மன்னர் சற்று முன்பு இறந்துவிட்டார். தாங்கள்தான் இனி மகாராணி.''

இதைக் கேட்டதும் இவள் கண்



களில் நீர்த் துளிகள் தோன்றின. அவ்வளவுதான்; சுய நினைவு இழக்கவில்லை. வந்திருந்த இருவரில் ஒருவர் காண்டர்பரி பிரதம பாதிரி; மற்றொருவர் அரண்மனைப் பிரதம நிருவாக அதிகாரி.

உடனே பிரிவிகவுன்சில் கூடியது. இளவரசி, வழக்கமான விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டாள். அப்பொழுது இவள் நடந்து கொண்ட தோரணை, கூடியிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியது; இவளிடம் பெருமதிப்புக் கொள்ளத் தொடங்கினார்கள். இவள்தான் விக்டோரியா மகாராணி.

விக்டோரியாவுக்கு முன்பு 1830 முதல் 1837ம் வருஷம் வரை ஆண்ட நான்காவது வில்லியம் மன்னனுக்குப் பிறந்த இரண்டு குழந்தைகள் இளமையிலேயே இறந்து



விட்டன. இதனால் அவனுக்குப் பிறகு அவன் சகோதரன் கெண்ட் பிரபு பட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அவன் 1820ம் வருஷம் இறந்து விட்டான். எனவே அவனுடைய ஒரே மகளான விக்டோரியா பட்டத்துக் குரியவளானாள்.

குழந்தைப் பருவத்தில் 'பேர்டி' என்று செல்லப் பெயரிட்டு அழைக்கப்பட்ட விக்டோரியா பிறந்த எட்டாவது மாதத்திலேயே தந்தையை இழந்து விட்டாள். தன் தாயின் போஷணையிலும் அம்மான் லியோபால்ட் என்பவனுடைய பாதுகாப்பிலும் வளர்ந்து வந்தாள். இந்த லியோபால்ட் தான் ஹாலந்து நாட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற சுதந்திர பெல்ஜிய நாட்டின் முதல் அரசன்.

இவளுக்கு ஐந்தாவது வயது நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு ஜெர்மானிய உயர் குடும்பத்தைச் சேர்ந்த லெஷென் என்பவள் செவிலித் தாயாக நியமிக்கப்பட்டாள். இந்த லெஷென் மகா கண்டிப்புக்காரி. காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கப்போகும்வரை ஒரு காரியக் கிரமத்தை வகுத்துக் கொடுத்து அதன் பிரகாரம் இவளை நடந்து வரும்படி செய்தாள். பதினெட்டாவது வயதில் பட்டமேற்றிறவரை விக்டோரியா இந்த லெஷென் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்தே நடந்து வந்தாள். தாயாருடைய செல்வாக்கைக் காட்டிலும் இந்த லெஷெனுடைய செல்வாக்குத்தான் விக்டோரியா மீது அதிகமாகப் படிந்திருந்தது.

லியோபால்ட் அம்மான் பெல்ஜியம் அரச பீடத்தை ஏற்றதிலிருந்து அவனுடைய கடைசிக் காலம் வரை — சுமார் முப்பத்து நான்கு வருஷ காலம் அவனுக்கும் விக்டோரியாவுக்கும் இடைவிடாத கடிதப் போக்கு வரத்து இருந்து வந்தது. இந்தக் கடிதங்களின் மூலம் லியோபால்ட், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கையை, தன் போக்குக்குத் திருப்பி விட முயன்றான். ஆனால் விக்டோரியா இதற்கு இடம் கொடுக்கவில்லை; தலையிட வேண்டாமென்று நாசூக்காகவும் மரியாதையாகவும் தெரிவித்து விட்டாள்.

விக்டோரியா பட்டமேற்றபோது வார்ட் மெல்போர்ன் என்பவன் பிரதம மந்திரியாயிருந்தான். இவன் 'விக்' கட்சியைச் சேர்ந்தவன். இதனை 'தாராளக் கட்சி' என்று ஒருவாறு சொல்லலாம். இப்பொழுது இது 'லிபரல் கட்சி' என்று அழைக்கப்படுகிறது. இந்த மெல்போர்ன்தான், விக்டோரியாவுக்கு அரச கடமைகள் பலவற்றை அவ்வப்பொழுது தெரிவித்து இவளுக்கு ஆளும் வழியைக் காட்டிக் கொடுத்தவன். இவன், தன்னுடைய 'விக் கட்சி'யினிடத்தில் விசுவாசமுள்ள ஸ்திரீகளையே விக்டோரியாவுடன் நெருங்கிப் பழகக் கூடிய சேடிகளாகவும் மற்ற அரண்மனைச் சிப்பந்திகளாகவும் நியமனம் செய்வித்தான். தன் கட்சியின் செல்வாக்குக்கு விக்டோரியா உட்பட வேண்டும் என்பதுதான் இவன் நோக்கம்.

ஆனால் பிறர் தலையீட்டை விரும்பாதவளாகவே கடைசி காலம் வரை இருந்து வந்தாள் விக்டோரியா.

விக்டோரியாவுக்கும், ஒரு ஜெர்மானிய பிரபு குடும்பத்தைச் சேர்ந்த ஆல்பர்ட் என்பவனுக்கும் 1840-ம் வருஷம் பிப்ரவரி மாதம் பத்தாந் தேதி லண்டனில் திருமணம் நடந்தேறியது. தனது திருமணத்து உடைகள் யாவும் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டவையா யிருக்க வேண்டும் என்று விக்டோரியா வற்புறுத்தி அப்படித் தயாரிக்கப்பட்ட உடைகளையே அணிந்து கொண்டாள். சுதேசியத்தில் அவ்வளவு பற்று இவளுக்கு.

விக்டோரியாவும், ஆல்பர்ட்டும் கணவனும் மனைவியுமாக வாழத் தலைப்பட்டு விட்டபோதிலும் ஒருவரை யொருவர் அறிந்து கொள்வதற்குச் சிறிது காலம் பிடித்தது. அறிந்து கொண்ட பிறகு இருவரும் ஈருடலும் ஓருயிருமாகவே வாழ்ந்தார்கள். குடும்ப விவகாரங்களிலாகட்டும், அரச காரியங்களிலாகட்டும், ஆல்பர்ட் சொன்னபடியே விக்டோரியா நடந்து வந்தாள். இதனால் மந்திரி சபைக்கும் இவளுக்கும் சில சமயங்களில் சிறு பிணக்குகள் ஏற்படுவதுண்டு. அவைகளை இவள் வெகு சாமர்த்தியமாகச் சமாளித்து வந்தாள். தன் சொல்லுக்கு மதிப்பு இருக்கும்படியாகவே பார்த்துக் கொண்டாள்.

விக்டோரியாவின் ஆட்சி மேன்மையும், பிரகாசமும் பெற்றுக் கொண்டு வருகிற தருணத்தில் ஆல்பர்ட் 1861ஆம் வருஷம் டிசம்பர் மாதம் பதினான்காம் தேதி டைபாயிட் ஜுரத்தால் இறந்துவிட்டான். அப்பொழுது இவளுக்கு நாற்பத்திரண்டு வயது.

இவளுக்கு இந்தப் பிரிவு துக்கத்தின் சிகரமாயிருந்தது. இவளுடைய வாழ்க்கைப் போக்கையே அது மாற்றி விட்டது. அரச போகங்களிலிருந்து ஒதுங்கி நின்றாள். லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனை வாசம் இவளுக்குக் கசப்பா யிருந்தது. இதனால் தன் கடைசி காலம் வரையில் லண்டனுக்குப் புறம்பான ஓர் அரண்மனையில்தான் வசித்து வந்தாள். கணவன் மரணத்துக்குப் பிறகு இவள் ஏழு தடவைதான் பார்லிமெண்ட் திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொண்டாள். அதுவும் மந்திரி சபையின் வற்புறுத்தலுக்கிணங்கி, நெடுங்காலத்திய சம்பிரதாயத்தை முன்னிட்டு.

இங்ஙனம் துக்கத்திலேயே ஆழ்ந்துவிட்டவளாயிருந்தாலும், விக்டோரியா ஒரு கணங்கூடத் தன் அரச கடமைகளை மறக்கவில்லை; துறக்கவுமில்லை. இன்னும் சொல்லப்போனால் கணவன் இருந்த காலத்தில் அரச கடமைகளை எவ்வளவு கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வந்தாளோ, அதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான தீவிரத்துடனேயே நிறைவேற்றி வந்தாள்.

மற்றும் மந்திரி சபையினர் எந்த ஒரு முக்கியமான நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் தன்னை முன்கூட்டிக் கலந்து கொள்ள வேண்டுமென்றும் அப்படிக் கலந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தத் தனக்கு உரிமை உண்டென்றும் சொல்லி அதை நடைமுறையிலும் கொண்டுவரச் செய்தாள் விக்டோரியா. ஆனாலும் தன்னுடைய பொறுப்போ, அதிகாரமோ சட்ட வரம்புக்குட்பட்டது என்பதை இவள் மறந்துவிடவில்லை.

காஸ்டோபீன்

கம்பெனியின்

கிரைப் மிக்சர்



குழந்தைகளின் சர்வ சாதாரண நோய்களான மந்தம், வயிற்று வலி, பல் வியாதிகளிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

காஸ்டோபீன் மானுபாக்சரிங் கம்பெனி

வொர்லி — பம்பாய் - 18


உங்கள் சரக்குகளை
விரைவாகவும்
பத்திரமாகவும்
எடுத்து செல்ல

LGB

இந்துஸ்தான் டிரான்ஸ்போர்ட்ஸ்

தினசரி பார்சல் சர்வீஸ்





பவுன் சூரியன்

மார்க் புகையிலை

காரைக்குடி

BS

ருஷ்யாவுக்குத் தெற்கில் உள்ள கிரிமியா தீபகற்பத்தில் வசிக்கும் கிறிஸ்துவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் உரிமை பற்றி துருக்கிக்கும் ருஷ்யாவுக்கும் தகராறு ஏற்பட்டது. இது 1853ம் வருஷம் பெரும் போராக மூண்டது. இதற்கு 'கிரிமியாப் போர்' என்று பெயர். இதில் ருஷ்யாவுக்கு விரோதமாகத் துருக்கி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து கொண்டன. போரின் இறுதியில் ருஷ்யா தோல்வியுற்றது. ஆனால் இரு தரப்புப் படைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த யுத்தத்தின்போதுதான் பிளாரென்ஸ் நைட்டிங்கேல் என்ற அம்மையார் காயமடைந்த படை வீரர்களுக்கு அற்புதமான சேவை செய்தாள். காயமடைந்தவர்களுக்கும் நோயுற்றவர்களுக்கும் அவ்வப்போது உதவி கிடைப்பதற்காக இங்கிலாந்தில் பெண் மக்கள் அடங்கிய கஷ்ட நிவாரணக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் வேலைகளை விக்டோரியாவே நேரில் மேற்பார்வை செய்து வந்தாள். இவளுடைய ஏற்பாட்டின்பேரில்தான் போரில் அதிகப்படியான வீரங் காட்டுபவர்களுக்கு, 'விக்டோரியா-கிராஸ்' என்ற வீரச் சின்னம் வழங்கும் வழக்கம் நடைமுறையில் வந்தது.

அடுத்தபடி நமது பாரத நாட்டில் 1857ம் வருஷம் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் என்று தவறாக அழைக்கப்படுகிற சுதந்திரப் போராட்டத்தைச் சொல்ல வேண்டும். இந்தக் 'கலகம்' விக்டோரியாவுக்குப் பெரிய மன வேதனையை அளித்ததாகச் சொல்லப்படுகிறது. அதுகாறும் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகத்துக்கு உட்பட்டிருந்த நமது நாடு 1858 ஆம் வருஷத்திலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடியான நிருவாகத்துக்குட்படுத்தப்பட்டது. இந்த நிருவாக மாற்றத்தை யொட்டி விக்டோரியா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரகடனத்தை வெளியிடச் செய்தாள். இதில் இந்தியப் பிரஜைகள் எந்த விதமான வேற்றுமைகளுக்கும் உட்படுத்தப்பட மாட்டார்களென்றும், எல்லோருக்கும் சட்டப்படி ஒரே மாதிரியான நீதியும் பாதுகாப்பும் கிடைக்குமென்றும் திறமையான இந்தியர்களுக்கு எவ்விதப் பாகுபாடுமின்றி அரசாங்க உத்தியோகங்கள் வழங்கப்படுமென்றும் இப்படிச் சில கருத்துக்கள் காணப்பட்டன.

இந்தப் பிரகடனம் விக்டோரியாவின் பரந்த மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது. பிற்காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டங்களில் இந்தியர்களுக்கு அரசாங்க நிருவாகத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பும் உரிமையும் அதிகரிக்கப்பட வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானங்களின் பேரில் பேசியவர்கள் இந்தப் பிரகடனத்தைத் தங்கள் கோரிக்கைக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டினர்.

விக்டோரியாவைப் போல் நீண்ட காலம் அரசாண்ட ஒருசிலரையே உலக சரித்திரத்தில் காண முடிகிறது. இவள் மொத்தம் அறுபத்து மூன்று வருஷ காலம் ஆண்டாள். இவள் ஆட்சியில் வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா ஆகிய எல்லாம் உற்சாகத்தோடு கொண்டாடப்பட்டன. 'விக்டோரியா சகாப்தம்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இவளுடைய ஆட்சி சிறப்புடையதாயிருந்தது. 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை' என்ற வாசகம் எழுத்துக்கு எழுத்து உண்மையாக இருந்தது.

மற்றும் இவளுடைய ஆட்சி காலத்தில் தான் பாமர்ஸ்டன், டிஸ்ரேலி, கிளாட்ஸ்டன் போன்ற அரச தந்திரிகள் பொறுப்பான பதவிகளில் இருந்து கொண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குப் பெயரும் புகழும் ஏற்படும்படி செய்தனர். ஆங்கில மொழி உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரவத் தொடங்கியது. டென்னிஸன், வொர்ட்ஸ் வொர்த், தாக்கரே போன்ற மகா மேதைகள் மூலம் ஆங்கில இலக்கியம் வலிவும், பொலிவும் பெற்றது. பிரிட்டிஷ் மக்களுடைய நடை உடை பாவனைகளில் கண்ணியமும் நிதானமும் நிரம்பியிருந்தன.

விக்டோரியா ஒரு பெரிய சாம்ராஜ்யத்துக்குத் தலைவியா யிருந்தது போல் ஒரு பெரிய குடும்பத்துக்கும் தலைவியாயிருந்தாள்: இவளுக்கு மொத்தம் ஒன்பது குழந்தைகள். இவளுடைய நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் மட்டும் அதாவது இவளுடைய பேரன் பேத்திகளுக்குப் பிறந்தவர்கள் மட்டும் மொத்தம் முப்பத்தேழு பேர். இவளுடைய பெண் வயிற்றுப் பேரன்மார்களில் ஒருவன் தான் முதல் உலக மகா யுத்தத்தின்போது ஜெர்மனியை ஆண்ட வில்லியம் கெய்ஸர்.

விக்டோரியா 1901ஆம் வருஷம் ஜனவரி மாதம் இருபத்திரண்டாம் தேதி எண்பத்திரண்டாவது வயதில் தனது இறுதி யாத்திரைக்குப் புறப்பட்டு விட்டாள். இந்த யாத்திரையைத் தொடர்ந்து சென்ற ஊர்வலத்தில் ஐரோப்பாவை ஆண்டு வந்த அரச வமிசத்தினர் பலரும் காணப்பட்டனர். இவர்கள் அத்தனை பேரும் இவளுடைய சந்ததியினரே.

விக்டோரியாவின் ஆட்சியை, 'கருணையும் கண்டிப்பும் கலந்த ஆட்சி' என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

'மிலியனரை மணப்பது எப்படி' என்ற படத்தில் நடித்த மெரிலின் மன்ரோவை மிலியன் டாலர்களின் அதிபதியான ஒருவர் நிஜமாகவே மணக்க முன் வந்தார். "நான் வெகு நாட்கள் வாழ மாட்டேன்; எனக்குப் பின் என் செல்வமெல்லாம் உன்னைத்தான் சேரும். என்னை மணந்து கொள்" என்றார் அவர். உண்மையான அன்போடுதான் இவ்வாறு கூறினார் எனினும் அந்த அன்பின் பிரதிபலிப்பைத் தன்னிடத்தில் மெரிலின் காண முடியாததால் மரியாதையுடன் அந்தக் கோரிக்கையை மறுதளித்து விட்டாள். உலகப் புகழ் பெற்ற மெரிலின் தன்னை அழகுப்படுத்திக் கொள்வதற்காக செலவழித்த தொகை எவ்வளவு தெரியுமா? ஒரு வாரத்துக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் !



RFY.19 TAM
பினிக்ஸ் ஆடைகள்
நவநாகரீகக் குறிப்புகளிலே
முதலிடம்பெறுகின்றன.
வாயில்கள் ● பாப்ளின்கள் ● ஸூட்டிங்குகள்
பினிக்ஸ்
மில்ஸ்
ஒரு ரூயா
ஸ்தாபனம்



(1) திரு ஆல்பர்ட் ஜேகதாஸனின் அறுபத்தோராவது பிறந்த தின விழா சென்ற மாதம் ஸ்ரீ ராஜாஜியின் தலைமையில் கொண்டாடப்பட்டது. (2) எடின்பரோ கலை விழாவில் பங்கு கொண்ட மிருதங்க வித்வான் பாலக்காடு ஸ்ரீ ரகு பி. பி. ஸி. நிகழ்ச்சியில் பேட்டி அளித்தார். (3) ஜனாதிபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன் சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலையை புதுடில்லி, சர்தார் சவுக்கத்தில் செப்டம்பர் 18-ந் தேதி திறந்து வைத்தார். (4) தென்னிந்திய வர்த்தக் சங்கத்தின் 55வது ஆண்டுக் கூட்டத்தில் எம்.வி.டி. முத்தய்யா பேசுகிறார். (5) கிருஷ்ணகான சபா சீசனில் உஸ்தாத் அப்துல் ஹலீம் ஜாபர் கானின் சித்தார் கச்சேரி. (7) ஆலத்தூர் சகோதரர்களுக்குப் பாலக்காடு மணியும் அவர் குமாரர் ராஜாமணியும் மிருதங்கம் வாசித்தனர். (6) திருவல்லிக்கேணி திருப்புகழ் சபையின் ஏழாவது ஆண்டு விழா திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயரின் தலைமையில் நடைபெற்றது. (8) சமீபத்தில் சமாதியடைந்த சிவானந்த சரஸ்வதிக்குச் சென்னையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.





கலை வளர்க்கும் கோயில்கள்

குடும்பக் கலைக் கல்லூரி


எல்லோர் வீடுகளிலும் ஒரே காலத்தில் நவராத்திரி விழாக் கொண்டாடப்பட்ட சென்ற ஆண்டில் நான்கைந்து நண்பர்கள் வீட்டுக்குப் போக நேர்ந்த போது அவர்கள் வீடுகளில் வைக்கப் பட்டிருந்த கொலுவை யும் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு வீட்டில் 'பார்க்' நிர்மாணிக்கிறோம் என்ற சாக்கில் அந்த வீட்டுப் பெண்கள் ஊரில் உண்டான இலை, குழை, தழைகளைக்கொண்டு வந்து நிரப்பிப் பொம்மைகளை யெல்லாம் அவைகளில் ஒளித்து வைக்க முயன்றிருந் தார்கள். கொலு பார்க்கும் உணர்ச்சி ஏற் படுவதற்குப் பதிலாக ஏதோ மேட்டுப் பாளை யம் கூனூர் ரயிலில் பிரயாணம் செய்யும் உணர்ச்சிதான் ஏற்பட்டது. ஜன்னல் வழி யாகப் பச்சைப் பசேரென்ற புதர்களையும் மரங்களையும்தானே பார்க்க முடியும்!

மற்றொரு நண்பர் வீட்டில் பொம்மைகள் மயிலாப்பூர் அறுபத்தி மூவர் உற்சவத்தை நினைவூட்டின: அத்தனை நெரிசல்!

இன்னொருவர் வீட்டில் நடுப் படியில் சித்திரகூடக் காட்சியைச் சித்திரிக்க முயன் றிருந்தார்கள். ஜனநாயக ரீதியாக எல்லா பொம்மைகளுக்குமே சமத்துவம் கொடுக்க நினைத்தார்களோ, என்னவோ? சித்திர கூடத்திலிருந்த இலக்குவன் பொம்மைக்குத் தோளோடு தோளாக ஒரு போலீஸ்காரர் பொம்மையும் இருந்தது. பக்கத்தில் குடு குடுப்பைக்காரனும் எட்டிப் பார்த்தான்.

ஒரு நண்பர் வீட்டில் மாத்திரம், கொலு வைப் பார்த்த மாத்திரத்திலேயே மனத்தில் இதமான உணர்ச்சி பரவியது. இத்தனைக்கும் இடமும் சிறியது. பொம்மைகளும் எண்ணிக் கையில் குறைவு. ஆனால் அவைகளை அழகு பட இடம் விட்டு வைத்திருந்த விதம் ரம்ய மாக இருந்தது. ஒரு கறுப்பு திருவண்ணா மலைப் பிள்ளையாரை வைத்து அதன் பின்னால் பிளாஸ்டிக் சாதனங்களைக் கொண்டு ஒரு அழகிய சிறு மரக்கையும் வைத்திருந் தார்கள். பிள்ளையாரையும் மரத்தடியையும்



திரு அவிநாசிலிங்கம்

சம்பிரதாயப்படி இணைத்தது கற்பனைச் செறிவைக் காட்டியதோடு இயற்கைக்கு ஒட்டியும் இருந்தது.

பாராட்டுதல்களுக் குப் பாத்திரமான நண்பர் பெருமிதத் துடன் 'எல்லாம் என் பெண்ணின் ஏற்பாடு! அவள் குடும்பக் கலைக் கல்லூரி மாணவியல் லவா?' என்றார்.




திருமதி ராஜம்மாள் தேவதாஸ்

'கல்லூரியில் கொலு வைக்கக் கூடச் சொல் லித் தருகிறார்களா என்ன?' என்ற கேள் விக்கு 'நவராத்திரி யின் போது மாத்திரம் பொம்மைகளைக் கொண்டு அழகு படுத்த அவர்கள் சொல்லிக் கொடுக்க வில்லை. குடும்ப வாழ் க்கையே அழகு படுத் தும் கலையைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதில் வெகு சிறு பகுதி இந்தக் கொலு' என்ற நண்பரின் பதிலுக்குப் பூரணப் பொருள் அப்போது விளங்கவில்லை.

ஆனால் கோவையில் உள்ள ஸ்ரீ அவிநாசி லிங்கம் குடும்பக் கலைக் கல்லூரிக்குள் நுழைந்து பாட திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொண்டபோதுதான் முன்பு நண்பர் சொன்ன பதிலின் முழுப் பொருளும் புரிந்தது. ஆம்! அங்கு குடும்ப வாழ்க்கையை, எந்த நிலையி லும் இன்பகரமாக நடத்த உதவும் கலையைத் தான் போதிக்கிறார்கள்.

பொறியியல் படித்த மாணவனோ, மருத் துவம் படித்த மாணவனோ, தன் வாழ்க்கை வளம் பெற ஓர் உத்தியோகத்தை நாடிப் போய் அதில்தான் கற்ற வித்தையைக் காண் பித்துச் சேவை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் குடும்பக் கலைப் பொறுப்பை மேற் கொண்ட மாணவிக்கோ, அந்த வாய்ப்பு அவளைத் தேடி வருகிறது. தன் குடும்பத்தை அழகுற நிறைவு பெற நடத்தும் வித்தையை

கம்பீரமாக உயர்ந்து நிற்கும் பிரார்த்தனை மண்டபம்





அறுசுவையுண்டி தயாரிக்கிறது

அவள் கற்றுக் கொண்டிருப்பதால் அவள் வீட்டிலும் வாழ்க்கையிலும் இனிமை கமழுகிறது. அதனால் அக்கம் பக்கத்தவர்களும் அவளைப் பின்பற்றத் தொடங்குகிறார்கள். விளைவு! சமுதாயமே நலம் பெறுகிறது.

கோவை நகரில், 1957ம் ஆண்டில் புதுமுக வகுப்புடன் துவங்கப்பட்ட ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல்கல்லூரி இன்று அதேகலையில் ஆராய்ச்சிப் படிப்புக்கான வசதிகளைக் கொடுக்கும் பூரணத்துவம் பெற்ற குடும்பக் கலைக் கல்லூரியாகத் திகழ்கிறது. பொருளாதாரம், கணிதம், இந்திய சங்கீதம் ஆகியவற்றுக்கான பட்டப் படிப்பு வசதிகள் இருந்த போதிலும், பட்டப் படிப்பிலோ, ஆராய்ச்சிக்கான எம். எஸ்ஸி. வகுப்புக்களிலோ, குடும்பக் கலை முக்கியத்துவம் பெறுகிறது.

நாட்டின் வளர்ச்சிக்குத் தொழில் துறை முன்னேற்றமும் பொருளாதார அபிவிருத்தியும், விஞ்ஞான அறிவும், அளவுகோல்களாகத் திகழ்கின்றன என்பது உண்மைதான். ஆனால் இவற்றுக்கெல்லாமான அடிப்படை ஊக்கமும் ஆர்வமும் தனி மனிதனின், மனத்தில் நிலவும் சந்தோஷத்திலும் நிம்மதியிலும்தான் இருக்கின்றன. அவனுடைய குடும்பம் சீராக நடக்குமானால் அவன் உழைப்பில் விசேஷ பலன் இருக்கும். அப்படிச் சீருடன் குடும்பத்தை நடத்தும் வழியைப் பெண் இனத்துக்குப் போதிக்கும் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பெருமைப்படுவதில் தவறு இல்லையே! கலைகளுக்கெல்லாம் ஆதாரமாக விளங்கக் கூடிய அடிப்படைக் கலையே இதில் அடங்கியிருக்கிறதே!

புதுமுக வகுப்பில் நுழைந்தவுடனேயே, மூன்றாவது பிரிவில் இதர இரண்டு பாடங்களுடன் வீட்டுக் கலை **(House hold Arts)** பயிலும் வாய்ப்பை அளிக்கிறார்கள். புதுமுக வகுப்பைத் தாண்டி, மூன்று வருட பட்டப் படிப்புக்கான பி. எஸ்ஸி. வகுப்பில் அடி எடுத்து வைத்ததும் உணவும் உணவுச் சத்தும் **(Food and Nutrition)** வீட்டு நிர்வாகம் **(Home Management)** துணி தயாரிப்பு **(Clothing and Textiles)** குழந்தை வளர்ச்சியும் மனோதத்துவமும் **(Child development and Psychology)** ஆகிய நான்கு பாடங்களில் விசேஷப் பயிற்சி பெறலாம்.

இந்தப் பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு, விரிவாக, வீட்டு நிர்வாகம் **(Home Management)** அல்லது உணவும் அதன் போஷாக்குச் சத்தும் **(Food and Nutrition)** என்ற பாடங்களில் ஆராய்ச்சி செய்யவும் வகுப்புகள் உண்டு.

ஆராய்ச்சி மாணவிகளுக்கான உணவு தயாரிப்புப் பரிசோதனைச் சாலையைப் பார்த்து விட்டு வெளியே வந்தபோது வியப்புணர்ச்சியுடன் போட்டிப் போட்டுக் கொண்டு பெருமூச்சும் வந்தது. 'ஆஹா! நம் வீட்டிலும் இப்படி ஒரு சமையலறையை வைத்துக் கொள்ள முடிய வில்லையே' என்ற ஏக்கம் பரவியது. இருபத்தைந்து சதுர அடிக்கும் குறைவான இடத்தில் அடுப்பு, அம்மி, ஆட்டு உரல், சாமான்கள் வைத்துக் கொள்ளும் ஷெல்ப் எல்லாவற்றையும் எவ்வளவு கச்சிதமாக அமைத்திருக்கிறார்கள்! ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவிக்கும் இப்படி ஒரு சமையல் கட்டுக் கொடுத்து உணவு தயாரிக்கும் வழியைச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவிகள், பிற்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் போது, 'ஆஹா! நம் கல்லூரி பரிசோதனைச் சாலையில் உள்ள அடுக்களையை அப்படியே ஹனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கி வந்தது போல் தூக்கிக் கொண்டு வந்திருக்கலாமே' என்று நினைத்துக் கொண்டாலும் ஆச்சரியமில்லை. அவ்வளவு பிரமாதம். 'சமையல் செய்வதா? அது எனக்குத் தெரியாது' என்று முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொள்ளும் நவநாகரிக நாரீமணிகளுக்குக்

தையல் கலையையும் கற்கிறார்கள்



கூட, அந்தக் கலையில் ஆர்வத்தைத் தோற்று விக்கும் இந்த இடம்.

ஒரு ஜாதிக்காய்ப் பெட்டி, கொஞ்சம் வைக்கோல், ஒரு சிறு கோணிப் பை, இவ்வளவுதான். இவை புரியும் அற்புதமோ அபாரம்! அடுப்பில் சாதம் கொதிக்க ஆரம்பிக்கும்போது, இது தன் சேவையை அளிக்க முன் வருகிறது. அப்படியே கஞ்சியை வடிக்காமல், சுற்றி வர வைக்கோல் போட்டு நிரப்பப்பட்டிருக்கும் ஜாதிக்காய்ப் பெட்டிக்குள் வெண்கலப் பானையைத் தூக்கி வைத்து விட்டு வைக்கோல் நிறைந்த கோணிப் பைத் தலையணையால் மூடி வைத்து விட்டு, அதைச் சற்று மறந்து, எரிந்து கொண்டிருக்கும் அடுப்பை மற்றப் பதார்த்தத் தயாரிப்புக்களுக்கு உபயோகப்படுத்தலாம். வைக்கோல் பெட்டி (Hay Box) சூட்டைக் குறைக்காமலும் வெளியே விடாமலும் பாதுகாத்துக் கொள்வதால், சாதம் தானாகவே வெந்து, கஞ்சியையும் உள்ளே இழுத்துக் கொண்டு மல்லிகைப் பூவாக மலர்ந்து விடுகிறது. கஞ்சியிலிருக்கும் உணவுச் சத்து வீணாவதில்லை. அடுப்பின் உதவியும் குறுகிய காலத்தில் நிறையக்கிடைக்கிறது. இந்தக் கல்லூரியில் பணியாற்றும் பல ஆசிரியைகள் தங்கள் வீடுகளிலேயே இம்முறையை அமுலுக்குக் கொண்டு வந்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.

இந்தச் சூடு பாதுகாப்புச் சாதனத்துடன் சரியான போட்டி போடும் வகையில் ஒரு குளிர் சாதனத்தையும் இந்தக் கல்லூரியின் ஆராய்ச்சித் துறை கண்டு பிடித்துக் கொடுத்திருக்கிறது. 'ஜனதா ரிப்ரிஜிரேடர்' என்று குறிப்பிடப்படும் இந்தப் புதுமைத் தயாரிப்புக்கு நூற்றுக்கணக்கில் முன்பணம் கொடுத்து அப்புறம் வாழ்நாள் முழுதும் தவணைப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு மூன்று ரூபாய் செலவில் இரண்டு மண் பானைகள், மூடிகள், தண்ணீர் முதலியவற்றைக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட இந்தக் குளிர்ப் பெட்டியில் கறிகாய்கள் ஐந்தாறு நாட்கள் வரை புதுமை கெடாமல் இருக்கின்றனவாம்!

குடும்பக் கலை மாணவிகளுக்கு நேரடிப் பயிற்சி அளிக்கும் முறைகள் கவனத்தைக் கவருபவையாக இருக்கின்றன. கல்லூரியிலேயே ஒரு பகுதியைச் சமையல் கட்டுடன் இணைத்து வீடாக மாற்றி அதில் மாணவிகளைக் குழுக்கள் குழுக்களாக இரண்டு வார காலம் தங்கச் செய்கிறார்கள். அங்கு நாற்காலிகள், மேஜை, படுக்கை, சமையல் பாத்திரங்கள், மற்ற உபகரணங்கள் எல்லாம் இருக்கின்றன. இரண்டு வார காலமும் ஐந்தாறு மாணவிகள்கொண்ட குழு அங்கேயே தங்கி வசிக்க வேண்டும். வீட்டு வாழ்க்கையை நடத்தும் முறையில் எவ்வளவு தூரம் அந்த மாணவிகள் தங்கள் கலையுணர்ச்சியைக் காண்பிக்கிறார்கள் என்பதை ஆசிரியைகள் பரிசோதிக்கிறார்கள். வருங்காலக் குடும்ப வாழ்க்கையில் வீட்டைச் சீராக வைத்துக் கொள்வதற்கான அஸ்திவாரம் இந்த வாய்ப்பிலேயே அமைந்து விடுகிறது.

குழந்தை வளர்ச்சி பற்றியும், குழந்தைகளின் மனோதத்துவத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள உதவும் தொழில் பட்டறை இந்தக் கல்லூரியின் பிரத்தியேக அம்சம். மாதிரிப் பொருள்களை உபயோகிக்காமல் அசல் பொருள்களையே உபயோகிக்கிறார்கள். இந்தக் கல்லூரியின் வட்டத்துக்குள்ளேயே இரண்டரை வயதிலிருந்து ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றை நடத்துகிறார்கள். சுமார் முப்பது குழந்தைகளுக்கு அவர்களுடைய மன வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையில், ஆகாரமும், விளையாட்டுப் பொருள்களும் கொடுத்து அவர்களுடைய சுபாவத்தை ஆராய்கிறார்கள். சாதுக் குழந்தை, முரட்டுக் குழந்தை, மழலை பேசும் சிறுவன், வெடுக்கென்று பேசும் சிறுமி, எல்லாருமே தங்கள் தங்கள் துணிகள், சிலேட்டுப் பலகைகள், பந்துகள் முதலியவற்றை அந்தந்த இடத்தில் ஒழுங்காக வைப்பதோ, பாதரட்சைகளை வரிசையாக வெளியே கழற்றி வைத்து விட்டு உள்ளே போவதோ கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

கல்லூரி வட்டத்துக்குள் நுழைந்தவுடன் பார்வையைக் கவர்வது புதிதாக எழுப்பப்பட்டுள்ள பிரார்த்தனை மண்டபம். எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சில நிமிடங்கள் போய் நின்றால் போதும்: அமைதி பெறக் கூடிய அற்புதச் சூழ்நிலை.

கலைமகள் இல்லம், திருமகள் இல்லம் என்ற பெயர்களுடன் இரு ஹாஸ்டல் கட்டடங்கள் இந்தக் கல்லூரி மாணவிகளுக்கு வசதியான இருப்பிடத்தை அளிக்கின்றன. பழக்க வழக்கங்களுக்கு மெருகு கொடுக்கும்படியான கட்டுப்பாடுகள் இங்கு அமுலில் இருக்கின்றன.

இந்தக் குடும்பக் கலைக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றுபவர் டாக்டர் திருமதி ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள். பரோடா பல்கலைக் கழகத்திலும் மத்திய உணவு விவசாய அமைச்சுத் துறையிலும் பணியாற்றி அநுபவம் பெற்றவர். அமெரிக்க நாட்டில் ஒஹியோ மாகாணப் பல்கலைக் கழகத்தில் பயின்று டாக்டர் பட்டம் பெற்றவர்.

இந்தக் கல்லூரியைப் பார்க்கப் போயிருந்த போது முதல்வர் அவர்களைப் பார்த்துப் பேச வாய்ப்புக் கிட்டவில்லை. ''இன்று என்ன தேதி!.... ஆம்! இந்த நேரத்தில் அவர்கள் வாஷிங்டனிலிருந்து லண்டனுக்குப் பறந்து கொண்டிருப்பார்கள்'' என்றார் கல்லூரி சிப்பந்தி ஒருவர். திருமதி ராஜம்மாள் தேவதாஸ், தமக்குக் கிடைக்கும் அகில உலக அநுபவங்களையும் மனை இயல் மாணவிகளுடன் பகிர்ந்து கொள்கிறார். அவருடைய மாணவிகள் கொடுத்து வைத்தவர்கள்.

கல்லூரி ஸ்தாபகர் திரு அவினாசிலிங்கம் அவர்களையே சந்தித்து மகிழ்ச்சியைப் பங்கிட்டுக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

திரு அவினாசிலிங்கம் அவர்களின் இந்த முயற்சி — பொருளாதாரம், விஞ்ஞானம், நுண் கலை ஆகியவற்றின் இணைப்பில் விளையும் குடும்பக் கலை பயிற்சி — குடும்பங்களில் இன்பம் நிறையச் செய்து அதன் மூலம் சமுகத்தை நிறைவுறச் செய்யும் ஒரு சிறந்த பணி.

'மனை இயல்' என்பது ஏட்டோடு நிற்கும் கலையல்ல! அது வீட்டோடு ஒன்றி அதைப் பிரகாசிக்கச் செய்யும் கலை. நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத கலையுங்கூட!



ஒரு சின்ன தமாஷ் செஞ்சேன்!

'வீல்'னு கத்தினேன்.

புரண்டு புரண்டு அழுதேன்.

மொகம் செவந்து போச்சு!

தந்திரம் பலிச்சுது. ருசியான

க்ளாக்ஸோ—குழந்தைகளின்

உணவு—கெடச்சுது.

அதான் என் ஆகாரம். அதான்

எனக்கு ரொம்ப வேண்டியது

அதைவிட மட்டமா எதையும்

வாங்கிக்க மாட்டேன். என்

இஷ்டப்படிதான் அம்மா நடந்துப்பா.

இல்லேன்னு, சும்மா இருப்பேனு?

தாய்ப்பாலில் உள்ள எல்லா
நல்ல அம்சங்களும் க்ளாக்ஸோ
வில் இருக்கின்றன....ஆம்!
உங்கள் குழந்தை பலசாலியாக
வளர அவசியமான
யாவுமே உள்ளன. எங்கும்
தாராளமாகக் கிடைக்கிறது.
இலவசமாக 'க்ளாக்ஸோ குழந்
தைப் புத்தகம்' (தமிழ்) பெற
விரும்புவோர் (தபால் செலவுக்
காக) 50 நயா பைசாவுடன்,
'க்ளாக்ஸோ, வுட்ஸ் ரோட்,
சென்னை-2' என்ற
விலாசத்திற்கு எழுதவும்.



GLY-3-TAM

Glaxo

க்ளாக்ஸோ—குழந்தைகளுக்கான மிகச் சரியான உணவு.

கல்யாணியின் கணவன்

ஆற்று வெள்ளத்தில் மூழ்கிவிட்ட கல்யாணியைக் கதிரேசன் என்னும் வாலிபன் காப்பாற்றுகிறான். அதிலிருந்து கல்யாணிக்கு அவன்



மேல் காதல் உண்டாகிறது. ஓர் அநாமதேயக் கடிதம் கல்யாணியைப் பற்றி இழிவாகக் கூறிக்கதிரேசனுக்குவருகிறது. அதன் விளைவாகக் கதிரேசன் ஒரு பாழடைந்த பங்களாவுக்குச் சென்று இருட்டில் முன் பின் தெரியாத ஒருவனோடு போரிட நேர்ந்து கொலைக் குற்றத்துக்கு ஆளாகிறான். கல்யாணியின் திருமணத்தன்று பகிரங்கமாக அவன் நடத்தையைப் பற்றி இழிவாகப் பேசிய கதிரேசன் போலீசாரைக் கண்டதும் ஓடி ஒளிகிறான். கடைசியில் உண்மைக் குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறான்.

கதையில் புதுமையும் இல்லை; புரட்சியும் இல்லை. சிவாஜி கணேசன் அரிசி களைந்து உலையில் இடுவதையும், சரோஜா தேவியின் புடவையை உலர்த்துவதையும், காய் நறுக்குவதையும், வண்டி ஓட்டுவதையும் புதுமையாகக் கருத முடியுமா? ''இரத்த திலக''த்தில் பார்த்த சிவாஜி கணேசனைக் கல்யாணியின் கணவனாகப் பார்க்கும் போது அநுதாபம்தான் உண்டாகிறது.

''மலைக் கள்ள''னைத் தயாரித்துப் புகழ்பெற்ற பட்சிராஜா பிலிம்சார் இந்தப் படத்தைத் தயாரிக்க முன்வந்ததை நினைக்கப் பரிதாபமாயிருக்கிறது!

எம். ஆர். ராதா, எஸ். வி. ரங்காராவ் ஆகியவர்களின் பாத்திரங்களும் சுவாரஸ்யமாக இல்லை. டி. ஆர். ராமச்சந்திரன் ஏதோ வருகிறார்; என்னவோ நடிக்கிறார். ஹாஸ்ய நடிகர் ராமாராவும் சோபிக்க வில்லை. திரைக் கதை எல்லாரையும் ஒரேயடியாகச் சறுக்கி விட்டது.

சரோஜாதேவி ஆணுடையில் எடுப்பாகத் தோன்றி, ''ஸார், ஸார்!'' என்று சிவாஜியிடம் குழைந்து தியேட்டரில் கலகலப்பை உண்டாக்கிவிடுகிறார்!

காதல் கட்டங்களில் ரொம்ப ரொம்ப நெருங்கி நடிக்கும் காரணத்தினலோ என்னவோ, சரோஜாதேவி, சிவாஜி இருவருமே இப்படத்தில் நடிப்பின் சிகரத்தை எட்ட முடியவில்லை.

விவசாயத்தில் ஆர்வம் கொண்ட பட்டதாரி திடீரென்று குறுக்கிட்ட காதலிக்காக நவநாகரிக வாலிபனாக மாறி விவசாயத்தை ஒரேயடி



பாக உதறி விட்டு அவன் வீட்டிலேயே வேலை பார்ப்பதும், தன் காதலி வேறொருவனுடன் தொடர்பு கொண்டவள் என்பதை




அநாமதேயக் கடிதத்தின் மூலம் அறிந்தவன் உடனே அவளை வெறுத்து ஒதுக்காமல், மண மேடையில் அவள் பக்கத்தில் அமர்ந்து வேதனைப்படுவதும் விசித்திரமா யிருக்கிறது!

தூக்க மருந்தைக் குடித்த கதிரேசன் சைக்கிள் சவாரியில் தூங்கி விழும் கட்டத்தில் திரைக் கதை விழித்துக் கொண்டு கொஞ்சம் சுறுசுறுப்படைகிறது!

''ஆசைகொண்ட மனம் அதோ அதோ என'' என்னும் பாட்டு நன்றாயிருக்கிறது.

''கல்யாணியின் கணவன்'' சாதாரணக் கணவன் தான்! — காந்தன்



உயிர்ப் பொம்மை

வை. சுப்பிரமணியன்

அவள் படித்துக் கொண்டிருந்த ஒரு கதையில் ஒரு பெண்ணின் பாதங்களை வருணித்திருந்தது. வருணனை சற்று மிகைப்பட்டிருந்தது. 'செம்பஞ்சுக் குழம்பு கொண்டு இழையிட்டாற்கூட இத்தனை நளினம் வாய்த்திருக்குமோ என்னவோ!' என்று மலைத்திருந்தார் ஆசிரியர். மிகையை எண்ணிப் புரிந்து கொண்டே புத்தகத்தினின்றும் அவள் கண்களை எட்ட எடுத்தாள். தன் பாதங்களே அவள் பார்வையில் பட்டன. மண்டியிட்டபடி அமர்ந்திருந்ததில் அவளது இரு பாதங்களும் ஒருமிக்க இணைந்து தெரிந்தன. அவற்றிலும் சிவப்பு பூசியிருந்தது. வெறும் காவிகொண்டு பூசியதுதான். ஆனாலும் அதன் நளினத்தை அவளே ரசிக்கத் தொடங்கினாள்.

'அவர் கைபடப் பூசியது இன்னும் மறையவில்லையே.... இரண்டு எண்ணெய்க் குளிகளில் மறைந்து விடலாம்... கல்யாணக் கோலம்கூடப் பழசாகிக் கொண்டு வருகிறது. அவர் இன்னும் புதியவராகவே இருந்து கொண்டிருப்பார் போலிருக்கிறதே....' — கதையில் வந்த பெண்ணின் வருணனையிலின்றும் தன் பாதங்களுக்குத் தாவி, தன் மனத்தில் நினைவு கவிந்துள்ள அந்தரங்கப் பகுதிக்குப் போய்விட்டாள் அவள்.

'நலங்கின் போது அவரை அவரது விட்டார் படுத்திய பாடும், பதிலுக்கு அவர் என்னிடம் பண்ணிய கோட்டாவும்.... அப்பப்பா! சொல்லி முடியாது.


சொந்தக்காரி ஒருத்தி. 'அவளைப் பெயரைச் சொல்லிக்கூப்பிடடா, நலங்குக்கு' என்றதும் அவர், 'கூப்பிடுகிறேனே! இதில் என்ன விந்தை உங்களுக்கு! வஞ்சு, வஞ்சு! வா, எழுந்து வா! நலங்காம்! நம்மை வைத்து விளையாடப் போகிறார்கள், வா!' என்று எப்படித்தான் கலகல வென்று கொட்டினார்!.... அப்புறம், புதனோடு புதன் பதினைந்து, வியாழன் பதினாறு வெள்ளி பதினேழு நாட்களாகி விட்டன.... இப்போது எங்கே அந்தக் குரல்?....'

அந்தக் குரலுக்காக வஞ்சு ஏங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குரல் மாடியில் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆங்கில, தமிழ் டிக்டேஷன்களுக்கு நடுவிலும் டைப் ரைட்டிங் யந்திரங்கள் பலவற்றின் 'கடகட' வென்ற ஓசைக்கு நடுவிலும் கேட்கும். அவள் காதுகளில் அந்தக் குரல் கேட்காது. சாப்பாட்டு வேளைகளில் கீழிறங்கிவருவது தவிர மற்றப்பொழுதுகளில் அந்தக் குரலுக்குரிய ராஜநாராயணன் கீழே வருவது கிடையாது. எத்தனை தடவைகள் காப்பி வேண்டியிருந்தாலும் இன்ஸ்டிடியூட் பையனைக் கீழே அனுப்பி வாங்கிவரச் சொல்வான். இரவு வேளைகளில் வஞ்சு தனியாக இருப்பாளே என்றுகூட அவன் நினைத்ததாகத் தெரியவில்லை.

இந்தத் தனிமைகூட நான்கைந்து நாட்களாகத்தான் வஞ்சுவுக்கு ஏற்பட்டிருந்தது. கல்யாணம் முடிந்து அவளைக் கொண்டு வந்து கணவன் வீட்டில் விடுவதற்கு அவளுடைய மனிதர்கள் நாலைந்து பேர் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் பத்து நாட்கள் தங்கி விட்டுப் போனார்கள். அவர்களிடம்கூட ராஜா முகம் கொடுத்துப் பேசியதாகத்தெரியவில்லை.

வஞ்சுவின் நினைவுகள் இணைந்துத் தவளையின் மௌனமான பார்வையைப் போன் றவை. 'கல்யாண சமயத்தில் ஏதாவது முறைப் பிசகாக நடந்துகொண்டிருப்பார்கள் நம் வீட்டினர்; அதுதான் அவர் யாரிடமும் பேசவில்லை போல் இருக்கிறது' என்று நினைத்தாள்.

நினைவினூடே அவள் பார்வை வீட்டைச் சுற்றி ஓடியது. வீடு சுத்தமாக இருந்தது. அவள் வந்த பிறகு ஒன்றும் ஒழித்துப் பெருக்கிப் பிரமாதமாகச் செய்து விடவில்லை.... நிறையச் சாமான்கள் இருந்தும் இருப்பது தெரியாமல் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. அவருக்கு எல்லாம் துல்லியமாக இருக்க வேண்டும் என்பது இதிலிருந்தே தெரிந்தது. வீட்டில் அவரைத் தவிர வேறு மனிதர்களே கிடையாது. சில வருஷங்களுக்கு முன்புதான் உறவுகளை இழந்து அவரைத் தனிமையில் இருத்தியிருக்கிறது வீடு என்று கலியாணத்துக்கு முன் விசாரித்தவர்கள் யாரோ சொன்னார்களே.... ஆனால் அவர் உற



காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் பொக்கே
யின் தரம், ஒரு அழகுசாதன டால்க்...
ஒரு குழந்தைக்கான பவுடர்
இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின்
குளுமையான, பூவிதழ்போன்ற
மென்மையான ஸ்பரிசத்தை
நீங்கள் உணரும்பொழுது ஒரு
பூச்செண்டிற்குள் இருப்பது போலவே
தோன்றும். உடல் முழுவதும் தடவிக்
கொண்டு அதன் ஊற்றுப்பெருக்
கென எழும் புதிய நறுமணத்தில்
திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுட
னும் சுகமுடனும் வை
த்திருங்கள். காஷ்மீர்
பொக்கே, எந்த ஒரு
விசேஷ குழந்தைக்
கான பவுடரைப்
போலவே, மிருதுவும்
பட்டுப்போன்றது
மானது. நீங்கள் இரு
வருமே உபயோகிக்
கக்கூடிய அவ்வளவு
சௌகரியமான ஒரே
பவுடர்!



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB-6-19-TAM

வெல்லாம் இப்போது மாடியில் உள்ள அவருடைய இன்ஸ்டிட்யூட்டிலும் அதில் பயிற்சி பெறுபவர்களுடனும்தான். அப்படியிருந்தும் எப்படி இந்த வீட்டைத் துப்புரவாக வைத்திருக்கிறார்!....'

அன்று இரவு சாப்பிட வந்த போது வழக்கம்போல் மேலிருந்த மாடி அடைப்பைப் பூட்டிக் கொண்டு திரும்பிய ராஜா அப்படியே நின்றான். கூடத்திலிருந்த படங்களை யெல்லாம் ஒரு நீண்ட சுற்றில் பார்த்தான் அவன். பிறகு அவன் கண்கள் தாழ்ந்து சுழன்றன. சமையலறை நிலைப்படியில் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் வஞ்சு. சாயங்காலம் செய்து கொண்டிருந்த அலங்காரத்தின் மெருகு அழியாமல், உடலும் ஒரு சிறிதும் தெரியாமல், பதித்த இடத்தில் சிலை நிற்பது போல் நின்றாள் வஞ்சு. அந்த இடம் முழுவதும் மல்லிகையின் மணம் கமழ்ந்தது.

''வஞ்சு, ஏது இத்தனை மல்லிகைப் புஷ்பம்? வாங்கினாயா?'' என்று கேட்டான் ராஜா.

''ஆமாம்'' என்றாள் வஞ்சு.

''ஏகமாய் வாங்கியிருப்பாய் போல் இருக்கிறதே. ஒரு ரூபாய்க்கு இருக்குமா?''

வஞ்சுவின் முகம் ஒரு புன்னகையில் இன்னும் சற்று ஒளிர்ந்தது. ''இல்லை. இரவு நேரமானதால் மலிவாகக் கொடுத்தாள் பூக்காரி. நாலணாப் பூதான்.''

மீண்டும் அவன் பார்வை படங்கள் மீது சென்றது. எல்லாப் படங்களுக்குமாக இருபது முழம் பூ இருக்கும் போலிருந்தது. மணம் கிளுகிளுப்பைத் தாண்டிக் கிறுகிறுப்பு நிலைக்கு ஏறிக் கொண்டிருந்தது.

தலையைக் குனிந்தபடி ராஜா விரைவாகத் திரும்பிப் பக்கத்து அறைக்குள் நுழைந்து விட்டான். வஞ்சுவுக்கு அந்தப் பொழுதில் ஏற்பட்ட உணர்ச்சிக் கலப்புக்களைப் போன்று இதற்கு முன் ஏற்பட்டதில்லை. கணவன் தன்னிடம் பேசி விட்டதில் கண்ட வெற்றி, பிறகு பேச்சுக்கே ஒரு வெற்றி — இப்படி அவள் உணர்வுகள் பொங்கின. அவன் சாப்பிடும் போது அவள் கேட்டிருந்த 'போதும்—வேண்டாம், சரி' என்ற பல்லவிக்குப் பிறகு அவன் உண்மையாகவே அவளுடன் நேரில் நின்று பேசவல்லவா செய்திருக்கிறான்!

வெகு நேரம் இந்த உணர்வுகளைக் கட்டிப் பிடித்து மனசினுள் அடக்கிக் கொண்டு அப்படியே நின்றிருந்தாள் வஞ்சு. மணி ஒன்பதுக்கு முன்னால் ராஜா சாப்பிட்டு விடுகிற வழக்கம். ஒன்பதரைக்கான அரைமணியின் 'டொங்'கென்ற சப்தம் வஞ்சுவை விழிப்புறச் செய்தது. விடுவிடு வென்று எழுந்து சென்று அவனுடைய அறை வாசலில் நின்று ''சாப்பிட வரவில்லையா? நாழியாகிறதே'' என்று அவள் அழைத்தாள்.

ராஜா வெளியில் வந்து நின்று அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு, ''எனக்கு மல்லிகைப் புஷ்பமும் அதன் மணமும் பிடிக்கும் என்பது உனக்குத் தெரியுமா, வஞ்சு?'' என்று கேட்டான் ராஜா.

''தெரியாது; ஆனால் இப்போது தெரிந்து கொண்டேன்'' என்று சிரித்துக் கொண்டு கூறினாள் வஞ்சு.

சில விநாடிகள் மௌனமாக இருந்த பிறகு அவன் சொன்னான்: ''பிடிக்கும் என்பதோடு மட்டுமில்லை; நானும் நிறையப் புஷ்பம் வாங்கி இதே மாதிரிதான் படங்களுக்குப் போடுவேன்.....சரங்களை எப்படிக் கோத்துப் படங்கள் மீது போடுவேன் என்பதைத் தெரிந்து கொண்டு செய்த மாதிரி இருந்தது நீ செய்தது....'' என்று சொல்லிக் கொண்டு மீண்டும் படங்களைப் பார்த்தான் ராஜா.

''படங்களையே பார்த்துக் கொண்டிருந்தால் பசி....'' என்று வஞ்சு சொல்லி முடிக்கு முன்பு, ''எனக்குப் பசிக்கவில்லை, வஞ்சு! நீ சாப்பிட்டு விட்டு ஜாக்கிரதையாகக் கதவைப் போட்டுக் கொண்டு படுத்துக் கொள்'' என்று சொல்லி விட்டு, அடைப்பைத் திறந்து கொண்டு மாடிக்குப் போய்விட்டான் ராஜா.

வஞ்சுவை அழைத்துப் போவதற்கு அவள் தாயார் வந்திருந்தாள். கலியாணம் ஆன கையோடு கொண்டு வந்து விட்டு விட்டதால், இப்போது அழைத்துப் போய் ஒரு மாதம் வைத்திருந்து மீண்டும் கொண்டு விடுவதாகக் கூறினாள் அவள் தாயார். இதைச் சொல்லும் போது ராஜாவிடம் சொல்கிற சாக்கில் அவள் சுவரைப் பார்த்துக் கொண்டு பேசினாள். ராஜாவும் எதிரே இருந்த மேஜையைப் பார்த்துக் கொண்டு 'உம்' என்று சம்மதம் தெரிவித்தான். வஞ்சுவுக்கு இப்போது கணவனைப் பிரிந்து ஊருக்குப் போவதில் எழுபத்தைந்து சத விகிதம் விருப்பமில்லை. அவர்களிடையே உறவு பூக்கத் தொடங்கிய நிலையில் அந்த உணர்வுகளைத் துடைத்து எறிந்து விட மிகவும் கஷ்டமாக இருந்தது. இருபத்தைந்து சத விகிதம் வற்புறுத்திய ஊர் ஆசையே வெற்றி கொண்டது.

பத்து நாட்களாக இடைவிடாமல் கனத்த மழை பெய்து கொண்டிருந்தது. காணாமற் போன சூரியன் அகப்பட்டாற் போல் அன்று இளவெயில் கீழ் வானத்தைத் துல்லியமாக்கிக் கொண்டு படர்ந்தது. பத்து நாளைக்கப்புறம் அவர்கள் வீட்டு வாசலில் அன்று தபால்காரன் குரல் கொடுத்தான். மறு நிமிஷம் வஞ்சுவின் தாயார் ஒரு கடிதத்துடன் அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

''மாப்பிள்ளைக்கு உடம்பு சரியில்லையாம், வஞ்சு. அவருடைய நண்பர் ஒருவர் நம்மை உடனே வரச் சொல்லி எழுதியிருக்கிறார். கடிதம் எழுதி ஏழெட்டு நாட்கள் ஆகின்றன; தபால் போக்குவரத்தில் இடைஞ்சல் ஏற்பட்டு இன்றைக்குத்தான் வந்திருக்கிறது'' என்றாள் அவள் தாயார்.

வஞ்சுவின் இதயத்தில் சந்தடியேயின்றி ஒரு இடி இறங்கிய மாதிரி இருந்தது.

வீட்டு வாசல் முன் டாக்ஸியிலிருந்து இறங்கும் போதே வஞ்சுவுக்கு நெஞ்சில் சுருக்கென்றது. இன்ஸ்டிட்யூட் இருந்த மாடிக் கொட்டகை தாறுமாறாகக் காற்றில் விழுந்து பயங்கரமாகத் தெரிந்தது. உள்ளே ஹாலின் ஒரு மூலையில் ராஜா கட்டிலில் படுத்திருந்தான். அவனுடைய நண்பன் வெந்நீர் அடங்கிய பையினால் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தான். மௌனமாக அந்தச் சூழ்நிலையை அளந்தாள் வஞ்சு. டைப்ரைட்டிங் யந்திரங்கள்

பத்துப்பதினைந்தும், ஏராளமான பேப்பர்கள், மின்சார ஒயர்கள், ஸ்டூல்கள், நாற்காலிகள் என்று மாடி சாமான்கள் முழுவதும் கீழே அலங்கோலமாகக் கிடந்தன.

''என்ன அவருக்கு?'' என்றாள் வஞ்சு.

''ஒன்றுமில்லையம்மா. கடுமையான குளிர் ஜுரம் வந்து இப்போது தேவலை. மார்பில் சளி கட்டிக் கொண்டு இருக்கிறது. டாக்டர் கவனித்து வருகிறார்....'' என்றான் ராஜாவின் நண்பன்.

ஒரு வாரத்தில் ராஜாவுக்கு நன்றாக உடம்பு குணமாகி விட்டது. எழுந்து நடமாடத் தொடங்கினான். இன்னும் ஒரு வாரம் துணை இருந்த பிறகு வஞ்சுவின் தாயார் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றாள். வீட்டை வீடாக ஆக்குவதில் முனைந்தாள் வஞ்சு. அவனுக்குப் பிடித்த முறையில் துப்புரவு வேலைகள் தொடங்கின; கூடத்தில் மல்லிகை மணத்தது; இப்போது அவனுடைய அறைக்குள்ளும் நுழைய தைரியம் வந்து விட்டதால் அவள் அங்கிருந்த ஒரு புத்தர் சிலைக்கும்கூட மல்லிகைச் சரத்தை மாட்டி வைத்தாள். துறவியின் கழுத்தில் மல்லிகை எதற்கு என்பதைக் கூட அவள் யோசிக்கவில்லை. ராஜா இருக்கிற இடம் மல்லிகையில் மணத்தால் சரிதான்!

இன்ஸ்டிடியூட்டை மீண்டும் புதுப்பிக்க வில்லை ராஜா. முழுதுமாக மொட்டை மாடியாக்கி விட்டு மாலை வேளைகளில் அங்கே ஈஸிசேரைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொள்ளத் தொடங்கினான். பகல் வேளைகளில் வெளியில் சுற்றி விட்டு வருவது வழக்கமாகி விட்டது அவனுக்கு.

கணவனைப் பற்றிய விவகாரம் ஒரு புதிர் என்பதாக உணரத் தொடங்கினாள் வஞ்சு. அவன் வெளியே போயிருக்கிற போது அவன் அறையைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அங்கே புழங்குவதில் உரிமை கொண்டால் அவனுடனேயே நெருக்கம் கொண்டு விடுகிற மாதிரி எண்ணினாள் அவள்.

அன்று ராஜா வெளியில் சென்றிருந்த போது அவன் அறைக்குள் நுழைந்து அவனது மேஜை முன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் வஞ்சு. நாற்காலியை ஒரு முறை சுழல விட்டுப் பார்த்தாள்; தன் செய்கைக்கு அவளுக்கே சிரிப்பு வந்தது. ஒவ்வொரு சாமானாக மேஜையினின்றும் எடுத்துப் பார்த்தாள். நாள் குறிப்பில் மறு நாள் தேதியில் கன்னிமாரா லைப்ரரிக்குச் செல்ல வேண்டும் என்ற குறிப்புக் காணப்பட்டது. ப்ளாட்டிங் பேடை எடுத்து அதன் பின்புற மெத்தையைத் தொட்டுப் பார்த்து ரசித்தாள்; முன்புறம் திரும்பிய போது சில எழுத்துக்கள் ப்ளாட்டிங் பேப்பரில் தெரிந்தன. எழுத்துக்கள் முழுவதையும் பேப்பர் ஒற்றவில்லை; ஒற்றிய வரை புரியவும் இல்லை. மளமள வென்று அதை எடுத்துக் கொண்டு நிலைக் கண்ணாடியின் எதிரில் பிடித்துப் பார்த்தாள். எழுத்துக்கள் புரிந்தவரை ஒரே ஒரு வரி விளங்கிற்று:


'அவள் ஒரு மல்லிகை மலரைப் போல இருக்கிறாள்....'

வஞ்சுவின் நெஞ்சில் ஒரு சுடர் தெறித்தது. குற்றம் செய்த குழந்தையைப் போல முதலில் ப்ளாட்டிங் பேடை மேஜை மேல் கொண்டு வைத்து விட்டுத் தன் இடத்துக்குத் திரும்பினாள். ஏற்கனவே எண்ணங்கள் குவிந்திருந்த மனத்தில் இப்போது ஒரு புதிய வித்து வேறு சேர்ந்து கொண்டது. 'யார் அந்த மல்லிகை மலர் போன்றவள்?' என்ற வினாவின் உருவாக விரைவில் இதழ் விட்டு விட்டது அந்த வித்து.

சில தினங்களாக ராஜாவின் போக்கில் ஒரு மாறுதல் தென்பட்டது. வெளியில் செல்கிற நேரத்தை யெல்லாம் செலவிட்டு ஏதோ எழுதியபடி அறைக்குள் அடைபட்டிருந்தான் அவன். அன்று 'மாஸ்டர்' என்று அழைத்தபடி ராஜாவின் நண்பன் வந்தான். 'யாரது மாஸ்டர்?' என்று தன்னையே கேட்டுக்கொண்டிருந்த வஞ்சுவுக்கு ராஜாவின் மறுமொழி மூலம் அது யார் என்று தெரிந்தது. அவள் கணவனை எல்லாரும் மாஸ்டர் என்றுதான் அழைப்பார்கள் என்பது அன்றுதான் அவளுக்குத் தெரிந்தது.

''ஸ்டெனோகிராபர்ஸ் இன்ஸ்ட் ஆண்டு விழா இன்றைக்கு. உங்களைக் கூட்டிப் போகத்தான் வந்தேன்'' என்றான் அந்த நண்பன்.

இருவரும் சிறிது நேரத்தில் வெளியில் கிளம்பினார்கள். வஞ்சுவுக்கு எப்போதும் வாய்க்கும் தனிமை இப்போதும் வாய்த்தது. ராஜா வெளியில் சென்றால் அவளுக்குப் பிடிக்காது; ஆனால் இப்போது அவன் வெளியில் சென்றிருக்கிற நேரத்தில் அவனுடைய



ஏன் பெண்டெக்ஸ் ஸ்ட்ராப்புகள்

...ஏனென்றால், பல்லாண்டுகளாக
நடத்திய ஆராய்ச்சியின் பலனாகத்
தயாரிக்கப்பட்டது பெண்டெக்ஸ்.
நேர்த்தியான அதன் தோற்றம்,
தேர்ந்த வேலைப்பாட்டுடன்
தரத்திலும் சிறந்து விளங்குகிறது.
முற்போக்கான கலை நுணுக்கத்
திறனுடன் பலமாதிரி டிஸைன்களில்,
தங்கமுலாம் பூசிய, ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல், நைலான், பிளாஸ்டிக் மற்றும்
தோல் ஸ்ட்ராப்கள் கிடைக்கின்றன.

வாங்குவதற்கு முன்பு 'Bentex' மார்க்கை பார்த்து வாங்குங்கள்

CREATIVE UNIT

அறையை நோட்டம்விடச் சந்தர்ப்பம்கிடைத்திருக்கிறது என்று எண்ணி மகிழ்ந்தாள்.

இரவு வெகுநேரமாகியும் ராஜா வரவில்லை. வஞ்சுவின் மனசுக்குள் சில நாட்களாகவே தலையெடுத்திருந்த பய உணர்ச்சி இன்று அவள் உடலையே வியர்க்க வைத்துவிட்டது.

பன்னிரண்டு மணிக்கு ராஜா வந்து கதவைத் தட்டினான். முதல் தட்டல் கேட்டவுடனேயே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து வந்து கதவைத் திறந்தாள் வஞ்சு. அவள் மனத்துள் கவிந்திருந்தது போலவே வெளியில் இருள் இழுத்துக் கட்டிய கருந் திரை போல் காணப்பட்டது.

உள்ளே வந்த ராஜாவிடம் அவன் கொஞ்சமும் எதிர்பாராத முறையில் பேசினாள் வஞ்சு: ''என்னை இப்படித் தனியாக விட்டுப் போகாதீர்கள்; எனக்குப் பயமாக இருக்கிறது....''

''என்ன? ஏதாவது....'' படபடப்புடன் கேட்டான் ராஜா.

''எதுவும் நடக்க வில்லை. என்னை ஏன் இப்படித் தனிமையிலேயே ஒதுக்குகிறீர்கள்?'' என்று கேட்டாள் வஞ்சு. மனசில் ஒரு மூலையில் ஒரு வகைப் பயம் படரும் போதே இன்னொரு பக்கம் வேறொரு வகைப் பயம் தெளியத் தொடங்கியது.

''தனிமை என்ன வஞ்சு! நான் உன் சமீபத்தில் தானே இருக்கிறேன்!.... இன்றைக்குத்தான் இத்தனை நேரமாகி விட்டது. இனிமேல் ஆகாது. ..'' என்று சொல்லிக் கொண்டு அறையில் நுழைந்து விளக்கைப் போட்டான் ராஜா. வஞ்சு அவனைத் தொடர்ந்து அறைக்குள் சென்றாள்.

இருவரும் வெகு நேரம் வரை ஒன்றுமே பேச வில்லை. வஞ்சு வெளியில் சென்று ஹாலில் படுத்துக் கொண்டாள். ராஜா மேஜை முன் அமர்ந்து நிமிர்ந்து விட்டத்தைப் பார்த்தபடி வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். விளக்கை அணைத்து விட்டு, குளுமையான ஒளி பரப்பும் 'இரா விளக்'கைப் போட்டான். மேஜை மேல் கைகள் அளைந்த போது அவனுக்குச் சுருக்கென்றது. அவன் அன்று காலையில் வைத்து விட்டுப் போன சில காகிதங்கள் அப்படியே க்ளிப் செருகப்பட்டபடி—இருந்தன. அவற்றை எடுத்து மேஜை டிராய

நிமிஷக் கதைகள்

அவன் ஓர் இளைஞன். சிறந்ததோர் ஓவியக் கலைஞன். தன் சித்திரங்களுக்காக எத்தனையோ பரிசுகள் பெற்றிருக்கிறான்.

அவன் ஒரு பெரிய புதிய சித்திரம் வரைந்திருந்தான். பார்ப்பவர்களனைவரும் அதன் அருகில் மயங்கி நின்றார்கள். ஆனால் அந்த ஓவியத்தின் உட்கருத்தைத்தான் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''இதென்ன படம், அப்பா?'' என்று அந்த ஓவியனையே கேட்டார்கள்.

''என் மனைவியின் படம்!''

''மனைவியின் படமா? என்ன புதிர் போடுகிறாய்? இது பெண்ணோ, ஆணோ? எதுவுமே தலைகால் புரியவில்லையே!''

''உங்களுக்குப் புரிந்தது அவ்வளவுதான். பெண் என்பவள் ஒரு புதிர். அதிலும் என் மனைவி ஒருபடி மேல். எங்கள் இருவருக்கும் மணமாகி எத்தனையோ ஆண்டுகளாகின்றன. இன்றுவரை அவளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை! இந்தப் படமும் தான் அவளைப் போல் புரிந்து கொள்ள முடியாமல் இருந்துவிட்டுப் போகட்டுமே!'' என்றான்.



அவன் புதிதாக வரைந்தது சித்திரமா? அல்லது சாய மசியில் தோய்த்த பின் தன் பிரஷைக் கூர் செய்து கொள்ளுவதற்காக வைத்திருந்த அட்டையில் காணப்பட்ட உருவமா என்பதும் அவர்களுக்கும் புரியாப் புதிராயிருந்தது.

சர்க்கஸ் காட்சி ஒன்றில், அவிழ்த்து விடப்பட்ட சிங்கம் ஒன்று தனது முன்னங் காலைக் கையாக உபயோகப்படுத்தி, ரிங்மாஸ்டரின் வாயில், சாக்லேட் துண்டு ஒன்றைப் போட்டது. அதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

''இதென்ன பெரிய வித்தை?'' என்று மக்களின் மகிழ்ச்சியையும் மீறிக்கொண்டு ஒரு குரல் வந்தது. குரல் வந்த திக்கை ரிங்மாஸ்டர் உள்பட எல்லோரும் நோக்கினர். ''உங்களால் இந்த வித்தையைச் செய்ய முடியுமா?'' என்று கேட்டார் ரிங்மாஸ்டர்.

''ஏன் முடியாது?''

''எங்கே செய்து காட்டுங்கள், பார்க்கலாம்!'' என்று சவால் விட்டார் ரிங்மாஸ்டர்.

'பழக்கமில்லாத இந்தப் பித்துக்குளி இப்படிச் சிங்கத்தினிடம் போய் மாட்டிக் கொள்ளப் போகிறதே!' என்று பார்வையாளர்கள் அநுதாபப்பட்டார்கள்.

சொன்னவன் எழுந்தான். சிங்கக் கூட்டுக்குள் புகுந்தான். சிங்கம் போலவே சாக்லேட்டை எடுத்தான். ரிங்மாஸ்டரின் வாயில் திணித்ததோடுமட்டும் நிறுத்திக் கொள்ளாமல் தன் வாயிலும் ஒன்றைப் போட்டுக் கொண்டான். கூடியிருந்த மக்களிடையே கரகோஷம் எழுந்தது. வேஷம் புனைந்த சர்க்கஸ் கோமாளி அவன் என்னும் இரகசியம் அங்கு யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.



ரில் வைத்துப் பூட்டி விட்டு எழுந்து அறைக் குள்ளேயே நடை போடத் தொடங்கினேன்.

சில நாட்களாக அவன் எழுதிக் கொண்டிருந்ததன் விளைவுதான் அந்தக் காகிதங்களில் அடங்கியிருப்பது. அதை முதல் நாள் எழுத ஆரம்பித்த இடத்திலிருந்து மனத்தில் ஓட விட்டான் ராஜா:

அவள் ஒரு மல்லிகை மலரைப் போல இருக்கிறாள்....

எழுத ஆரம்பித்த முதல் நாளன்று என்னால் இவ்வளவுதான் எழுத முடிந்தது. ஆனால் நான் எத்தனை எழுதினாலும் எல்லாம் இந்த ஒரு வரியிலேதான் அடக்கம். நான் எழுத்தாளன் இல்லை. கதை எழுதப் போவதில்லை. ஆனால் கதை போல் இதை எழுத வேண்டும் என்ற ஆசைதான். வந்த வரையில் வரட்டும். எழுத்தாளர்கள் போல் எழுத நான் இனிப் பயிலப் போகிறேன். நூல் நிலையங்களில் புத்தகங்களை இப்போதுதான் புரட்டுகிறேன். பொழுது போக்கு நூல்கள் நிறையப் படித்திருக்கிறேனாயினும் இலக்கியத்தின் 'அ' -- னாவை இப்போதுதான் தொட்டிருக்கிறேன்: இப்போது நான் எழுதுவது நகமும் சதையும் போன்ற உண்மை விஷயங்களாதலால் என் போக்குக்கு வந்தபடி எழுதிக் கொண்டு போகிறேன்....

அவளுக்கு நானாகவே மல்லிகா என்று பெயர் வைத்து என் மனத்துக்குள் கூப்பிடுவேன். வெளிப்பட வாய் விட்டு அழைக்கும் போது அவளுடைய இயல் பெயரையேஅழைப்பேன், 'வேதா' என்று.


அவள் என் இன்ஸ்டிடியூட்டுக்கு வந்த அன்றே மணம் பரப்பிக் கொண்டு வந்தாள். வீசிய மணம் அவளிடமிருந்தே வீசியதா, அல்லது அவள் சூடியிருந்த மல்லிகைச் சரத்தினின்றும் இருந்தா என்றே விளங்கவில்லை. ஏனெனில் அவளே ஒரு மல்லிகை மலர் போன்று வெள்ளை ஆடை உடுத்து, வெண் முத்துக்கள் போல் பற்கள் சிரிப்பினிடை தெரிய, வெண்மை தெறிக்கும்வெந்த உடலோடு காணப்பட்டாள். யாரிடமோ கேட்டறிந்து என்னிடம் பாடம் சொல்லித் தரும் போதகர் வேலையைக் கோரி வந்தாள். நானும் அவளை நியமித்துக் கொண்டேன்.

காலஞ்சென்ற மைசூர் மகாராஜா ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையார் கல்வி கேள்விகளில் ஆர்வம் கொண்டவர். எந்த நாட்டுக்குச் சென்றாலும் அந்த நாட்டுக் கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் பார்த்து வருவார். ஒரு முறை அவர் ஜெர்மனி போயிருந்தபோது ஒரு பல்கலைக் கழகத்தைப் பார்க்கச் சென்றிருந்தார். அங்கே ஒரு பேராசிரியரிடம் தம்மை அறிமுகம் செய்து கொள்ளும்போது, ''நான் மைசூர் மகாராஜா!'' என்றார்.

''என்ன, நீங்கள் டாக்டர் சாம சாஸ்திரிகளின் மைசூரைச் சேர்ந்தவர்களா?'' என்று ஆர்வத்தோடு கேட்டார் பேராசிரியர்.

''ஆமாம், ஆமாம்! அதே மைசூரைச் சேர்ந்தவன்தான். அந்த சாமா சாஸ்திரிதான் கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திர'த்துக்குப் புத்துயிர் அளித்தவர்!'' என்று மகாராஜா மகிழ்ச்சியுடன் கூறினார்.

'மன்னவனுக்குத் தன் நாட்டில் தான் பெருமை; கற்றவனுக்குஎந்நாட்டிலும் புகழ்.'



வெளிநாட்டிலிருந்து மைசூர் திரும்பியதும் மகாராஜா முதற் காரியமாக மகாமகோபாத்தியாய டாக்டர் சாமா சாஸ்திரியைத் தமது அரண்மனைக்கு அழைத்து வரச் செய்து வணங்கினார். ''சாஸ்திரி அவர்களே! நம் நாட்டில் நீங்கள் என் பிரஜை. ஆனால் வெளி நாட்டிலோ நான் உங்கள் பிரஜை!'' என்று சொல்லிப் போற்றிப் புகழ்ந்தார்.

வாலிபன் ஒருவன் பூங்கா ஒன்றில் மகிழ மரத்தின் அடியில் ஒரே கவலையாக உட்கார்ந்திருந்தான். பூங்காவுக்கு வந்திருந்த ஒரு யுவதி அவனருகில் சென்று, ''ஏன் இப்படிக் கவலையாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள். அவன் பதிலுக்கு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்?''

''ஆமாம்!''

''இன்னும் உங்களுக்குக் கலியாணம் ஆகவில்லையே!''

''ஆகவில்லை!''

''எனக்கும்தான்!''

''மகிழ்ச்சி!''

''என்னை மணந்து கொள்கிறீர்களா?''

''எதற்கு? எனக்கு இருக்கிற கவலை போதாதென்று ?''

''இல்லை, உங்கள் கவலை குறையும். நானும் அதில் பங்காளியாகிப் பகிர்ந்து கொள்ளுவேன் !''

''உலக அநுபவம் இன்று வரை அப்படிச் சொல்லவில்லை. மணந்துகொண்டால், கவலை இரட்டிப்பாகும். அவள் கவலையை இவன் சேர்ந்து பட வேண்டும் என்றே சொல்கிறது. இதிலிருந்து விடுபட ஏதாவது வழி இருக்கிறதா என்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றான் வாலிபன்.



வகுப்பில் பாடம் நடக்கும் சமயம் அவளைக் கூர்ந்துகவனிப்பது ஒன்றுதான் எனக்கு வேலை. அவள் வந்த பிறகு போதனை அலுவலை நான் விட்டு விட்டேன். நிர்வாகத்தை மட்டும் பார்த்துக் கொண்டேன். தமிழ் — ஆங்கிலச் சுருக்கெழுத்து, தட்டெழுத்து எல்லாம் பயின்றிருந்த அவள் எனக்குப் பெரிய உதவியாளராகத்தான் வாய்த்தாள்.

ஆறு மாதங்களாக இதே மாதிரி அநுபவம் தான் நேர்ந்து கொண்டிருந்தது. நினைவின் பெருக்கத்தினாலும், பெருமூச்சுக்களின் அழுத்தியினாலும் என் உள்ளம் சோர்வடைந்து எதற்கோ உருகிக் கொண்டிருப்பதை நான் உணரத் தொடங்கினேன். மல்லிகா என் நிலைக்குநேர் மாறாகத் தோன்றினாள். தினம் தினம் காலையில் அவள் வருகையை அறிவித்து அவள் தோற்றத்துக்கு முன்னால் மல்லிகை மணக்கும். மாடிப் படியின் கீழ்க் கோடியில் அவள் நிற்கிறாள் என்று கண்டு கொண்டு நான் அடைப்பின் தாழைத் திறக்கப் போவேன். அடைப்பைத் திறந்ததும் அவள் உருவம் மலர்ச்சியோடு புது மெருகு கொண்டு, பெரிய மலர்க் கொத்து மாதிரி தெரியும்.

'நமஸ்தே மாஸ்டர்' என்று இரு கைகளையும் கூப்பி வணங்கி விட்டு அவள் படிகளில் முன்னேறிப் போவாள். அவள் வந்தபின் வகுப்பெல்லாம் மணக்கும்; புதிய சோபையும் கறுகறுப்பும் பெறும்.

ஒரு நாள் வகுப்புத் தொடங்குமுன் அவள் என்னிடம் வந்து, ''மாஸ்டர், உங்களுடைய இன்ஸ்டிடியூட் எனக்கு அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொடுத்திருக்கிறது. நான் இங்கு வந்த முகூர்த்தம் எனக்கு ரிஸர்வ் பாங்கில் வேலை கிடைத்திருக்கிறது. நான் இந்த மாதம் முப்பதாம் தேதியுடன் உங்கள் ஸ்தாபனத்திலிருந்து விலகிக் கொள்கிறேன்'' என்றாள்.

நான் அவளுக்கு நூறு ரூபாய் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தேன். அவள் போவதை விரும்பாத என் மனம் அவளைத் தடுத்து நிறுத்த முடியுமா என்று எண்ணியது.

''ரிஸர்வ் பாங்கில் வரக் கூடிய சம்பளத்தை நான் தருகிறேன். இங்கே தொடர்ந்து இருக்க முடியுமா என்று பாருங்கள்....'' என்றேன்.

''இல்லை; நான் உத்தியோகம் பார்த்தே ஆக வேண்டியிருக்கிறது. முடியுமானால் சில மாதங்கள் கழித்து மாலை வகுப்புக்களை மட்டும் கவனிக்கிறேன். நான் நிறையச் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.... எனக்கு.... என் வாழ்க்கையில் ஏற்படவேண்டிய மலர்ச்சிக்கு நானே முதல் பைசாவிலிருந்து சேர்க்க வேண்டியிருக்கிறது!'' என்றாள் அவள். இதைச் சொல்லும் போது அவளுடைய முகம் தாழ்ந்தது; வெட்கத்தையும் கண்டு கொண்டேன்.

''உங்கள் சௌகரியப்படி செய்யுங்கள். வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டிய லட்சியம் முக்கியமானது...'' என்றேன்.

அவளுடைய வலது கை விரல் மேஜை மீது வளையங்கள் சுழித்துக் கொண்டிருந்தது.

வகுப்பு சம்பந்தமில்லாத வகையில் நான் அவளுடன் பேசியது இதுதான் முதல்தடவை; கடைசித் தடவையும்கூட. அவள் போன பிறகு வகுப்புக்களை நானே மேற்கொண்டேன். அவள் போய் விட்டாள்; ஆனால் என் நெஞ்சிலிருந்து நீங்கிவிட வில்லை. அவள் அமரும் நாற்காலியில் அவள் உருவத்தைப் பூரணமாக என் கண்கள் ஒவ்வொரு விநாடியும் கண்டன. அவளுக்குத் தாழ் திறக்கும் நோக்கத்தில் என் கால்கள் தாமாக ஒருமுறை மாடிப் படியில் ஏறி இறங்கும். நான் விடும் மூச்சு இழைகளில் மல்லிகையின் மெல்லிய நெடி வெளிப் பரவி மீண்டும் நான் உள்ளிழுக்கும் சுவாசத்தோடு உள்ளேயும் கலக்கும்.

நாள் போக்கில் நான் பேதலித்து நிற்கிறேன் என்பதை என்னாலேயே உணர முடிந்தது. ஆனால் அந்த நிலையில் இருக்கவே விரும்பினேன். அது மனத்துக்கு இதமாகவும் சுகமாயுமிருந்தது. வகுப்புக்கள் எல்லாம் முடிந்தபின் தனிமையில் உட்கார்ந்து கொண்டு மல்லிகாவின் உருவத்தைச் சிருஷ்டி செய்துகொண்டு கற்பனையில் அளவளாவினேன். நேரில் பழகிக் கொண்டிருந்த நாட்களில் அவளுடன் பேச இயலாது உறுத்திக் கொண்டிருந்த தடையை உடைத்துக் கொண்டு நிறையப் பேசினேன். ஆனால் கற்பனையிலும் வரம்பு அடைந்ததில்லை. வெறும் பேச்சின் இன்பத்தைப் பகிர்ந்து கொள்வதோடு சரி; என் மனத்தின் பேதலித்த தன்மையை அவளுக்கு உணர்த்தி, என்னைத் தாழ்த்திக் கொண்டது கிடையாது.

எனக்கு மல்லிகையின் மீது பைத்தியம் பிடித்தது, போகும் இடங்களிலிருந்தெல்லாம் பந்து பந்தாகப் புஷ்பம் வாங்கிக் கொண்டு வந்து படங்களுக்குச் சாத்துவேன். மல்லிகாவின் கூந்தலில் காணும் அளவுக்குப் பூவைச் சுருட்டி என் மேஜை மீதே வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பேன்.

ஒரு மாதம் கழித்து என் உறவுக்காரப் பெரியவர் எனக்குக் கலியாணம் நிச்சயம் செய்ய வந்தார். அவரிடம் நான் கட்டுப்பட வேண்டியவன். கலியாணத்துக்கு ஒப்புக் கொண்டேன். மல்லிகாவைக் கலியாணத்துடன் சேர்த்து நான் பிணைத்துப் பார்க்கவில்லை. மனத்தில் நிலைபெற்று, மனத்தையும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறாள். என் கலியாணமே ஒருகால் என் மனத்தைச் சுய நிலைக்குக் கொண்டு வருமோ என்று எண்ணிச் சுருக்கமாக நான் சம்மதம் தெரிவித்தேன்.

என் வாழ்க்கையில் வஞ்சக தோன்றிய பிறகு என் மன இயக்கத்தில் நான் ஒரு மாறுதலை எதிர்பார்த்தேன். கல்யாணத்துக்கு முந்தியும் பிந்தியும் இருந்த அதே நிலையில் — சிறு காற்றுக்கும் கட்டுப்பட்டு நிற்கும் தராசு முள் மாதிரி — அப்படியேதான் இருக்கிறது மனம். மல்லிகா என் உள்ளத்தைக் காவியக் களனாக்கி, கணந்தோறும் புதிது புதிதாகத்தோற்றம் எடுத்து வாடாத மலராக வடிவம் காண்பித்துக் கொண்டிருக்கிறாள்.

இத்தனை அளவு இந்த உண்மை அநுபவங்களை எழுதி விட்டேன். இனி மேல் நான் எழுத ஆராய்ச்சியில்தான் இறங்க வேண்டும். மனோதத்துவங்களை ஆராய முற்படுகிறது என் மனம்; ஹிப்னடிஸம் பற்றிக் கூடத் தெரிந்து கொண்டு என் மனத்தை நானே ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன். அதெல்லாம் ஒரு

வியாதிகள் வராமல் தடுப்பதற்கும், வந்தால் குணமடைவதற்கும்

லிப்கோவின்

இயற்கை தரும் இன்மருந்துகள்

ஆசிரியை :

வைத்திய விசாரதை

T. S. ஜனககுமாரி

பெருவாரியாகப் பரவி நிற்கும் நோய்களுக்குச் சிகித்சை — கோபமும் நோயும்—மூலிகைகள்—மலரே மருந்து — லேகியங்கள் — கஷாயங்கள் — சூரணங்கள் — விஷக்கடிகளுக்கு — நோய் வருவதன் காரணமும் அறிகுறிகளும்—கண், காது, பல் நோய்கள்—இயற்கை தரும் இனிய டானிக் வகைகள்—தைல வகைகள் — ஆரோக்கிய வாழ்விற்கு அரிய பயிற்சிகள்—சூரிய நமஸ்காரம்—ப்ராணாயாமம்—ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம்—நவக்ரஹங்களும் நவமணிகளும் வியாதி நிவ்ருத்தியும் — மணி மந்த்ரம் ஔஷதம் — நோயும் புகழ் பெற்ற பெரியோர்களும்—வைத்தியக் கலைக்கு மூலபுருஷனுகிய ஸ்ரீ தந்வந்தரி பகவான் ஸ்தோத்ரங்கள்—ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் (ஆகார நியமம்), திவ்ய ப்ரபந்தம், தேவாரம், திருவாசகம், திருவருட்பா, திருப்புகழ், திருக்குறள் ஆகியவைகளிலிருந்து மருந்துபற்றிய பாசுரங்கள் — மருந்துச் சரக்குகளின் அகர வரிசை — நோய்களின் அகர வரிசை.

கால்நடைகளுக்கும் சிகித்சை

ஆடு, பசு, எருமை, காளைமாடு, குதிரை, நாய், பூனை, கோழி முதலியவைகளுக்கும் சிகித்சை முறைகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

608 பக்கங்கள்

விலை ரூ. 4; தபால் மூலம் ரூ. 5.20



உடல் வலியா ?



தலைவலியா ?



சுரமா ?



உங்கள் நாய்க்கு உடல் நலமில்லையா ?

நுட்பமான ஆயுர்வேத மூலிகைகளின் குண விசேடங்களையும், அவைகளை நோய்க்குக் கொடுக்கும் முறைகளையும், அவை வியாதிகளையும் அதன் மூலகாரணங்களையும் எவ்விதம் அடியோடு அறுக்கும் என்பதையும் இந்நூல் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. நீடித்த ஆயுளையும், சுக தேகத்தையும் பெற இந்நூல் பேருதவியாக இருக்கும்.

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17

ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ரெயில்வே ஸ்டால்களிலும் மற்றும் எல்லா புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

NALIN



மட்டில்லாத களை, மென்மை...பட்டாடைகளின் பண்புகளை நருவிசாகப் பராமரிப்பது லக்ஸ் சலவை. கம்பளி, நைலான், ரெயான், டெரிலீன் ... பாங்கான துணிகள் எல்லாமே பார்க்கப் புதிதாய்ப் பன்னெடுநாள் நீடித்திருக்கத் துணை: தூய மெல்லினம் லக்ஸ் தூள்களால் சலவை!

அத்தனை நருவிசாக ஆடைகளைக் காப்பது லக்ஸ் ஒன்றே

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LX. 20-140 TM

புறமிருக்கட்டும்; நான் வஞ்சுவை எப்படி என் மனத்தில் வரவேற்பது? இது தீர்வு காண முடியாத பிரச்னையாகத் தோன்றுகிறது...!

இதற்கு மேல் ராஜா ஒன்றும் எழுதவில்லை. அரசல் புரசலாக மனத்தில் ஓடவிட்ட இந்த எழுத்துக்களை ஒரு முறை படித்து விட்டே எழுந்தான். மீண்டும் அந்தக் காகிதங்களை டிராயரில் வைத்துப் பூட்டி விட்டுப் படுத்துக் கொண்டான். அயர்வுதான் அவனிடம் தூக்கத்தைக் கொணர்ந்து இணைத்தது.

ஒரு மாதமாக ராஜாவின் உள்ளத்தில் இன்ஸ்டிடியூட்டை மீண்டும் திறப்பதா, வேண்டாமா என்பது பற்றி ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. உடலும், முக்கியமாக மனமும் சரியில்லாத காரணத்தால் வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருந்தான் அவன். மல்லிகா இல்லாமல் இனி வகுப்புகள் நடத்த முடியாது என்ற எண்ணம் அந்த முடிவை வலுவடையச் செய்தது.

அன்று வெளியில் சென்று திரும்பியபோது வஞ்சு சைக்கிள்காரனிடம் புஷ்பம் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைவதைக் கண்டான் ராஜா. 'ஆகிப் போச்சு! மல்லிப்பூ ஒரணாவுக்கு அஞ்சு முழம்' என்ற சைக்கிள்காரனின் குரல் மல்லிகை மணத்தையும் மணிச் சப்தத்தையும் பின்னால் நிலைக்க விட்டு விட்டு முன்னால் சென்றது.

உள்ளே நுழைந்த போது கண்ணாடி முன் நின்று இரண்டு விரல் கடை நீளம் கதம்பத்தை வஞ்சு அணிந்து கொள்வதைக் கண்டான் ராஜா. ''ஏன், வஞ்சு! மல்லிகைப் பூ வாங்க வில்லையா?'' என்று கேட்டான்.

அவனை அவள் திரும்பிப் பார்த்த பார்வையில் ஒரு புதிய நிலை பளிச்சிட்டது. ''மல்லிகைப்பூ வாங்கிப் படத்துக்குப் போடுகிற வரையில் என் உறவைக் கொண்டாடுகிறீர்களாக்கும்!'' என்றாள் அவள்.

ராஜாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி உடனேயே வியப்பாக மாறியது.

''நீ உன்னுக்குள் பெரிய ஆளாக இருக்கிறாய், வஞ்சு! பரவாயில்லை; இப்படிப் பேசினதால் எனக்குக் கோபம் வராது... பேசு!'' என்றான் ராஜா.

''நான் ஒன்றும் ஆள் இல்லை. தவிரவும் உள்ளே வேறு, வெளியே வேறு என்றுஇரண்டு மனுஷியாக இல்லை. நான் பேச என்ன கிடக்கிறது! நான் பேசாமற் போனால்தான் உங்களுக்குப் புரியாதது என்ன கிடக்கிறது! பூவிலும் வாசனையிலும் மனசை லயிக்க விட்டுக் கொண்டு தனியாக ராஜ்யம் பண்ணுவதற்கு என்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டு எதற்கு அழைத்து வந்தீர்கள்? நீங்கள் உத்தரத்துப் பல்லி மாதிரியும், நான் பகலில் விழி கொட்டுகிற ஆந்தை போலவும் கிடப்பதற்குத் தானா நமக்கு ஒரு கல்யாணம் வேண்டியிருந்தது?''

''என்னவோ,' என்னையறியாமல் பூவிலும் வாசனையிலும் என் மனம் லயிக்கிறது வஞ்சு! அன்றைக்கு இவை யெல்லாம் எனக்குப் பிடிக்கும் என்று தெரிந்துகொண்டபோது சந்தோஷப்பட்டாய் போல் இருக்கிறதே!''

'' சந்தோஷப்பட்டது உண்மைதான். ஆனால் இவைகள் உங்களையே ஒரு புதிராக ஆக்கிப் போட்டு என்னை உங்களிடமிருந்தே பிரித்துக் கொண்டிருந்தால் தொடர்ந்து சந்தோஷப்பட முடியுமா? நீங்களே சொல்லுங்கள்!''

ராஜா சற்றே திரும்பிப் பல்லைக் கடித்துக் கொண்டான். ''உண்மைதான் வஞ்சு. நான் புதிராக இருக்கிறேன் என்று நீ சொல்லித் தான் எனக்கே உணர முடிகிறது. ஆனால் இப்போது எதையும் பற்றி மேலே என்னால் பேசிக் கொண்டிருக்க முடியாது. இப்போது எனக்கு நல்ல ஜுரம் அடிக்கிறது. வெளியிலேயே டெம்பரேச்சர் கண்டு விட்டது. முதலில் படுக்கையைப் போடு'' என்றான் ராஜா.

வஞ்சுவின் முகம் கவலை படிந்து சாம்பி விட்டது. படுக்கையைப் போட உள்ளே விரைந்து சென்றாள்.

டாக்டர் வந்து அவனைப் பரிசோதித்தார். இரு தினங்களாக இரவிலும் பகலிலும் கண் கொட்டாமல், துயரம் நெஞ்சடைக்க அவனுக்குப் பணி விடை செய்து கொண்டிருந்த வஞ்சு டாக்டர் என்ன சொல்லப் போகிறார் என்று கவலையோடு காத்திருந்தாள். நல்ல ஜுரத்துக்குப் பிறகு அவனுக்குச் சிறிது பேசவும், பேசுவதைக் கேட்கவும் முடிந்தது.

''உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அதை ஜுரம் முழுதும் நின்ற பிறகு கவனித்துக் கொள்ளலாம்; ஆனால் மனசை நிரம்ப அலட்டிக் கொண்டு

உங்கள் உடம்பு இப்படிப் போக நீங்கள் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு வைத்தியமும் உங்கள் கையில்தான் இருக்கிறது!'' என்றார் டாக்டர்.

ராஜா ஒன்றுமே பதில் பேசவில்லை. எங்கோ பார்க்கத் திரும்பிய கண்களில் வஞ்சுவின் முகம் தெரிந்தது. கவலையால் அவன் உருகுகிறான் என்பதை கனிந்துச் செருகிய அவளது கண்களிலின்றும் தெரிந்துகொண்டான் அவன்.

அவனுக்குக் கஞ்சி கொண்டு வந்தாள் வஞ்சு. சிறிது சிறிதாக அவன் பருகி முடித்ததும் அவள் பேசினாள்:

''டாக்டர் சொன்னதைக் கேட்டீர்களா? மனம் அரிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றாரே....''

''டாக்டருக்கு என்ன வஞ்சு! எதையாவது சொல்வார்! மனதை அளந்து பார்க்க டாக்டருக்கோ அல்லது உனக்கோதான் எப்படி முடியும்? என் மனம் சரியாகத்தான் இருக்கிறது!'' என்றான் ராஜா. அவன் குரல் அயர்ச்சியினால் உடைந்திருந்தது.

''என்னிடம் வஞ்சனை பண்ணிக் கொண்டிருந்தாலும் இருங்கள்; டாக்டரிடம் அந்தச் சாமர்த்தியத்தைக் காட்ட வேண்டாம். உங்கள் மனம் சரியாகத்தான் இருக்கிறதா? அதை நீங்கள் போட்டுப் புரட்டி எடுக்கவில்லையா? ஆராய்ச்சி செய்ய விரும்ப ஏன், ஹிப்னாடிஸம் கூடக் கற்றுக்கொள்ளும் உத்தேசம் உங்களுக்கு இருக்கிறதே!'' வஞ்சுவின் நெஞ்சப் படபடப்பு நன்கு புலனாகியது.

அதிர்ந்த பறவை போல் ஒடுங்கினான் ராஜா. அவன் கண்கள் மட்டும் இழிந்து வந்துவிடுவது போல் அவளை வெறித்தன.

''நீ என்ன சொல்கிறாய்? உனக்கு எல்லாம் தெரியுமா? நீ என் மனசுக்குள் நுழைந்து விட்டாயா?''

''ஆமாம்; அதை நான் ஒன்றும் பெரிய சாதனையாகக் கருதவில்லை. உங்கள் மன வழி புகுவதற்குத்தான் அந்தக் காகிதங்களில் எதை எதையோ கொட்டி அளந்து நூலேணி வைத்திருந்தீர்களே....?''

''அதையெல்லாம் படிக்கவில்லை என்று சாதித்தாயே, வஞ்சு. ஆங்கில பாஷையே தெரியாது என்று சாதித்தாயே.....'' அவன் குரல் உரக்க ஒலிக்க முயன்று களைப்பின் மிகுதியால் சிறிது குழறவும் செய்தது.

''பாஷை தெரிவதென்ன இதில்? நீங்கள் எழுதி வைத்தது ஒரு பாஷை என்றால், எழுதாமல் மனதில் காவியம் பாடிக்கொண்டிருப்பது எத்தனையோ பாஷைகளில். அவைகளைக் கற்றுக்கொள்ள எங்கேயாவது பயில வேண்டுமா, என்ன?''

ராஜா அவள் பேசிக்கொண்டிருப்பதையே வெறித்த பார்வையோடு கேட்டுக்கொண்டிருந்தான்.

''நம் கல்யாணத்துக்கு முன்பு வேண்டுமானால் உங்கள் மல்லிகா உங்கள் மனத்தை ஆண்டுகொண்டிருந்திருக்கலாம். அதன்பிறகு உங்கள் மனத்தை வெல்ல வேண்டியது உங்கள் வேலை; கடமையும்கூட. அது நேர்மையாகப் படவில்லையா உங்களுக்கு?''

ராஜாவுக்குச் சுரீர் என்றது. தன்னுடைய நேர்மைக் குறைவுகூடத் தன் நடவடிக்கைகளில் கலந்திருக்கிறதைத் திடீரென்று அவன் உணர நேர்ந்ததும் அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவன் ஒன்றும் பேசாமல் திரும்பிப் படுத்துக் கொண்டுவிட்டான்.

ஒரு வாரத்தில் எழுந்து நடமாட ஆரம்பித்தான் ராஜா. மேஜைக்கெதிரில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, தினக் குறிப்புத் தாளில் அன்றையத் தேதிக்கு மறுநாள் தேதியைச் சுற்றி ஒரு சிவப்புப் பென்சிலால் வட்டமடித்திருந்ததை அவன் கண்டான். அவன் இதைச் செய்யவில்லை. ஆனால் வஞ்சுதான் செய்திருக்க வேண்டும். வெகு நேரம் யோசித்தும் அந்தத் தேதிக்குரிய விசேஷம் என்னவென்று அவனால் அநுமானிக்க முடியவில்லை. மருந்து கொண்டு வந்த வஞ்சுவிடமே அதைக் கேட்டான். உற்சாகமில்லாத தாழ்ந்த பார்வையுடன் தான் தோன்றினாள். அவள் இயக்கத்தில் கண்ட ஒரு யந்திரத் தன்மை, மணிக் கணக்குடன் பணி செய்யும் ஒரு நர்ஸை நினைவூட்டியது. அந்தக் கேள்வியை மற்றும் ஒரு முறை கேட்டு நினைவூட்டிய பிறகுதான் அவள் பதில் கூறினாள்:

''மல்லிகா வகுப்புக்கு வருவதை நிறுத்திய பிறகும் அவளுக்குத் தாழ் திறக்கப் படியிறங்கிப் பழகி மனம் மரத்துவிட்ட உங்களுக்கு நம் கல்யாணத் தேதி எங்கே நினைவு வரப் போகிறதென்று நினைத்து அதைச்

டாக்டர் ஸ்ரீஹரியின் சுற்றுப் பயணம்

கல்கியில் வைத்தியப் பகுதியை எழுதிவரும் டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் சென்னையிலிருந்து 13–10–63 இரவு 9 மணிக்கு பம்பாய் மெயிலில் புறப்பட்டு 15–10–63 காலை 6 மணிக்கு பம்பாய் சேர்ந்து, அங்கு 26-208 மீனலதன்-லேயான் மாதுங்கா ரோட்டில் தங்குவார். 18–10–63 மாலை 7-15க்கு பம்பாயிலிருந்து ஃபிராண்டியர் மெயிலில் புறப்பட்டு 19–10–63 மாலை 7-40க்கு டெல்லி சேர்ந்து அங்கு ஜந்தர்மந்தர் ரோட்டில் தென்னிந்திய கிளப்பில் தங்குவார். 25–10–63 மாலை 4–45க்கு டெல்லியிலிருந்து புறப்பட்டு 27–10–63 காலை 6 மணிக்கு ஹைதராபாத் சேர்ந்து அங்கு லால்தான் பஜார் ரோட்டில் தாஜ்மஹால் ஹோட்டலில் தங்குவார். 28–10–63 மாலை 6 மணிக்கு அவ்விடமிருந்து புறப்பட்டு 29–10–63 அன்று சென்னை வந்து சேருகிறார்.



P.P. 864 R TAM EVEREST

கழித்து வைத்தேன்: அப்படியும் நினைவில்லையெனில் அடுத்த ஆண்டிலாவது அந்தத் தேதியை என் இரத்தத்தால் மெழுகி மறைத்தேவிட்டு மறைய வேண்டியதுதான்.''

அவனுடைய வார்த்தைகளின் தீவிரம் ராஜாவை என்றும் இல்லாத முறையில் அன்று உலுக்கியது.

அன்று மாலை டாக்டரிடம் போனபோது ராஜாவின் மனம் ஒரே சிந்தனைக் கோடுகளால் சிக்குண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட நிலையில் மனசை நிறுத்த முடியாமல் அவதிப்பட்டான். அந்த நிலையைப் பெயரிட்டு அழைக்கும் பயங்கரத்தை நினைக்கும்போது அவன் உடல் வெலவெலத்தது.

டாக்டர் அவனுடைய உடற்கூறு சம்பந்தமான எல்லாப் பரிசோதனைகளையும் முடித்தார். சிரித்துக் கொண்டே அவர் கூறினார்: ''உடல் சம்பந்தமாக ஆசாமி 'பர்பெக்ட்'டாக இருக்கிறீர்கள். இருபத்திரண்டு காரட் தங்கமாக இருக்கிறது உடம்பு. 'மனம் மனம்' என்று நீங்கள் பல்லவி பாடுவதைப் பற்றி உங்களிடமே கேட்டுக் கொண்டு உங்களையே வைத்தியம் பண்ணிக் கொள்ள வைக்கிறேன்; என்ன சொல்கிறீர்கள்? உங்கள் பொன்னான மனத்தை அரிப்பது எது?''

ராஜா சட்டைப் பையினின்றும் தான் எழுதி வைத்திருந்த கதை போன்ற— அல்லது உண்மையே முற்றும் கலந்த கதையேயானதுமான — அந்தக் காகிதங்களை எடுத்து டாக்டரிடம் கொடுத்துவிட்டு, ''வக்கீலிடமும் டாக்டர்களிடமும் உண்மையை மறைக்கக் கூடாதென்பார்கள். இதைப் படித்து விட்டு என் மனத்தில் உள்ளதைப் புரிந்துகொள்ளுங்கள்!'' என்றான்.

அவர் அதைப் படிப்பதற்கு ஆன பதினைந்து நிமிஷங்களில் ராஜா பதினைந்து பிறவிகள் எடுத்துவிட்டான். வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்ற பிடுங்கலில் முகத்தை ஒரு நிலையிலேயே வைத்துக் கொள்ள முடியவில்லை.

முழுதும் படித்து முடித்த டாக்டர், ''பேஷ், மிஸ்டர் ராஜநாராயணன்! நீங்கள் ஒரு நல்ல எழுத்தாளராக எதிர்காலத்தில் வர முடியும் என்பதற்கு இந்தச் சிறு சுயசரிதம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது...எனக்குக் கூட இங்கே ஏதோ மல்லிகை மணக்கிற வாசனை தெரிகிறதே!... படித்துவிட்டேன்; இப்போது என்ன என்கிறீர்கள்? மல்லிகா உங்கள் மனசைப் பிடித்து ஆட்டுகிறாளாக்கும்! அவளுக்கு நீங்கள் நிரந்தரமான விடை கொடுக்க வேண்டியதுதானே பாக்கி!'' என்றார். டாக்டர் மிக உற்சாகமாகக் கூறியதை ராஜாவினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''அதுதானே முடியவில்லை! டாக்டர், இதை எழுதினதற்கு மேல் என் மனசைப் படம் பிடித்துக் காட்ட இன்னும் ஆயிரம் பக்கங்கள் எழுத என்னிடம் விஷயம் இருக்கிறது'' - சிந்தனையில் மூழ்கினான் அவன்.

தொடர்ந்து ஓர் இளஞ் சிரிப்புடன் பேசினார் டாக்டர்.

''உங்கள் நிலைக்கு மட்டும் நீங்கள் இப்படி இரங்கிக் கொண்டே போகிறீர்களே; உங்கள் மனைவியின் நிலை உங்களைவிட இன்னும் ஆபத்தானது என்று நீங்கள் உணர்ந்தீர்களா? அந்த அம்மாளுடைய மன நிலையைத்தான் நான் இப்போது வியக்கிறேன். உங்களுக்காக இனி ஒரு சிகிச்சையும் வேண்டியதில்லை; ஓராண்டு காலமாக ஓர் உயிர்ப் பொம்மை உங்களை இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறதே அதை, வாழ வைக்க முனையுங்கள். நீங்கள் தெளிந்து விடுவீர்கள். இதெல்லாம் வாழ்க்கையில் சகஜம்தான், மிஸ்டர் ராஜ நாராயணன். கல்யாணத்துக்கு முன் ஒரு பெண் மனசில் ஒட்டிக் கொண்டிருப்பதும், அவளைப் பற்றி நினைவு ஓடுவதும் சாதாரணமாகப் பலபேருடைய வாழ்க்கையில் நிகழக்கூடியதுதான். இதற்காகவெல்லாம் ஒருவருக்குச் சித்தப் பிரமை பிடிப்பதென்றால் அப்புறம் உலகத்தில் என்ன இருக்கிறது? மல்லிகாவைப் பற்றி, 'அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது' என்று ஆரம்பித்து நானும் நாற்பது பக்கம் எழுதிக் காண்பித்து உங்களுக்கு மன வைத்தியம் செய்யத் தொடங்கலாம். அதற்கு அவசியமில்லை. அவ்வளவுக்கு உங்கள் விஷயம் முற்றவில்லை. உங்கள் வஞ்சுவை நினைத்துக் கொண்டு புது வாழ்க்கையைத் தொடங்குங்கள்.... மல்லிகாவும் அவள் மனமும் உங்களிடமிருந்து சொல்லாமல் விடைபெறுவதை உணர்வீர்கள்'' என்றார் டாக்டர்.

ராஜா ஓரேயடியாகத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டே, ''நான் வருகிறேன், டாக்டர்!'' என்று எழுந்தான்.

''உற்சாகத்துடன் வீட்டுக்குப் போங்கள். அடுத்த வாரம் உங்கள் மனைவியை அழைத்துக்கொண்டு நம் வீட்டுக்கு வாருங்கள். ஒரு சிறு விருந்துடன் உங்கள் வாழ்க்கையை நான் ஆரம்பித்து வைக்கிறேன்!''

''சரி, டாக்டர்!''

ராஜா வீட்டை அடையும்போது வெகு நேரமாகி யிருந்தது. எந்நேரமாயினும் வீட்டில் வெளி விளக்கும் ஹால் விளக்கும் எரிந்து கொண்டிருப்பது வழக்கம். இப்போது வீடே இருள் கொண்டு காணப்பட்டது.

''வஞ்சு!'' என்று அழைத்தான் அவன்.

அவள் வழக்கமாக உட்காரும் இடத்தைக் குறிப்பாகப் பார்த்தான் ராஜா, கண்களை இடுக்கிக் கொண்டு. கூடை மல்லிகையை ஒரு பெண்ணுருவில் கொட்டினாற்போல் வஞ்சுவின் உடல் தரையில் கிடந்தது. அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஓசைப்படாமல் ராஜா பின் நடையாகவே தன் அறைக்குள் சென்றுவிட்டான்.

விடிந்தும்கூட வஞ்சு எழுந்திருக்காததை ராஜா உள்ளிருந்தே கண்டான். போர்வையை விசிறிப் போட்டு விட்டு எழுந்து வந்து அவளை எழுப்பினான்.

அவள் எழுந்து உட்கார்ந்து அவன் முகத்தை மலங்க மலங்கப் பார்த்தாள். வெறும் குத்திட்ட பார்வையைக் கண்டு அவன் வெருண்டான்.

''வஞ்சு, வஞ்சு! எழுந்திருக்கவில்லை?''

''என்னை ஏன் அப்படிக் கூப்பிடுகிறீர்கள்? நான் மல்லிகாதானே! இதோ, பாருங்கள், என்ன கட்டிக் கொண்டிருக்கிறேனென்று.

வெண்பட்டுப் புடவை!'' என்று வஞ்சு, புடவைத் தலைப்பைப் பிடித்து வருடினாள்.

''என்ன வஞ்சு இது! ஏன் இப்படிப் பேசு கிறாய்?''

அவன் பதில் பேசாமல் தன் பாதங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். மண்டியிட்ட படி அமர்ந்திருந்ததில் அவளது இரு பாதங் களும் ஒருமிக்க இணைந்து தெரிந்தன.

''என்ன பார்க்கிறாய், வஞ்சு?''

''இது உங்கள் கைபடப் பூசியதுதானே! இந்தக் காவி என் பாதங்களுக்கு அழகா யில்லை?''

அவள் பாதங்களை உற்றுக் கவனித்தான் ராஜா. மறுவற்ற அவளது வெண் பாதங் களை அவன் விரல்கள் வருடின. ஹாலில் இருந்த படங்களைக் கண் சுழற்றிப் பார்த் தாள். கண்களில் ஒளியின்றி, பார்வை வெறுமையைச் சிதறியது.

''வஞ்சு! என்னைக் கலகலக்கப் பண்ணி விட்டாயே!'' என்று சற்றுத் தள்ளி உட் கார்ந்தான் ராஜா. அவன் கண்கள் முதல் இரண்டு சொட்டுக்களைச் சிந்தியபின் சரசர வென்று சொரிந்தன.

விருந்துக்கு அழைத்த டாக்டரை நினைத்துக் கொண்டு அவன் எழுந்தான். டாக்ஸிபிடித்து வரக் கூட அவன் உடம்பில் தெம்பு இல்லாமை யால் நடையில் தள்ளாட்டம் தெரிந்தது.

சில நிமிஷங்களில் டாக்ஸியை எதிர் பார்த்தபடி அவன் தெருச் சந்தியில் நின்று கொண்டிருந்தான்.

வனவிலங்கு வாரம்

விளப்பமிக்கதொரு நாட்டுக்கு அறிவும்பண்பும் பலமும் பொருந்திய மக்கள் மட்டும் போதாது, மிருகங்களும் தேவை. விலங்கினங்களும் பறவைகளும் இல்லாத இலக்கியங்களையோ இதிகாசங்களையோ புராணங் களையோ சிற்பங்களையோ சித்திரங் களையோ நினைத்துப் பார்க்க முடியுமா? கிளியும் குயிலும் மயிலும் இல்லாத சோலையையோ புலியும் சிங்கமும் யானையும் மானும் இல்லாத கானகத்தையோ கற்பனைதான் செய்துபார்க்க முடியுமா? அஜந் தாவும் எல்லோராவும் தாஜ்மகலும் மகாபலிபுரமும் தென்னாட்டுக் கோயில்களும் இந்திய நாட்டுக்கு எப்படி மதிப்பையும் கௌரவத்



தையும் அழகையும் கொடுக்கின்றனவோ அதே காரியத்தை இந்திய யானைகளும் புலிகளும் மான் இனங்களும் மயிலும் கூடச் செய்கின்றன. ஒரு நாட்டின் பெருமையைக் கலாச்சார ரீதியாகக் காட்டு மிருகங்களும் உயர்த்துகின்றன. வன விலங்குகளைக் கண் மூடித்தனமாக வேட்டையாடி அழிப்பதால் பயிர்களை அழிக்கும் மான்முதலிய மிருகங் களின் தொல்லை அதிகமாகி நாட்டில் பஞ்சம் உண்டாகி விடும். சிங்கம் புலி போன்றவற்றின் ஆகாரமான மானி னங்களை அழிப்போமானால் இவைகள் ஆகாரத்துக்காகக் காட்டை விட்டு நாட்டுக் குள் புகுந்து விடும். ஆகவே விஞ்ஞான ரீதியாகப் பார்க்கப் போனால் நாசத்தை விளைவிக்கும் கொடிய மிருகங்களும் பறவைகளும் பெருகி விடாமல் ஒரு நிலையில் வைத்திருக்க வேண்டும். நன்மை தரும் அழகிய அதிசயமான மிருகங்கள் பறவை களின் இனம் அருகி விடாமல் காக்கவும் வேண்டும். உலகிலேயே ஆப்பிரிக்கா வுக்கு அடுத்தபடியாக நம் பாரதத்தில்தான் வகை வகையான - மிருகங்களும் பறவைகளும் அதிகம். இவைகளைக் கண்டு களிக்கவே அயல்நாட்டினர் ஏராளமாக இங்கு வருகின்றனர். இதனால் நம் பாரதத்துக்கு அந்நியச் செலாவணி ஏரான மாகக் கிடைக்கிறது. 'டூரிஸம்' என்ற கேளிக்கைப் பிரயாணத்தின் வருவாயினால் உயர்ந்த நாடுகள் ஐரோப்பாவில் பிரான்ஸும் சுவிட்ஸர்லாந்தும்.

இப்படிக் கலாசார, விஞ்ஞான, பொருளாதார ரீதியாக ஒரு நாட்டின் பெருமைக்கும் உயர்வுக்கும் காரணமாக இருக்கும் வனவிலங்குகளைக் காப்பாற்று வது அந்த நாட்டு மக்களின் கடமையாகும். தகுந்த பாது காப்பு இல்லாததினால் பல அபூர்வமான இந்திய விலங்குகளின் சந்ததியே அழிந்துபோய் விட்டது. இந்தியாவில் வேங்கைப்புலி ஒரு காலத்தில் இருந்தது. இன்றைக்குக் கிடையாது. இரண்டு கொம்புடைய காண்டா மிருகம் உலகிலேயே இந்தியாவில்தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு இல்லை. 'கிர்' காடுகளில் உள்ள இந்தியச் சிங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறதாம். இது அபாய அறிவிப்பு. இந்திய யானை, புலி, காண்டா மிருகம், மான்களுக்கும் இந்த நிலை ஏற்படுமானால்? இதற்காகவே பாரத அரசாங்கம் ஆங்காங்கே வனாலயங்களை (ஸாங்க்சுவரி) உண் டாக்கி வன விலங்குகளைப் பராமரித்து வருகிறது. அண்மையில்



பிறந்த அக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தை வன விலங்குகளின் [பராமரிப்பு வாரமாகவும் கொண்டாடி வருகிறது. இந்த வனவிலங்கு வாரத்தை யொட்டித் தபால் இலாகா சிலபுதிய தபால் தலைகளை வெளியிட்டுள்ளது. அவைகளில் சிலவற் றையே பொருளடக்கத்திலும் இங்கும் வெளியிட்டிருக்கிறோம். பாரத நாட்டின் செல்வங்களில் ஒன்று வனவிலங்குகள். அவைகளைப் பராமரிப்பது ஒவ்வொரு இந்தியனின் கடமை என்பதை . வனவிலங்குகள் வாரம் நினைவூட்டுகிறது.

பாருங்கள்

எப்படி யெல்லாம் பயன்படுகிறது

டாடாவின்
ஓ டி கோலான்!



TELY-38 TAM




வாசனைப் பொருளாக



முக க்ஷவரத்திற்குப் பின்
ஆரோக்கியம் தரும் லோஷனாக



சோர்வுற்ற வேளையில் உங்களுக்குப்
புத்துணர்ச்சி கொடுக்க



புதுமலர்ச்சியூட்டும்
நறுமண ஸ்நானத்திற்கு



'ஜில்'லெனப் பயணம்செய்து,
மலர்ச்சியுடன் வந்துசேர



பாங்கான பரிசுப்பொருளாக

இவை மட்டுமா? இன்னும் பல வழிகளில் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஒரு சீசா கைவசம் வைத்திருங்கள். டாடாவின் ஓ டி கோலான் வாகான நாலுவித சைஸ்களில், நல்ல கடைகளில் கிடைக்கின்றன. ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் பின் 'இது இல்லாமல் எப்படி இதுவரை இருக்கமுடிந்தது' என்று வியப்படைவீர்கள். டாடா தயாரிப்பு

அறிவுக் கனலே அருட் புனலே!

36

ரா. கணபதி

“இந்தப் பிள்ளை அம்பாளின் ஆணையில் என்னிடம் வந்தவன்; எனக்காகவே பிறந்தவன்” என்று எடுத்த எடுப்பிலேயே ராமகிருஷ்ணரால் புரிந்து கொள்ளப்பட்ட ஒருவர் யோகாநந்தர்.

‘இவன் பிறந்து பிறந்து இறக்கும் ஜீவகோடியைச் சேராமல், உலக உத்தாரணத்துக்காகவே உற்பவிக்கும் ஈசுவரகோடியைச் சேர்ந்தவன்’ என்றும் தெரிந்து கொண்டார் ராமகிருஷ்ணர்.

யோகீந்திரநாத் ராய் சௌத்திரி என்று முழுப் பெயர் கொண்ட யோகின் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அருகிலேயே வசித்து வந்தவன். உயர்குடியொன்றில் பிறந்த பிள்ளை. சின்னஞ் சிறு வயசிலேயே அவன் ஆகாசத்தை அண்ணாந்து பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுவான். ‘அதோ அந்த நட்சத்திரங்கள் எல்லாம் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி என்னைத் தன்னிடம் வருமாறுதான் அழைத்துக் கொண்டிருக்கின்றன. ஆமாம், நான் பறந்து போய் அவற்றோடு தான் வாழ வேண்டும்’ என்று இளம் பருவத்திலேயே மண்ணுலகு பிடிக்காமல் விண்ணுலகைத் தன் வீடாகக் கருதி அதற்காக வாடினான் யோகின். மண்ணுலகையே விண்ணுலகாகக் கண்டு, மானுட சேவையையே தெய்வ பூஜையாகக் கருதச் செய்யும் ராமகிருஷ்ணரை வந்தடைந்தான். சிறு வயசிலேயே கடுமையான ஆசார அநுஷ்டானங்களைக் கடைப்பிடித்தவன் யோகின். ராமகிருஷ்ணருடன் பிற இல்லங்களுக்குச் சென்றால் அங்கு போஜனம் செய்ய மாட்டான். அவர்தான் தாயாக இருந்து அவனைக் கவனித்து, “பாலுக்கு தோஷமில்லை, பழத்துக்குத் தோஷமில்லை” என்றெல்லாம் கூறி உண்ணச் செய்வார்.

யோகின் ராமகிருஷ்ணரை அடைந்த பின் பவதாரிணியைப் பலஹாரிணியாகப் பாவித்து கந்த, மூல, பழங்களை ஏராளமாக நிவேதிக்கும் விழா தக்ஷிணேசுவரத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின் ராமகிருஷ்ணரது அறைக்குப் பிரசாதங்கள் வந்து சேராததால் அவர், “எங்கே பிரசாதம்? ஏன் இன்னும் வந்து சேரவில்லை?” என்று பறந்து கொண்டிருந்தார். நாழிகை ஆக ஆக அவர் பொறுமையையே இழந்து விட்டார்.

யோகினுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ‘பரம்பரைக் குணம் இவரையும் விட்டுப் போக வில்லையே!’ என்று ஏளனமாக எண்ணினான் அவன். ராமகிருஷ்ணரது முன்னோரும், சகோதரரும் புரோஹிதம் செய்தவர்கள் அல்லவா? ‘வாழைக் காயையும் அரிசியையும் மூட்டை கட்டும் குலப் பழக்கம்தான் இவரை இப்படிப் பிரசாதத்துக்காகப் பறக்க வைக்கிறது!’ என்று எண்ணிக் கொண்டான்.

தவறுதலாக, அன்று ராமகிருஷ்ணரது அறைக்கு அனுப்ப வேண்டியதையும் சேர்த்து நிவேதனமான எல்லாப் பண்டங்களையும் கோயில் அலுவலகத்துக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். அதிகாரிகள் தவறுதலைக் கண்டபின் ராமகிருஷ்ணரின் அறைக்கு அனுப்பவேண்டிய பகுதியை அனுப்பி வைத்தனர். அப்புறம்தான் அவர் நிம்மதி கொண்டார்.

அந்தப் பழங்களிலும், பட்சணங்களிலும் பலவற்றை அவர் தொடக்கூட இல்லை. அவருடைய வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளாதவையே பெரும்பாலானவை. அப்படியிருக்க அவர் ஏன் அப்படிப் பொறுமை இழந்தார்?

ராமகிருஷ்ணர் யோகீந்திரனை உற்று நோக்கினார்.

“ராணி ராஸமணி இந்தக் கோவில் பிரசாதங்கள் உத்தமர்கள் வயிற்றில் செல்ல வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் இன்றுநடப்பதென்ன? பூசாரிகள் தங்களுடைய காமக் கிழத்திகளுக்கு அவற்றைக் கொண்டு போய்க் கொடுக்கிறார்கள். அல்லது கண்டவர்களிடம் விலைக்கு விற்கிறார்கள். ராணி ராஸமணி இவ்விடத்துக்கு ஒரு தட்டு நைவேத்தியங்கள் அனுப்ப வேண்டுமென்று விதித்திருந்தாள். இங்காவது சில உத்தமர்கள் வந்து பிரசாதத்தைப் பெற்று அவள் ஆத்ம சாந்தியடையச் செய்கிறார்கள். அதற்கும் இடையூறு வந்தால் என்னால் பொறுக்க முடிவதில்லை” என்றார்.

யோகின் குனிந்த தலை நிமிர வேண்டுமே!

காளைப் பருவம் தலை தூக்கத் தொடங்கிய போது யோகீந்திரனின் உள்ளத்தில் ஏதோ இனம் தெரியாத கிளர்ச்சிகளின் நிழல் தட்டியது. அதனை அடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது புனிதத்துக்கு அவாவிய அவனது உள்ளம். அப்போது நாராயண ஹடயோகி என்பவர் பஞ்சவடியில் வசித்துவந்தார். அவர் பதினைந்து முழத்

துணியை விழுங்கி விட்டுப் பிறகு வாயிலிருந்து இழுப்பார். மூன்று படி நீரைக் குடித்து விட்டுப் பிறகு அவ்வளவையும் கொப்புளிப்பார். இம்மாதிரி சாதனைகள் செய்யும் ஆற்றல் இருந்தால் தான் மனோ வேகத்தை வெல்ல முடியும் என்று எண்ணி விட்டான் யோகின்.

ஒரு நாள் ராமகிருஷ்ணரிடம் உணர்ச்சி உந்தல்களை எப்படி அடக்கு வது என்று கேட்டான்.

''ஹரி நாமத்தை ஸ்மரணை செய்து வா. ராமன் உள்ள இடத்தில் காமன் வரமாட்டான்'' என்றார் ராமகிருஷ்ணர்.

ஏதாவது ஹடயோகம் போலக் கடினமான சாதனையைச் சொல்லுவ தற்குப் பதில் குருநாதர் நாம ஜபத்தைச் சொன்னது யோகினுக்குச் சரியாகப் பட வில்லை. 'ஆமாம், எத்தனையோ பேர்கள்தான் ராம ஜபம் செய்து கொண்டே யிருக்கிறார்கள்! அவர்கள் எல்லாம் ஆசையை அடக்கி விட்டார்களா என்ன?' என்றுதான் நினைத்தான். மற்றவர்கள் எப்படியானாலும், தனக்கு அது போதும் என்பதை அவன் அறிந்திருக்க வில்லை. நம்முடைய உடற்கூற்றை நாமே அறியமுடிவதில்லை. மருத்துவர்தான் அறிந்திருக்கிறார். யோகினுக்கு தேவைப்பட்ட ஆத்ம மருத்துவத்தை அவனது உள்ளத்தை 'எக்ஸ்ரே' செய்த குருநாதர் தான் அறிந்திருந்தார்!

மறுநாள் யோகின் ராமகிருஷ்ணரிடம் வராமல் நேரே ஹடயோகியைச் சென்றடைந்தான். அவரது உபந்நியாசத்தையே உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

என்ன அதிசயமோ அப்போது ராமகிருஷ்ணரே அங்கு வந்து விட்டார். 'குற்றம் களைந்து கோதாட்டுவது' அல்லவா பெரியோர்களின் பெருமை? ராமகிருஷ்ணர் யோகிந்திரனின் கையைப் பிடித்துத் தரதர வென்று தமது அறைக்கு இழுத்து வந்தார்.

''இதோ, பார். இந்த ஹடயோகம் அது இது என்று போனாயோ அப்புறம் உன் மனசு உடம்பை விட்டு நீங்காது; ஆண்டவனிடம் செல்லவே செல்லாது. நான் உனக்கு என்ன சொன்னேன்? ஹரிநாமத்தை ஜபம் செய்'' என்றார்.

அப்போதும் கூட யோகிந்திரன் 'நான் இவரை விட்டு விட்டு நாராயண ஹட யோகியைப் பிடித்துக் கொண்டு விடப் போகிறேனே என்றுதான் இவருக்குப் பயம். அதனால்தான் என்னை அங்கிருந்து பிரித்து விட்டார்' என்றே நினைத்தான். ''நான் வருவதோ, போவதோ அவருக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதைப் பேதை நான் அறிந்திருக்கவில்லை'' என்று பிற்காலத்தில் யோகாநந்தர் கூறினார்!

''நான் சொல்வதைத்தான் கேளேன்; சிறிது பகவந் நாமத்தை ஜபம் செய்'' என்று கூறி அகன்றார் குரு.

'சரி, இந்த எளிய காரியத்தைச் செய்துதான் பார்ப்போமே' என்று யோகீந்திரனும் ஹரியின் நாமத்தை மனனம் செய்யலானான். என்ன விந்தையோ! உடனேயே அவனுடைய உள்ளத்தில் ஒரு மணி விளக்கை ஏற்றி வைத்தாற்போல் தூய்மை பரவியது!

சகல சாதனங்களையும் பயின்ற ராமகிருஷ்ணரை அணிமாதி சித்திகள் எல்லாம் தாமே தேடி வந்தன. ஆனால் அவர் அவற்றையெல்லாம் தூவெனத் தள்ளி விட்டுப் பிரம்ம ஞானம் ஒன்றையே நாடினார். சித்திகளின் மூலம் 'ஜல மேல் நடப்பதையும், கனல் மேல் இருப்பதை'யும் விடச் 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கிற நிலை'க்கே பாடு பட்டார் அவர்.

சித்திகளின் மூலம் பிறருக்குத் தீமை செய்யலாம்; நன்மையும் செய்யலாம். ஆனால் மகான்கள் இரண்டையும் செய்ய மாட்டார்கள். ஆண்டவனின் விருப்படி அவரவர் கருமத்துக்கிணங்க இன்ப துன்பங்களை அநுபவிக்கும்போது அதைத் தங்களது சக்தியால் மாற்றுவதால் உலகத்தின் நீதி முறையே தகர்ந்து விடும் என்று கருதி, அற்புதம் புரியும் தங்கள் ஆற்றலை அடக்கி ஆளுவர் மகான்கள். அவர்களும் கருணை மிகுதியால் அடியாரின் வெந்துயர் தீர்க்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் அப்போது அவர்கள் அடியார்களது கர்மப் பயனை இல்லாமல் செய்வது இல்லை; அதனைத் தாங்கள் வாங்கிக் கொண்டு இன்னலை அநுபவிப்பார்கள். ராமகிருஷ்ணரே இவ்விதம் செய்துதான் தொண்டையில் கொடிய புற்று நோயை ஏற்றார்.

யோகீந்திரனை ராமகிருஷ்ணர் ஆத்மிகத்தில் மட்டும் பயிற்றுவிக்க வில்லை. உலகியலையும் அவனுக்குப் போதித்தார். முன்பு உலக மக்களைப் பற்றி ஏதும் அறியாத கபடற்ற சதாதரராக இருந்தவர் இப்போது எவ்வாறோ மக்களின் நானா தரங்களையும் அறிந்திருந்தார்!

ஒரு முறை தனது வீட்டுக்காகக் கல்கத்தா பாராபஜாரில் ஒரு வாணலி வாங்கச் சென்றான் யோகின். கடைக்காரரிடம் சத்தியத்தைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் பிரசங்கம் புரிந்து

விட்டு, ''ஆனபடியால், நீயாகவே அதிக லாபம் இல்லாமல் ஒரு விலையைப் பெற்றுக்கொண்டு நல்லதொரு வாணலியாகப் பார்த்துக் கொடு'' என்று கூறினான். கடைக்காரன் கொடுத்த வாணலியை வாங்கிக்கொண்டு அவன் சொன்ன விலையையும் தந்துவிட்டு, தனது உபதேசம் காரணமாக அவன் நியாயமாகவே நடந்திருப்பான் என்ற திருப்தியுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் யோகின்.

வாணலியை அடுப்பில் ஏற்றிப் பார்த்தனர் பெண்டுகள். அடுப்பே அணைந்து போய் விட்டது. ஆம், விரிசல் வாணலியை யோகினின் தலையில் கட்டியிருக்கிறான் அவனிடம் உபதேசம் பெற்ற கடைக்காரன்.

''என்ன அநியாயம் பார்த்தீர்களா!'' என்றான் யோகீந்திரன் ராமகிருஷ்ணரிடம்.

ராமகிருஷ்ணர் சிரித்தார்.

''இது உலகம் அப்பனே, உலகம்! அப்படித்தான் இருக்கும். கடைக்காரனை ஏன் குற்றம் சொல்கிறாய்? தவறு உன்னுடையது! ஒரு பண்டத்தை வாங்கியவன் அதைப் பரிசோதிக்க வேண்டாமா? கடைக்காரனின் தொழில் வியாபாரமே தவிர சத்தியத்தை நிலைநாட்டுவதல்லவே! நீ தெய்வ பயம் உள்ளவனாரு. நல்லதுதான். ஆனால் அதற்காக எல்லாரும் அப்படியே இருக்க வேண்டும், அல்லது இருக்கிறார்கள் என்று நினைத்துவிட முடியுமோ? தெய்வ பக்தியோடு இரு; அதற்காக முட்டாளாக இருந்து விடாதே! முட்டாள் பட்டம் வாங்கிக் கொள்ளாதே! உலகத்து ஜனங்களிடம் அவர்களின் தாரதம்மியமறிந்து தான் பழக வேண்டும். ஒரு கடைகண்ணிக்குப் போனால் நல்ல பண்டமா, எடை சரியா என்றெல்லாம் நீயேதான் கவனித்துப் பார்க்க வேண்டும். சில பொருள் வாங்கினால் அதற்குக் கொசுறு போடுகிற வழக்கமுண்டு. அதைக் கண்டிப்பாகக் கேட்டுப் பெறவேண்டும்'' என்றெல்லாம் யோகினுக்கு உலகியலைச் சொல்லிக் கொடுத்தார் துறவி.

யோகீந்திரனுக்குக் கலியாணம் செய்து பார்க்க வேண்டும் என்று அவனது அன்னைக்கு ஆசை பிறந்து வலுத்தது. 'பாசக் கடலில் வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலை' அடைய ஏங்கிக் கொண்டிருந்த யோகின் மறுத்தான். அன்னை அழுது அடம் செய்தாள். சட்டென்று இளகி விட்டான் யோகின். திருமணமும் ஆகி விட்டது.

அதன் பின் ராமகிருஷ்ணரிடம் வரவே அவனுக்கு லஜ்ஜையாக இருந்தது. 'பட்சி தீண்டாத பழம் வேண்டும் என்று அவர் காத்திருந்து, அப்படிப் பட்ட ஒரு பழமாக என்னை நினைத்ததென்ன? நான் இப்படி உலகுக்கு உழைக்க முடியாமல், என் பரகதிக்கும் உழைத்துக் கொள்ள முடியாமல் இல்லறம் ஏற்றதென்ன?' என்று நினைந்து நெஞ்சுருகினான் யோகின்.

தக்ஷிணேசுவரத்துக் கோயிலிலிருந்து ஓர் ஆள் வந்து சேர்ந்தான். கோயிலைச் சேர்ந்த ஒரு நபரைக் குறிப்பிட்டு, ''அவர் உங்கள் கல்யாணத்துக்கு முன் உங்களிடம் பணம் கொடுத்து ஏதோ பண்டம் வாங்கித் தரச் சொன்னாராம். நீங்களும் வாங்கித் தந்தீர்களாம். ஆனால் அதன் விலை போக மீதப் பணம் உங்கள் கையிலேயேஇருக்கிறதாமே! இது பட்டாசாரியருக்கு (ராமகிருஷ்ணர்) தெரிந்து விட்டது. 'பாக்கிப் பணத்தை எப்போது தருவதாக உத்தேசம்? தருவதாக உத்தேசமேனும் உண்டா?' என்று அவர் கேட்டு வரச் சொன்னார்'' என்றான்.

யோகீந்திரனுக்கு ரோஷம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''அப்படியா கேட்டனுப்பினார்? இதோ நானே வருகிறேன், கடைசி முறையாக'' என்று கிளம்பினான்.

தூரத்தில் வரும் போதே ராமகிருஷ்ணர் அறை வாசலில் தமது வழக்கப்படித் துணியைச் சுருட்டிக் கட்கத்தின் கீழ் வைத்தபடி நிற்பது தெரிந்தது. யோகீந்திரனின் இதயம் கத்தளித்தது.

சாந்தி வழியும் சமாதி நிலையில் அவனை அணுகினார் ஆசான்.

''என் மகனே! உன் உள்ளம் எனக்குத் தெரியாதா? நீ லட்சம் பெண்களைக் கலியாணம் செய்து கொண்டால்தான் என்ன? அதனால் என்னுடையவன் அல்லாமல் போய் விடுவாயா? என் அன்பு உனக்கு என்றும் உண்டு. அது உன்னை என்றும் ரட்சிக்கும். இல்லறத்திலிருந்து கொண்டே பகவானை உணர்ந்தவர் இல்லையா? உனக்கும் உன் மனைவிக்கும் அப்படி அருள் கிட்ட ஆசி கூறட்டுமா?'' என்றார்.

யோகின் அந்த அன்பில் கரைந்து போய் விட்டான்! தன்னை தக்ஷிணேசுவரத்துக்கு வரவழைப்பதற்காகத்தான் அந்தப் பணபாக்கி விஷயத்தைச் சொல்லி அனுப்பியிருக்கிறார் அவர் என்றும் புரிந்து கொண்டான்.

இதுவே தான் கடைசி முறை தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வருவது என்று சொன்னான் அல்லவா? அதை வேறு

விதத்தில் மெய்ப்பித்து விட்டான் யோகின். இனி ஆலயத்தை விட்டு விடு செல்வதே யில்லை என்று முடிவு செய்து கொண்டான்.

''வேண்டாம்! குருமஹராஜ். வேண்டாம்! சம்சாரத்திலிருந்து கொண்டு லோக சேவை செய்வதோ, ஆத்ம அநுபவம் பெறுவதோ மடி நிறையக் கல்லைக் கட்டிக் கொண்டு நீரில் இறங்கிய பின் நீந்த முயல்வது போலத்தான்! இல்லறக் கடலில் நான் இறங்கினாலும் உங்கள் அருளால் என்னைக் காப்பீர்கள் என்று நான் அறிவேன். ஆனால் என்னாலேயே இயன்ற ஒரு காரியத்துக்காக உங்கள் அருட் சக்தியைச் செலவிட வேண்டாம்.

''இனி நான் உங்களை விட்டுப் போக மாட்டேன். எனக்கு அன்னை தந்தையெல்லாம் நீங்கள்தான். அன்னைக்கும் மேலே நீங்கள். ஆம்...என் தாய் கூட...'' என்றவன் திக்கித் திணறினான்.

பிறகு தொடர்ந்தான்: ''என் தாய் கூட என்னை நம்ப வில்லை. அவளுக்காகத்தான் நான் கலியாணம் செய்து கொண்டேன்; என் ஆத்மாவையே தியாகம் செய்து கொண்டேன் என்பதை அவள் நம்பத் தயாராக இல்லை. எங்களுக்குள் ஏதோ வாக்குவாதம் நடந்த போது 'உனக்கே உள்ளூற ஆசை இருந்துதான் இருக்கும். என் பிடிவாதத்தைக் காரணம் காட்டிக் கலியாணம் செய்து கொண்டாய்! அவ்வளவுதான்' என்று தூக்கியெறிந்து பேசி விட்டாள்! அதை என்னால் தாங்கவே முடிய வில்லை ஐயா! பெற்றவள் கூட நம்பாத என்னை நீங்கள் நம்பி வலிய வரவழைத்து விட்டீர்கள். இனி நான் உங்களை விட்டுப் போக மாட்டேன்'' என்று கூறி அவரைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டான் யோகின்.

அன்று இரவெல்லாம் யோகினுக்கு நித்திரை வர வில்லை. விழித்துக் கொண்டே புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். 'இதோ, தனது அருகில் சயனித்திருக்கும் குருவும் உறங்க வில்லை! இந்த நள்ளிரவில் எழுந்திருக்கிறாரே! எழுந்தவர் வெளியே அல்லவா கிளம்பி விட்டார்! எங்கே போகிறார்?'

சிறிது போது சென்றது. ராமகிருஷ்ணர் அறைக்குத் திரும்பவில்லை. அவர் எங்கே போயிருப்பார் என்பதிலேயே யோகினுடைய சிந்தனை ஆழ்ந்திருந்தது.

'ஆகா, தனக்கு ஏன் இப்படி ஒரு படுபாதகமான எண்ணம் தோன்றுகிறது! இப்படி எண்ணியதற்காக என்னையே நான் மன்னித்துக் கொள்ளமுடிய வில்லையே. இருந்தாலும் அந்த எண்ணம் மட்டும் என்னை விட்டு நீங்க மாட்டேன் என்கிறது. என் சந்தேகம் ஒரு வேளை.... மெய்யானதுதானோ? ஏன் இருக்கக் கூடாது?....'

யோகீந்திரனால் அதற்கு மேல் படுத்திருக்க முடிய வில்லை. அறையிலிருந்து வெளியே வந்தான். பதுங்கிப் பதுங்கி நடந்து சென்று ஓரிடத்தில் நின்று கொண்டான். அங்கிருந்து பார்த்தால் நஹவத் என்ற சங்கீத மண்டபம் தெரியும். அங்குதான் ராமகிருஷ்ணரின் கரம் பற்றியவள் வாழ்ந்து வந்தாள்!

உடலெல்லாம் வியர்த்துக் கொட்ட, உள்ளமெல்லாம் பதறித் துடிக்க நின்ற யோகின், பிதுங்கிவிடுவது போன்ற விழிகளால் நஹவத்தின் கதவையே அந்த இருளில் துழாவிக் கொண்டிருந்தான். 'சர்வேசுவரி, அந்தக் கதவு திறக்காமலிருக்க வேண்டுமே! என் சந்தேகம் பொய்யாகப் போக வேண்டுமே' என்று அவனுடைய உள்ளம் புலம்பியது.

அப்போது பஞ்சவடியின் திசையிலிருந்து சரக் சரக் கென்று பாதரட்சைகளின் ஒலி நெருங்கியது. வியர்த்துப் போன உடம்பில் 'சில்'லென ஒரு ஸ்பரிசம் அழுந்தியதும் திரும்பினான் யோகின். அவனது முகம் தொங்கிப் போயிற்று.

யோகினுடைய முகவாயைப் பிடித்து நிமிர்த்தியது பனி மலரனைய திருவிரல்கள். தன்னாலேயே அடக்க மாட்டாது கண்களைத் திறந்து நேரே தெரிந்த பரிசுத்தத்தைப் பார்த்தான் யோகின்.

பஞ்சவடியில் தியானம் புரிந்து வந்த சாந்தியுடன் தூய்மை அவனைப் பார்த்துப் பேசியது:

''ஏன் லஜ்ஜை, என் குழந்தாய்? சொல்வதும் செய்வதும் ஒன்றாக இருப்பதுதானே ஆசாரியரின் உண்மையான லட்சணம்? அந்த லட்சணம் அவரிடம் இருக்கிறதா என்று பரிசோதிக்க சிஷ்யனுக்கு நிச்சயமாக உரிமை உண்டு கண்மணி! சிஷ்யனை ஆசாரியன்சோதிக்கிறான் என்றால், அந்த ஆசாரியனுக்கே தன் வாழ்வை அர்ப்பணிக்க வந்த சிஷ்யன் அவனைச் சோதிக்கக் கூடாதா? அதோடு பழமொழியும் இருக்கிறதே—'சாதுவைப் பகலில் மட்டும் பாராதே; இரவிலும் பார்' என்று! இரவில் பார்த்துவிட்டாய் அல்லவா? ஓடி வா, நிம்மதியாகத் தூங்கு'' என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் பிரவேசித்தார் தூய்மையும் வாய்மையும் ஒருருவான துறவி வேந்தர்.

சூரியனுக்குத் தனது ஒளியில் அவநம்பிக்கை யிருக்குமா? தன்னை யாரேனும் சோதித்துப் பார்த்து ஒளியற்ற

சொந்தமாகத் தொழில் நடத்தும் பொற்கொல்லர்களே

1963, ஜனவரி 10ந் தேதிக்கு முன்பு, ஓர் ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு சொந்தமாக நீங்கள் தொழில் நடத்தி வந்திருந்தால்—

ஒரு வியாபாரி அல்லது வெளியில் வேலை செய்யும் தொழிலாளியாக ஏற்கனவே லைசென்ஸ் பெருதிருந்தால்—

தங்கக் கட்டுப்பாடு விதிகளின்படி சில நிபந்தனைகளின் பேரில் ஒரு சர்டிபிகேட் நீங்கள் இப்போது பெற்றுக் கொள்ளலாம்.

இதன் மூலம் 14-காரட்டுக்கு மேற்பட்ட மாற்றிலுள்ள தங்க நகைகளை அழித்து அதே அளவுள்ள மாற்றில் புதுப்பித்துக் கொடுக்கலாம்.

சர்டிபிகேட்டுக்கான விண்ணப்ப பாரம், சீக்கிரம் எல்லா தபால் நிலையங்களிலும் கிடைக்கும். அல்லது உள்ளூர் ரெவின்யு அதிகாரியிடம் கிடைக்கும்.

1-ரூபாய் மத்திய எக்சைஸ் ரெவின்யு ஸ்டாம்புடன் உங்கள் விண்ணப்பத்தை துரிதமாக அனுப்பி வையுங்கள்.

1963, டிசம்பர் 31ந் தேதிக்கு முன்பாக சர்டிபிகேட்டுகளை வாங்கிக் கொண்டாக வேண்டும்.

உங்கள் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து சர்டிபிகேட்டுகள் வழங்கும் வரை, உங்கள் தொழிலை நடத்தி வரலாம்.

தங்கக் கட்டுப்பாடு நிர்வாகம்

இந்திய அரசாங்கம்

DA 63/292


சந்தேகமென்ன?
பின்னியின்
தூய பட்டு (ஜார்ஜெட்)
புடவைதான்!
பரவசமூட்டும் பல வண்ணங்களிலும், கண்கவரும் டிசைன்களிலும், ஜார்ஜெட், ஷிப்பான், மற்றும் மென்பட்டு ரகங்களில் கிடைக்கிறது.

வன் என்று கூறிவிடுவர் என்று அவன் அச்சம் கொள்வானு? அவனது ஒளியைச் சோதிக்க எண்ணி நெருங்குபவர்தான் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்! ர

யோகின்தான் பிற்காலத்து யோகாநந்தர். காமத்தை வென்றவர்களில் அவருக்கு ஈடாக யாரும் கிடையாது என்று ஸ்வாமி விவேகாநந்தர் கூறுவார்.

'நான் தக்ஷிணேசுவரத்துக்கு வருவதோ போவதோ குருநாதருக்கு என்ன பொருட்டு?' என்று யோகாநந்தர் நினைத்தாரல்லவா? ஆனால் உண்மையில் ராமகிருஷ்ணர் தம்மைச் சீடர்கள் பிரியாமல் இருக்க வேண்டுமே என்பதில் கொண்டிருந்த கருத்து கொஞ்ச நஞ்சமல்ல என்பது ஸ்வாமி பிரேமாநந்தரின் குருகுல வாஸத்தைப் பார்த்தால் தெரியும்.

அப்போது பிரேமாநந்தருக்கு பாபுராம் என்று பெயர். நரேந்திரநாதன் ராமகிருஷ்ணரை ஆசிரயித்ததற்குச் சில நாட்கள் பின்னர் பாபுராம் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தார். அவர் முதன் முறை வந்த போது ராமகிருஷ்ணர் பாவ சமாதி நிலையில் பவதாரிணியின் சந்நிதியிலிருந்து தமது அறைக்கு வந்து கொண்டிருந்தார். ஆனந்தஅழுத்தத்தில் தம்மாலேயே தாங்க முடியாத அவரதுதிருமேனியை அணைத்துப்பிடித்து அவரை ராகால் அழைத்து வந்துகொண்டிருந்தார் — 'இங்கே படி ஏற வேண்டும்; இங்கே இறங்க வேண்டும்' என்றெல்லாம் வழி கூறியவாறு.

சமாதி நிலை கலைந்தபின் பாபுராமைப் பார்த்தார் ராமகிருஷ்ணர். 'அவன் அனுப்பி வைத்த பிள்ளைதான்' என்று தெரிந்தது. நிச்சயம் செய்து கொள்வதற்காக பாபுராமை அருகில் கூப்பிட்டு அவனது முழுங் கையிலிருந்து விரல் முடிய உள்ள பகுதியைத் தமது கரத்தில் தூக்கி எடை போட்டுப் பார்த்தார். 'பேஷ்' என்றார். ஒருவரது ஆத்மிகத்தை அளக்க ராமகிருஷ்ணர் கையாண்ட அனந்தமான முறைகளில் இதுவும் ஒன்று.

'பேஷ்' என்றாரா? அப்புறம் என்ன? நதி கடலில் கலந்து விட்டது.

ஆனாலும் அது கலந்து விட்டதா என்று கடலுக்குச் சந்தேகம் தோன்றியது. காரணம் இதுதான்:

பாபுராம் தனக்கு பாவசமாதி அருள வேண்டும் என்று குருவிடம் கேட்டான். ஏனோ அவரால் அப்படி அருள முடியவில்லை.

''ஏன் நான் எவ்வளவோ பிரார்த்தித்தும் எனக்கு பாவ நிலை அருள மறுக்கிறீர்கள்?'' என்று அவருடன் வாதிட்டான் பாபுராம்.

அப்போதுதான் ராமகிருஷ்ணர் சிஷ்யர் தம்மை விட்டுப் பிரிந்து விடுவாரோ என்பதில் குழந்தை போலப் பயந்து போனார்.

''ஏனோ அவனுக்குப் பாவ சமாதி அளிக்க வேண்டுமென எனக்குத்தோன்றவில்லை. இதனால் அவன் என்ன செய்வானோ? என்னை விட்டுப் பிரிந்தே விடுவானோ? அப்படியானால் நான் என்ன செய்வேன்?'' என்று கண்டவர்களிடமெல்லாம் வருத்தப்பட்டுக் கொண்டார்.

இது சுயநலமான வருத்தமா என்ன? சர்வமத சமரஸத்தையும், வேதாந்த சத்தியத்தையும் உலகில் பரப்புவதற்காகப் பிறந்தவர்கள் அப்படிச் செய்யாமல் போய் விடுவார்களோ என்றுதான் ராமகிருஷ்ணர் கலங்கினர்.

பாபுராமிடமே அவர் கூறினர்:

''என் சின்னக் குழந்தையே! வரம் தருவதும் தராமல் இருப்பதும் என் சொந்தக் கருத்தில் செய்வதாகவா நினைக்கிறாய்? சர்வேசுவரியின் சங்கல்பப்படிதான் நான் நடக்க முடியும்'' என்றார் ராமகிருஷ்ணர்.

'' அப்படியானால் சர்வேசுவரியிடம் எனக்காகப் பேசுங்களேன்'' என்றான் பாபுராம்.

பேசினார்.

அவளோ, ''பாபுராம் பாவசமாதிக்குப் பிறக்கவில்லை. அவன் ஞான மார்க்கத்திலே செல்ல வேண்டியவன்'' என்று கூறி விட்டாள்.

பாபுராம் அப்படியேதான் பரம ஞானியானான். பிரேமாநந்தரானான். பாபுராமின் பெருமையை ராமகிருஷ்ணரின் வாய்மொழியிலேயே பார்க்கலாம்:

''நான் சமாதியுறும் சில சமயங்களில் சுத்த ஸத்துவமின்றி வேறெது அருகில் வந்தாலும் என்னால் தாங்க முடியாது. அச்சமயங்களில் பாபுராம் ஒருவன்தான் என்னைத் தீண்ட முடியும். அவன் உணவூட்டினால்தான் என்னால் உண்ண முடியும்'' என்பார் ராமகிருஷ்ணர்.

எளிமையே உருவானவர் பாபுராம். அவர் ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை செய்வதை முதன் முறை கண்ட போது சாரதாநந்தரும் இதர சிஷ்யர்களும் யாரோ பூஜாரியின் மகன் என்று தான் நினைத்தார்கள். சிறிது காலத்துக்குப் பிறகு அவர் சர்வ கலாசாலைப் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே வருவதைப் பார்த்தபோது அவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டதாம்! (தொடரும்)



வெள்ளித்திரை மலர்

கல்கி வெள்ளித் திரை மலரில் 'திரைப் படங்கள் மூன்று வகை' என்ற பேராசிரியர் 'கல்கி' அவர்களின் கட்டுரையிலிருந்து 'சீதா மணி சினிமா பார்க்கிறாள்' என்ற 'மாதர் உலக' ஹாஸ்யக் கட்டுரை வரையிலும் ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக அமைந்துள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு வகையில் சிறந்து விளங்குகிறது. சினிமா என்றாலே ஏதோ மாய உலகம், அதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாருமே சுகபோகத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் என்ற பிரமையை நீக்குவதாகவும், ''படம் நன்றாக இல்லை'' என்ற ஒரே வார்த்தையைச் சொல்லி விட்டு சுலபமாக எழுந்து வந்துவிடுகிறோமே, உண்மையில் தயாரிப்பவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு எடுக்கிறார்கள் என்ற உண்மை நிலையை விளக்குவதாகவும், சத்யஜித் ரேயைப் போல நமது படத் தயாரிப்பாளர்களும் பரிசுகளைப் பெறத் தக்க படங்களை எடுக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்ற புத்தியைப் புகட்டுவதாகவும் அமைந்திருக்கின்றன ஒவ்வொரு கட்டுரையும். பக்கத்துக்குப் பக்கம் பழைய சிறந்த படங்களிலிருந்து காட்சிகளைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டிருப்பது மிகவும் நன்றாக இருக்கிறது. மொத்தத்தில் அரசாங்கம் சினிமாத் தொழிலின் மீது இரக்கம் காட்டுவதற்கும், படத் தயாரிப்பாளர்கள் ரசிகர்களின் தேவையையும் சர்க்காரின் ஆதரவையும் பெறத் தக்க படங்களை எடுப்பதற்கும், ரசிகத் தன்மை காலத்துக்குக் காலம் எப்படி மாறுபட்டு வந்திருக்கிறது, இன்னும் எந்த விதமாக நம் படங்களை ரசிக்க வேண்டும் என்பதை மக்கள் புரிந்து கொள்வதற்கும், ஓர் இணைப்புப் பாலமாக அமைந்துவிட்டது மலர். —கே. ரகுபதி

கும்பகோணம்
19—9—63

'கல்கி' வெள்ளித் திரை மலரில் வெளி வந்துள்ள கட்டுரைகளில் திரு அகிலனின் கட்டுரை தான்—குறிப்பாக அதன் பிற்பகுதி — இன்றையத் தமிழ் சினிமா உலகின் பிரத்யட்ச நிலையை விளக்குகிறது.

கலைஞர்கள் முதல், காணுவோர் வரை எல்லாருமே இதைஉணர்ந்து நேர்மை உணர்ச்சியை மேற் கொண்டால் கவியரசி சரோஜினி தேவி கூறியது போல நாடக சாலைகளும் படக் காட்சி சாலைகளும் சாதாரண மக்களின் சர்வகலாசாலைகள் ஆகும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

பெல்லாரி
22—9—63 — வி. சுந்தரராமன்

'கல்கி' திரைப்பட மலர் சிறப்பாக அமைந்துள்ளது. ஒரு குறை. திரைப் படத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களின் அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பது போலவே, அவற்றின் வெற்றி தோல்விகளுக்குக் காரணமான ரசிகர்களில் சிலரது அபிப்பிராயங்களையும் போட்டிருக்கலாம்.

சென்னை
21—9—63 — வி. தியாகராஜன்

திரைப் படத்தின் வளர்ச்சி குறித்து, சரியான சமயத்தில் இம்மலரைக் கொண்டு வந்தது சிறப்பானதாகும்.

சென்னை
19—9—63 — பி. ஆர். ராஜாராம்

இந்தியத் துணை கண்டத்திலேயே இரண்டாவது மாபெரும் தொழிலாக இடம் பெற்றுள்ள திரைப் படத் தொழில் இன்று பொன் விழாக் கொண்டாடும் நிலையில் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன். ''கல்கி'' திரை மலர் தென்னக ரசிகப் பெரு மக்களுக்குத் தெவிட்டாத தேன்பாகு; மணம் பரப்பும் முல்லைக் காடு; திரை உலகின் அமர காவியம் என்று கூறினால் மிகையாகாது.

கும்பகோணம்
19—9—63 — [பி. கே. டி. ஷண்முகம்

தென்னாடெங்கும் பாகவதர் நடித்த படங்கள் வெகு நாட்கள் ஓடிப் பிரபலமானதையும், அவர் தமக்கென்று தனிச் சிறப்பை தேடிக் கொண்டார் என்பதையும் மறக்க முடியாது.

பாகவதரின் நடிப்பைப் பற்றியோ அல்லது அவரின் புகழ்பெற்ற பாட்டுக்களைப் பற்றியோ தங்கள் திரைப்பட மலரில் சொல்லாமல் விட்டது ஏன்?

டி. எஸ். வைகுண்டம்
கல்கத்தா
29—9—63



'கல்கி திரைப்பட மலரில் இத்தனை நட்சத்திரங்களின் படங்களைப் போட்ட 'கல்கி' காலம் சென்ற எம். கே. தியாகராஜ பாகவதரின் படத்தைப் போட மறந்தது ஏனோ? அவர் நடித்த படங்களும், பாடல்களும் இன்றும் தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்கின்றனவே!

லக்ஷ்மி மகாதேவன்
பம்பாய்
20—9—63

'கல்கி'யின் வெள்ளித் திரை மலர் ஓர் ஒப்பற்ற விருந்து. ஆனால் எம். கே. தியாக ராஜபாகவதரின் படத்தை வெளியிடாமல் ரசிகர்களை ஏமாற்றக் கூடாதல்லவா?

சென்னை
24—9—63 நா. அ. ஈசுவரன்

''சிந்தாமணி'', ''சிவகவி'', திருநீல கண்டர்'', ''அம்பிகாபதி'', ''அசோக் குமார்'', ''ஹரிதாஸ்'' முதலிய வெற்றிப் படங்களில் நடித்துப் பாடிய காலஞ் சென்ற திரு பாகவதர் அவர்களைப் பற்றி ஒரு வரியோ படமோ வரவில்லை. பாகவதர் படங்கள் வருஷக்கணக்கில் ஓடினவே! மறந்துவிட்டதா?

திருச்சி
19—9—63 அருணு நமசிவாயம்

'கல்கி' வெள்ளித் திரை மலர் மிக்க கவர்ச்சியோடும், கலைக் திறனோடும் வெளி வந்துள்ளது. இசையுலக மேதை, தென்னகத் திரையின் ஒளிவிளக்கு, ஏழிசை மன்னர் எனப் போற்றப்படும் எம். கே. தியாகராஜ பாகவதரைப் பற்றிக் குறிப்பிடாதது இசை ஞான முன்னவர்கட்கும் பெரும் மன வருத்தத்தை உண்டாக்கி விட்டது. கல்கியின் வளர்ச்சியில் உங்களுக்கு எவ்வளவு பங்கு உண்டோ அவ்வளவு, வாசகர்களாகிய எங்களுக்கும் உண்டு என்ற உரிமையில் இதை எடுத்துக் கூற நேர்ந்தது.

மாமல்லை
22—9—63 ஜே. நடராஜன்

[கந்தர்வகான ஏழிசை மன்னர் எம். கே. தியாக ராஜ பாகவதர் நூறு வாரங்கள் ஓடிய பல தமிழ்ப் படங்களின் பெருமைக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் என்பதைக் 'கல்கி' மறந்து விடவில்லை. மறக்க முடியாத திரைப் படங்களில் பாகவதருக்கு உரிய மதிப்புக் கொடுக்கப்பட்டதை நேயர்களும் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் வெள்ளித்திரை மலரில் பாகவதரின் படம் வெளியிடாதது நேயர்களின் உணர்ச்சியை எவ்வளவு தூரம் பாதித்து விட்டது என்பதை எங்களுக்கு வந்த ஏராளமான கடிதங்களின் மூலம் அறிய முடிந்தது. ஆகவே தமிழ்ப் படத்துக்கொரு பாகவதராக விளங்கிய எம். கே. டி. அவர்களின் படத்தை மகிழ்ச்சியுடன் பிரத்தியேகமாக வெளியிட்டிருக்கிறோம்.—ஆசிரியர்]

சகோதரிகளுக்கு ஒரு யோசனை.....

ஏறக் குறையப் பதினறு வருட காலமாக நம் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்று வரை ஆளும் அரசாங்கம் என்ன செய்தது? பணத்தை அதிகமாக அச்சிட்டு ''பார் உனக்கு வருமானம் அதிகமாக்கியுள்ளோம்'' என்று கூறி பண வீக்கத்தை ஏற்படுத்தி யுள்ளனர். ஊதியம் அதிகமாக வந்து என்ன பயன்? விலைவாசியின் ஏற்றத்தைத் தடுக்க ஏதாவது ஏற்பாடு செய்தனரா? எதற்கெடுத்தாலும் வரி வரி என்று சொல்லி வியாபாரிகள் விலையைக் கூட்டுகின்றனர். நம் பெற்றோர் காலத்தில் நம் தந்தையர் ரூபாய் முப்பது சம்பளம் வாங்கியதும் நம் கணவன்மார் இக்காலத்தில் முந்நூறு வாங்குவதும் ஒன்றே.

எதற்கெடுத்தாலும் பெண்களுக்கு சம உரிமை வேண்டுமென்ற பேச்சுத்தான். சம உரிமை வேண்டியதுதான். அது எப்படி என்று இடையாதா? ஒரு குடும்பப் பெண் கூடியவரையில் தன் கணவனுடன் ஒத்துழைத்து அமைதியை நிலைநாட்டி அளவோடு வரும்படிக் கேற்றவாறு சிக்கனமாகச் செலவுகளையும் கட்டுப்படுத்தி அதே சமயம் தன் கணவனையும் பொதுக் காரியங்களில் ஈடுபடத் தூண்டினுல் ஆகாத காரியம் என்ன? இதை ஆராய்ந்து பார்க்காத இளம் பெண்கள் தாங்களும் வேலைக்குப் போகத்தான் போவோம் என்று புறப்படுவது நமது பழக்க வழக்கங்களுக்குப் புறம்பானது. மேலும் நாட்டில் ஜனத் தொகைக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்கள் சரியாக ஏற்படாமையால் வேலை இல்லாமல் ஆண்கள் திண்டாடும் சமயத்தில் பெண்கள் ஆண்களுக்குப் போட்டியாக வேலைக்குப் போவது, ஆண்களின் வேலை இல்லாத் திண்டாட்டத்தை இன்னும் அதிகப்படுத்தும் என்பது திண்ணம். நம் நாட்டு ஜனத் தொகைக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாமல் திணறும் சர்க்கார் மக்களுக்குப் பணத் தாசையை உண்டுபண்ணி நமது சமூகக் கட்டுத் திட்டங்களையும் அழித்து நம்மைச் சீர்குலைய வைத்துள்ளது.

அப்படியிருக்க இதை அறியாத நம் சகோதரிகள் சுதந்திரக் கட்சியில் மெம்பர்களாகச் சேருகிறீர்களா என்றால் 'எனக்கு எதற்கு? பணக்காரக் கட்சியான காங்கிரஸையே ஒரு நன்மையும் கிடைக்கவில்லை. இப்போது ஆரம்பித்துள்ள கட்சி என்ன செய்யப் போகிறது?' என்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் அரசாங்கத்தினர் நம் போன்ற சகோதரிகள் அணிந்துள்ள நகைகளைப் பிடுங்கத் திட்டமிட்டிருப்பதைப் போல் அக்கிரமமான செயல்களைச் சுதந்திரக் கட்சி ஒருபோதும் செய்யாது. பெண்கள் கூடுமான அளவு பொதுக் காரியங்களில் ஈடுபட்டு உழைக்க ஆண்களுக்கு உதவ வேண்டும். அதற்காக வருடம் பூராவும் பொதுக் காரியங்களில் ஈடுபட வேண்டாம். வாரத்தில் இரண்டொரு நாட்கள் மட்டும் அந்த வேலைகளைச் செய்யப் போகிய நேரத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு சகோதரியும் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து தன் கணவனையும் சேருமாறு ஊக்கப்படுத்தி அதன் மூலம் காங்கிரசுக்கு எதிராகஒரு நல்ல பலமுள்ள எதிர்க்கட்சியாக சுதந்திரக் கட்சியை ஆக்கவேண்டும். உங்களால் ஆன ஒத்துழைப்பைக் கட்சிக்கும் மதிப்புக்குரிய ராஜாஜி அவர்களுக்கும் நல்குக. தீர்க்கதரிசியான அவருடைய சீரிய கருத்துக்கள் ஒருபோதும் வீணுவதில்லை.

—ஸ்ரீமதி ருக்மிணி



இலவசம்
1 டின்
மாம்பழ ரசம்!
ஏதாவது 2 ரக
கிஸான் சரக்குகள்
வாங்குபவர்களுக்கு மட்டும்
ஏதாவது இரண்டு ரக கிஸான் சரக்குகள் வாங்கி ஒரு டின் மாம்பழ ரசம் (மாங்கோ நெக்டார்) இலவசமாய்ப் பெறுங்கள். கிஸான் ஸ்க்வாஷ்கள், கிரஷ்கள், ஸிரப்கள், ஜாம்கள், ஜெல்லி, மார்மலேட், டின் செய்த பழ வகைகள், பழ ரசங்கள், தக்காளி வகைகள்.
இந்த இலவச திட்டம் சென்னை, கேரள ராஜ்யங்களிலும், பாண்டிச்சேரி, மங்களூர் முதலிய இடங்களிலும், 1963 அக்டோபர் 7 முதல் நவம்பர் 9 வரை, அமுலில் இருக்கும்.
கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்


வாழ்க்கை ஒளிகளின்
வனப்பான அழகு
ஸான்போரைஸ்ட் பாப்லின்ஸ்:
கோல்ட் ட்ரிங்க், ப்ளூபர்ட், எவர் ப்ரைட,
குட் ஷைன்.
ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமச
தோதீஸ்: ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல்,
ப்ளாடினம், காம்ராஜ்
ஸூட்டிங்ஸ்,
காபர்டீன்
செளவான கலர் புட்டாக்கள்;
ப்ரின்ட்ஸ்:
ப்ரின்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்லின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரின்ட் ஸாரீஸ்
2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—ஸ்ரிஜுவிலும்
புட்டாக்களிலும்
·SANFORIZED·
Arvind
Quality
FABRICS
அரவிந்த்
மில்ஸ் லிமிடெட் அஹமதாபாத்

மாதர் உலகம்

நெய் செய்வது எப்படி?

அனுசூயா



கொஞ்சமாகப் பத்து பலம் பாதாம் பருப்பை எடுத்துக் கொள்ளுங்கள்.

பாதாம் பருப்பை என்று சொன்னேன்? அந்தக் கொஞ்சமும் இப்போது பதினொரு ரூபாய் விலையல்லவா? அதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

ஒரு வீசை வனஸ்பதியை எடுத்துக் கொள்ளுங்கள். வெண்ணெய் காய்ச்சின நெய் என்று சொல்கிறார்களே அதில் இரண்டு பலம் எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டையும் நன்றாகக் கலந்து கொள்ளுங்கள்.

இதோ 'போலி நெய்'! தயார்.

இந்த 'நெய்' மிகவும் மலிவாகக் கிடைக்கிறது! வீசை ரூபாய் ஏழு தான். நமது வீட்டிலேயே கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகிறார்கள். சென்னையில் இந்த நெய் விற்பவர்கள் அதிகம். அநேகமாக இவர்கள் வீட்டின் பின் பக்கமாக அல்லது தோட்டப் பக்கமாக வந்து கொடுத்து விட்டுப் போவார்கள். ஏனென்றால் சில வீடுகளில் பிள்ளைகள் இவர்களைக் கண்டால் விரட்டுவது வழக்கம். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள், 'இந்த மலிவான 'நெய்' வாங்குகிறோம் என்று பரிகாசம் பண்ணுவார்களே என்பதற்காகவும் இவர்களை வாசற்பக்கமாக வரச் சொல்லுவதில்லை.

ஸ்திரீகள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுவதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் வேறு இல்லை. நல்ல நெய் என்று சொல்லப்படுவது வீசை கிட்டத்தட்ட பதின்மூன்று ரூபாய் விலை விற்கிறது. இந்த நெய் வாங்குவதில் ஆறு ரூபாய் லாபம்தானே என்று நினைக்கிறார்கள். பண வசதியில்லாதவர்கள் மட்டுமேயன்றிப் பல பணக்காரர்கள் கூட இதை வாங்குகிறார்கள்.

இதை உபயோகிப்பது கௌரவக் குறைவானது என்று நான் சொல்லவில்லை. அந்த 'நெய்'யை நாமே தயாரித்துக் கொண்டால் என்ன என்றுதான் கேட்கிறேன். ஒரு வீசை வனஸ்பதியின் விலை ரூபாய் 4.20. இரண்டு பலம் நெய்யின் விலை 60 காசு. ஆக ஒரு வீசைப் போலி நெய்யின் விலை சுமார் நாலே முக்கால் ரூபாய்தான். அதை வீசை இரண்டு ரூபாய் லாபத்துக்கு விற்கிறார்கள். நாமே தயாரித்துக் கொண்டால் லாபத்துக்கு லாபம், பொருளும் சுத்தமாக இருக்கும். நெய் வாசனை அதிகம் அடிக்க வேண்டும் என்றால், 'நெய் வாசனை எஸென்ஸ்' சேர்த்துக் கொண்டால் போயிற்று.


வனஸ்பதி என்பது அப்பட்டமான வேர்க்கடலை எண்ணெய். ஆலைகளில் இயந்திரங்கள் கடலையிலிருந்து எண்ணெயைப் பிழிந்தெடுக்கின்றன. பிறகு அந்த எண்ணெயில் நீராவியைச் செலுத்துகிறார்கள். அப்போது அது சுத்தமாகி, வர்ணம், மணம் முதலிய எதுவும் இல்லாமல் ஆகி விடுகிறது. அந்த எண்ணெயைத்தான் 'வெஜிட்டபிள் ஆயில்' என்கிறோம்.

பிறகு திரவ ரூபமாக இருக்கும் அந்த எண்ணெயை உறையச் செய்து கெட்டியாக்கி விடுகிறார்கள். கிட்டத்தட்ட நெய் போல் இருக்கும். அதுதான் வனஸ்பதி.

சிலருக்கு நல்லெண்ணெய் உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை. கேரளவாசிகளைத் தவிர மற்ற பலருக்குத் தேங்காய் எண்ணெய் ஒத்துக் கொள்வதே இல்லை. வனஸ்பதியினால் இந்தத் தொந்தரவெல்லாம் கிடையாது. பல பெரிய ஹோட்டல்களில் நாம் நாக்கைச் சப்பிட்டுக் கொண்டு சாப்பிடும் பட்சணங்கள் எல்லாம் வனஸ்பதியில் செய்யப்பட்டவைதான். அமெரிக்காவில் பருத்திக் கொட்டை எண்ணெயை இதே மாதிரி சுத்தப்படுத்தி உபயோகிக்கிறார்கள். இதற்கு 'ஷார்ட்டனிங்' என்று பெயர். தாளித்தல், வறுவல், பொரியல் எல்லாவற்றுக்கும் அந்த எண்ணெய்தான்.

* * *

நமது பெரியவர்கள் சில புத்திசாலித்தனமான, உபயோககரமான பழக்க வழக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவற்றுள் ஒன்று கொட்டாவி விடும் போது, உள்ளங் கையை வாய்க்கு நேரே அதன் சமீபமாகக் கொண்டு வந்து விரல்களால் சொடுக்குவது. அப்படிச் செய்வதால் வாய்ப் பக்கம் பறந்து வரும், ஈ, கொசு முதலியவை வாய்க்குள் புகாதென்று சொல்வார்கள். சிலர் இந்த வியாக்கியானத்தைப் பரிகசிப்பதுண்டு. சென்ற வாரம் நடந்த ஒரு




சம்பவம் இந்த வழக்கம் எவ்வளவு நல்லது என்பதை நிரூபிக்கின்றது.

சென்ற வருடம் சீனர்கள் படையெடுத்து வந்த நேபா பிரதேசத்தில் பணி புரியும் ஓர் இராணுவ உத்தியோகஸ்தர் கொட்டாவி விட்டார். அப்பொழுது அவர் வாய்க்குள் ஓர் அட்டை சென்று விட்டது. பாவம்!

அட்டை உடலின் தோலின் மீது ஒட்டிக் கொண்டாலே இலேசில் அதைத் தள்ளிவிட முடியாது. நெருப்புத் தணலே வைத்து எடுப்பது வழக்கம். தொண்டைக்குள் போய் விட்டாலோ ? டாக்டர்கள் எப்படியோ அதை வெளியில் எடுத்து விட்டார்கள். மலைப் பிரதேசங்களில் சதுப்பு நிலமாக இருக்கும் இடங்களில் இவை அதிகம். இங்கே வயநாடு காட்டுப் பகுதிகளில் ஏராளமாக இருக்கிறது. கொட்டாவி விடும்போது வாயை மறைத்துக் கொள்ளும் வழக்கத்தைப் பற்றி அந்த உத்தியோகஸ்தருக்குத் தெரியாதோ, என்னமோ?

மூக்குப் பொடியை அட்டை பிடித்துக் கொண்ட இடத்தைச் சுற்றித் தூவினால் அது தானாக விழுந்து விடுமாம். ஆகையினால் ஒவ்வொரு போர் வீரனும் ஒரு மூக்குப் பொடி டப்பா வைத்துக் கொண்டிருப்பது நல்லது என்கிறார்கள். ஆனால் அட்டையை விடப் பொடி போடும் வழக்கம் பலமாகப் பிடித்துக்கொண்டுவிடக் கூடுமே.

அந்தக் கொட்டாவி நாம் விடுவதில்லை. நம்மைக் கேட்டுக் கொண்டு அது வருவதில்லை. நாம் மூக்கால் பிராண வாயுவை உள்ளுக்கு இழுக்கிறோம். அது இரத்தத்தைச் சுத்தப்படுத்திய பிறகு கரியமில வாயுவாக மாறுகிறது. அதைத் தான் மூக்கால் வெளியே விடுகிறோம். இந்த அசுத்த வாயு உடலுக்குள் இன்ன அளவுதான் இருக்கலாமென்று ஒரு கணக்கு உண்டு. அதற்கு மேல் போய் விட்டால், மூளை உடனே 'வாய் பிளக்கட்டும்' என்று உத்தர விடும். வாய் தானாகத் திறந்து கொள்ளும். அப்பொழுது கரியமில வாயு



வெளியேறி அதிகமான பிராண வாயு உள்ளே போகும்.

சில சமயம் உடல் பலவீனமாக இருந்தாலும், அதிகமான வேலையினால் உடல் சிரமப்பட்டாலும் கொட்டாவி வருவதுண்டு. யாராவது சளசள வென்று பேசிப் 'போர்' அடித்தாலும் இது ஏற்படும்.

இந்தக் கொட்டாவிக்கு ஒரு தனிச் சக்தி உண்டு. அது தொத்து வியாதி போல் ஒட்டிக் கொள்ளும். விடுகிற யாராவது ஒருவரைப் பார்த்துக் கொண்டே இருந்தால் அது நமக்கும் வந்து விடும். சில சமயம் சினிமா படம் பார்க்கும் போது அதில் வருபவர்கள் கொட்டாவி விடுவதைப் பார்த்தே தாங்களும் அது மாதிரி செய்பவர்களும் இருக்கிறார்கள். ஏன், இப்போது இதை எழுதும் நானே வாயைப் பிளக்க ஆரம்பித்திருக்கிறேன். உங்கள் சங்கதி எப்படியோ?

ஜப்பானில் 'கொட்டாவிப் பயிற்சி'யே அளிக்கிறார்கள். சில ஆலைகளில் வேலை செய்யும் பெண்கள் மத்தியானம் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள். பிறகு ஒருவர் 'ஒன்று, இரண்டு, மூன்று- கொட்டாவி விடலாம்' என்றதும் எல்லாரும் தாங்களாகவே கொட்டாவி விடுகிறார்கள். பிறகு உடம்பை இப்படியும் அப்படியும் வளைத்துக் கொண்டு சோம்பல் முறிக்கிறார்கள். பூனைகள் இப்படித் தானே செய்கின்றன?


ஃ ஃ ஃ


மனைவி 'சற்றேனும் ஏறுமாறாகக் கூறுவாளேயாமாகிற் கூறாமற் சந்நியாசம் கொள்' என்று ஔவைப் பாட்டி சொல்லியிருக்கிறார். அவர் கல்யாணமே செய்து கொள்ளாதவராதலால் இப்படிச் சுலபமாகச் சொல்லி விட்டார். அந்தக் காலத்தில் இவ்விதம் சந்நியாசியாகப் போகும் அழகைக் கணவன் மனைவியிடம் கூறி விட்டுப் போவதுகூட வழக்கம் போலிருக்கிறது. ''நான் சந்நியாசியாகப் போகிறேன், டாட்டா!'' என்று.

ஔவையார் புத்திமதிப்படி நடப்பதாயிருந்தால் ஆசார்ய கிருபளானி இன்று சுவாமிஜி கிருபளானியாக மாறி, இமயமலைச் சாரலில் போய்த் தங்கியிருப்பார். ஏனென்றால், அவர் மனைவி சுசேதா கிருபளானிக்கும் அவருக்கும் தகராறு. எந்த ஒரு அம்சத்தில் மனிதர்கள் ஒருவரை யொருவர் நியாயா நியாயமில்லாமல் வியவஸ்தை இல்லாமல் தாக்கிப் பேசிக் கொள்வார்களோ அந்த அம்சத்தில். அரசியல் விஷயத்தில். சுசேதா கிருபளானி இப்போது பக்கா காங்கிரஸ்வாதி. உத்தரப் பிரதேச சர்க்காரில் மந்திரியாயிருந்தவர், இப்பொழுது முதன் மந்திரி பதவியும் ஏற்று

a GIFT for a lifetime of remembrance!

Give a handsomely made, beautifully finished **SERVALL** Cabinet .... valuable personal effects will go in it.... it will serve for a lifetime, to bring back sweet memories of you and of the thoughtful day you made the gift. This is the season for gifts, this is the time to give a **SERVALL!**





SA-17

STEELAGE

Regd. Office & Works:
Opp. Post Office, Mazagaon, Bombay 10.
Phone: 41014 Grams: "SteelAge"

Showroom: Readymoney Mansion,
Vir Nariman Road, Bombay 1.
Phone: 253429

Branch Office:
71, Ganesh Chandra Avenue,
Calcutta-13. Phone: 241121.

Symbol of Security
and Beauty in Steel

Sole Distributors for South India:

SPENCER & CO. LTD., 153, MOUNT ROAD, MADRAS-2

Sub-dealers:

BANGALORE CITY: M/s. Sivson & Co., 25-26, Avenue Road, Bangalore-2; TIRUCHIRAPALLI DISTRICT: M/s. Sri Shanmuga Steel Agencies, 32, West Boulevard Road, Tiruchirapalli-8; TANJORE DISTRICT: M/s. O.S.M. Salih & Sons, Pattamangala Street, Mayuram; COIMBATORE DISTRICT (except Valparai): M/s. V. L. Gandhi & Co., Old Post Office Road, Coimbatore; ERNAKULAM DISTRICT: M/s. A. M. Mohammed Usman & Bros., Broadway, Ernakulam; TRIVANDRUM CITY: M/s. S. T. C. Thiruvadinatha Pillai & Bros., Chalai, Trivandrum-1

விட்டார். இந்தியாவில் முதல் முதன் மந்திரியான பெண்மணி இவர்தான்.

அவர் கணவரோ பொறுக்கி எடுத்த, பாணம் போல் தைக்கும் வார்த்தைகளால் காங்கிரஸையும், காங்கிரஸ் அரசாங்கத்தையும் தாக்கி வருபவர். இருந்தும், கணவனும், மனைவியும் சௌஜன்யமாக இருந்து வருகிறார்கள். இது எப்படிச் சாத்தியம்? ஒருவேளை அவர்கள் தங்களுக்குள் அரசியல் விஷயங்களைப் பற்றிக் காரசாரமாகப் பேசாமல் நாசுக்கான முறையில் பேசிக் கொள்ளலாம்.

ஆசார்ய கிருபளானி: அன்பே! உனது காங்கிரஸ் கட்சி தயவுசெய்து நாசமாகப் போகட்டும்.

ஸ்ரீமதி கிருபளானி: என் பிராண நாதா! தாங்கள் எந்தக் கட்சியில் சேர்ந்தவராக இருந்தாலும் அதுவும் அப்படியே ஆகட்டும் என்று அடியாள் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


ஸ்ரீமதி சுசேதா கிருபளானி

குடும்ப அகராதி

சகுனம்: 1963ல் காலேஜில் படிக்கும் பெண் ஒருத்தி எதிரில் வந்தால், ரயில், சினிமா, எதற்கும் டிக்கெட் கிடைக்காது. இரண்டு பேர் வந்தால் கடையில் சாமான்கள் நியாய விலைக்கே கிடைக்கும்.

கிரிக்கெட் மட்டையைக் கையில் சுற்றிக் கொண்டு வரும் வாலிபன் வந்தால் பணப்பை திருட்டுப் போய் விடும்.

அல்சேஷியன் நாய் வலமாகப் போனால் நாம் சந்திக்கப் போகும் நண்பர் அல்லது உறவினர் வள்ளென்று விழுவார்; இடமாகப் போனால் உறுமுவார்.

எதிரில் மண்ணெண்ணெய் வண்டிக்காரன் வந்தால், வழியில் ஸ்கூட்டர் பின்புறமாக வந்து முட்டும்.

எழுத்தாளர் ஒருவர் எதிர்ப்பட்டால் என்ன தான் நடக்கு மென்று சொல்ல முடியாது.

வீட்டு வேலை செய்பவள்: நியாயமாக வீட்டில் உள்ள ஸ்திரீக்குத்தான் இந்தப்பெயர் பொருந்தும். ஆனால் வீடு பெருக்கி, 'பத்து'ப் பாத்திரம் தேய்ப்பவர்களுக்குத்தான் இந்தப் பெயர் வைத்திருக்கிறார்கள். பின்னே, பெண்ணுக்கு வரன் தேடுவதைவிட ஒரு நல்ல வேலைக்காரியைத் தேடுவது மிகவும் சிரமம். அவர்கள் நீடித்து வேலை செய்து வரவேண்டுமானால் கரி என்பதே பிடிக்காத, காஸ், மண்ணெண்ணெய் அடுப்புகளில் எவர்சில்வர் பாத்திரங்களில் சமைக்க வேண்டும். பாத்திரங்களில் எதுவும் அடி பிடித்துக் கொண்டு விடக் கூடாது. தண்ணீரை விட்டு அலம்பிச் சுத்தம் செய்யும்படியான நிலைமையில் இருக்க வேண்டும். பாத்திரங்கள் உடைய வேண்டுமென்றால் நிறையப் பாத்திரங்களைப் போடலாம். அவள் தன் ஆத்திரத்தை அவற்றின் மீது காண்பிப்பாள். அவள் வீட்டுக்கார அம்மாள் கட்டிக் கொண்டிருக்கும் எந்தப் பட்டுப் புடவை மீது கண் வைத்து வருகிறளென்று தெரிந்து கொண்டு அதை அவளுக்கு நாமாகவே மரியாதையாகக் கொடுத்து விடுதல் நல்லது.

நல்ல வேலைக்காரிகளும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அடையாளம் சொல்லிக் கொள்ளாமல் நின்று விடுவது.

இப்படியும் நடந்தது!

● கிழக்குப் பாகிஸ்தானில் ஒரே ஒரு வயது தான் நிரம்பியிருந்த ஒரு குழந்தை ஒரு குடிசையில் இருந்தது. ஆனால் அந்தக் குடிசை அதற்கோ, அதன் பெற்றோர்களுக்கோ சொந்தமான தல்ல. 'குழந்தை அத்துமீறிப் பிரவேசித்தது' என்று குடிசையின் சொந்தக்காரர் அதன் மீது வழக்குத் தொடுத்தார். வழக்கு விசாரணையின் போது குழந்தை தன் தாயின் மடி மீது உட்கார்ந்துவேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. இறுதியில் வழக்கை விசாரித்த டாக்கா நகர மாஜிஸ்டிரேட் குழந்தையை விடுதலை செய்து விட்டார்.


ஆசார்ய கிருபளானி

● சென்னை வியாசர்பாடியில் இருபது வயதான ரமணி என்ற பெண் ஒரு சர்க்கார் பஸ்ஸில் ஏறுவதற்காகப் போனாள். கண்டக்டர் 'இடமில்லை' என்று கூறி ஏற்றிக்கொள்ள மறுத்து விட்டார். ஆனாலும் அந்தப் பெண் வண்டிக்குள் ஏறிக் கொண்டு கையில் இருந்த பாட்டிலால் கண்டக்டரின் மூக்கில் அடித்தாள். அவரது தொப்பை கீழே விழவே அவர் அதைப் பொறுக்கி எடுக்கக் குனிந்த போது அந்தப் பெண் அவர் தலையில் பாதரக்ஷைப் பிரயோகம் செய்தாளாம். அவள் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்போது கண்டக்டர் தன்னை வைது, மென்னியைப் பிடித்துத் தள்ளியதாகக் கூறினாள். நீதிபதி அவளுக்கு நூறு ரூபாய் அபராதம் விதித்தார்.

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்



உங்களுக்குப் பிடித்தமான
கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும்,
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத்
தவறாமல் தேய்த்து வருவது
கூந்தல் அடர்த்தியாக அழகுடன்
வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலினும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.



எல்லோரும் அதிசயிக்கும்
வண்ணம் உங்கள் கூந்தலின்
உண்மையழகை வெளிப்படுத்த
கால்கேட் உதவுகிறது.



மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

CCHO.G.4.TAM.

அத்தியாயம் பதினைந்து

நேசம் மாறவில்லை

பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

கடந்த சில தினங்களாகக் கந்தர்வப் பட்டணம் போல் குதூகலச் சோபையுடன் விளங்கிய காஞ்சி மாநகர் அன்று பொலிவிழந்து உற்சாகம் குன்றிக் காணப்பட்டது. எங்கும் எதிலும் ஒருவித ஏமாற்றமும் குழப்பமுமே விரவிப் பிரதிபலித்தன. மக்களிடையே மகிழ்ச்சி இல்லை, தெம்பு இல்லை. எதிர்பாராத ஆசாபங்கத்துக்கு உள்ளானவர்கள் போல் விரக்தியும் கவலையுமாக நடமாடிக்கொண்டிருந்த அவர்கள் ஆங்காங்கே கும்பல் கும்பலாகக் கூடி நின்று ஒருவரோடு ஒருவர் ஏதோ இரகசியம் பேசிக் கொள்வதும், தகவல் விசாரித்துக் கொள்ளுவதும், பிறகு திகிலுடன் கலைந்து செல்வதுமாக இருந்தனர்.

இந்த விசித்திர நிலைமைகளுக்கெல்லாம் ஒருமொத்த வடிவமாய்க் காட்சி யளித்த காஞ்சி அரண்மனையின் மேன்மாடத்து அறை ஒன்றிலே —

அடர்ந்து நெளிந்து அழகுறப் படிந்த கேசம்; வெண்ணீறணிந்த விசாலமான நெற்றி; வைரமணிக் குண்டலங்கள் பளிச்சிடும் செவிகள்; நெஞ்சத்து உணர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுவதற் கென்றே அமைந்தாற் போன்ற நீண்ட புருவங்கள்; அருள் ஒளி வீசும் பெரிய கண்கள்; அறிவின் ஒளிய வடிவமாக அமைந்த கூரிய நாசி; பொற்குழம்பால் பூசி மெழுகினாற்போன்ற கன்னங்கள்; நிதானம் நடை பழகும் மெல்லிய உதடுகள்; தீர்க்கமாகக் குவிந்து நிமிர்ந்த மோவாய்; உறுதியான அறுகைப் பிடரி; உருண்டு திரண்ட உயர்திண் தோள்கள்; நவமணி ஹாரங்களுடன் ஓர் எளிய சவுக்கைக் காய் மாலையும் சேர்ந்து புரளும் வச்சிர விரிமார்பு; உள்ளடங்கிக் குறுகிய புலி வயிறு; வேழ மருப்பொத்த நீண்ட கரங்கள்; வணக்கமற்ற திண்மையான கால்கள் — என்றிவ்வாறாக இராஜ லட்சணங்களின் பரிபூரணப் பொலிவோடு இடையிலே மஞ்சள் நிறப் பட்டாடையும் தோளிலே நீல வண்ணப் பட்டுத் துகிலும் தொங்கித் துவள, கடம்பவனப் பதியின் வெள்ளியம்பலத்திலிருந்து சாட்சாத் சுந்தரேசப் பெருமானே எழுந்தருளி வந்தாற்போல் சிந்தனை வயப்பட்டவராய் அமர்ந்திருந்த பல்லவ பரமேசுவரவர்மன், அங்கு நீண்ட நேரமாக நிலைத்திருந்த நிசப்தம் கலைய மெல்லப் பெருமூச்சு விட்டவாறு எழுந்து, ''ம்.... இனி நாம் என்ன செய்ய முடியும்? எல்லாம் இறைவனின்



சித்தப்படியே நடக்கட்டும்!'' என்று சோகம் கப்பிய குரலில் கூறிக் கொண்டே ஒரே சீராகப் பாதங்களைப் பெயர்த்துப்போட்டு உலாவலானான்.

இந்நேரம்வரை அவன் அமர்ந்திருந்த ஆசனத்துக்குப் பக்கத்து ஆசனமொன்றின் மேல் ஒருக்களித்துச் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்த பெரும்பிடுகு முத்தரையர் சட்டென்று ஓரடி முன்னால் வந்து, ''மன்னரவர்கள் வழக்கமாகச் சொல்லும் பதிலைத்தான் இப்போதும் சொல்கிறார்!.... ஆனால்?....'' என்று உள்ளார்ந்த சோர்வுடன் இழுத்தார்.

''ஆம். ஐயா! நமது அருமை நண்பர் பழையாறைச் சோழரும், என் அன்புச் சகோதரன் கோவிந்தவர்மனும் என்னைப் பற்றி அப்படியொரு தீர்மானத்தில் இருக்கும்போது நான் வேறென்ன சொல்ல முடியும்?'' என்று விரக்தியுடன் கூறிக் கொண்டே மீண்டும் உலாவினான் பரமேசுவரவர்மன்.

''என்னைப் பொறுத்த வரை இந்தப் பதிலில் திருப்திப்பட்டு விட முடியும், அரசே! ஆனால் நாட்டு மக்கள் தங்களிடமிருந்து எதிர்பார்க்கும் விஷயம் வேறு!''


''அதாவது, என் வீராபிஷேக முடிசூட்டு விழா வைபவத்தை நான் நடத்தப் போகிறேனா, இல்லையா என்பதை அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட வேண்டும் என்கிறீர்கள்?''

''பல்லவக் குடிமக்கள் ஒவ்வொரு விநாடியும் அதைத்தான் வெகு ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.''

சிறுபொழுது மௌனமாக உலாவிய பரமேசுவர வர்மன் அவரை இதமாக ஏறிட்டுப் பார்த்து, ''இப்போதைக்கு அந்த வைபவம் நடைபெறாது என்பதை என் நாட்டு மக்களுக்கு அறிவித்து விட விரும்புகிறேன்!'' என்றான்.

அதிர்ச்சி யுற்றவர் போல் நிமிர்ந்த முத்தரையர், ''அவசரப்பட வேண்டாம், அரசே!'' என்று தம்மை மீறிய படபடப்புடன் சொன்னார்.

'' இல்லை; நன்கு ஆலோசித்துப் பார்த்த பிறகே நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். எனது வீராபிஷேக முடிசூட்டு விழா வைபவத்தில் பாண்டிய மன்னர் தம் தேவியாரோடு வந்து கலந்து கொள்ள வேண்டுமென அழைப்பு அனுப்பியதற்கு அவர் கொடுத்த பதிலும் சேர்ந்துதான் என்னுடைய அந்தப் பதிலை உறுதிப்படுத்தி விட்டது'' என்று எங்கோ பார்த்தவாறு அமைதியாகக் கூறினான் பரமேசுவரவர்மன்.



சட்டென்று திரும்பிய முத்தரையர், சற்றுத் தொலைவில் கைகட்டித் தலை குனிந்து நின்று கொண்டிருந்த ஆபத்துதவி இளங்காரிக் குடையானைப் பார்த்து, "இளங்காரி! நம் மாமன்னரின் தூதுவனாகச் சென்ற உன்னிடம் பாண்டிய மன்னர் நெடுமாறர் என்ன சொன்னார்? அதை மீண்டும் ஒரு முறை சொல்!" என்று அடித் தொண்டையில் விளித்தார்.

"பழையாறைச் சோழரும், பல்லவ இளவரசரும் தங்களிடம் என்ன சொன்னார்களோ, அதே பதிலைத்தான் பாண்டிய மன்னரும் சொன்னார் ஐயா!" என்று பயந்து குழறினான் இளங்காரி.

"அதாவது, பல்லவ மாமன்னர், பாண்டிய அரசரின் உதவியை நாடாமல், ஆந்திர மன்னரிடம் படைபலம் பெற்றுச் சளுக்கியரோடு தனித்துப் போரிட்டுத் தம் நாட்டை மீட்டது அவருக்குப் பெரிய துரோகச் செயலாகப் பட்டு விட்டது; அதனால் நமது வெற்றி விழாவிலும் வீராபிஷேக முடிசூட்டு வைபவத்திலும் கலந்து கொள்ள மறுக்கிறார்; அப்படித்தானே?"

"ஆம், ஐயா!.... ஆனால் அதற்கு அவர் வெளிப்படையாகச் சொன்ன காரணம்...." என்று தயக்கத்துடன் இளங்காரி இழுத்தான். உடனே முத்தரையர் குறுக்கிட்டு, "சரி, சரி; போதும், நிறுத்து!" என்று சீறினார். பிறகு வெகு அலட்சியமாகத் தோளைக் குலுக்கிக் கொண்டு, "அரசே! இந்தப் பாண்டியர்கள் எப்போதுமே பல்லவ நாட்டினிடம் உண்மையாக நேசம் கொள்ள விரும்புவதில்லை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் நம்மை மட்டம் தட்டி மடக்கி வைக்கவே அவர்கள் முயற்சிப்பார்கள். ஆகவே, நெடுமாறரின் அந்தப் பகிஷ்கரிப்புப் பதிலுக்காக நாம் அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை" என்றார்.

பரமேசுவர வர்மன் இதைக் கேட்டு மென்முறுவல் பூத்தான். "அரசியல் நோக்கத்துக்காக என்னை யார் பகைத்துக் கொண்டாலும் அதைப் பற்றி நான் எள்ளளவும் கவலைப்பட மாட்டேன் ஐயா! ஆனால் பாண்டிய மன்னரின் அந்தப் பகிஷ்கரிப்பு, சமயத்தை முகாந்திரமாகக் கொண்டிருக்கிறது. அதை எண்ணித்தான் பெரிதும் வேதனையடைகிறேன்."

"ஒரு மாபெரும் தேசத்து மன்னரின் திருமண ஏற்பாட்டை இன்னொருநாட்டு மன்னர் பகிஷ்கரிப்பதே பச்சையான அரசியல் தொடுபிடிதான்! அதற்குச் சமய மூலாம் பூசிக் காட்டுவது வெறும் ஏமாற்று வித்தை!"

புருவங்களை நெரித்துக் கொண்டு திரும்பிய பரமேசுவரவர்மன் படபடத்த குரலில், "என் மதிப்புக்குரிய பாண்டிய மன்னரை இந்த அளவுக்குக் குறைத்துப் பேசாதீர்கள் ஐயா! புத்தி தெரிந்த நாள் முதல் அவரைத்தான் எனது ஆத்மீக வாழ்க்கையின் வழிகாட்டியாகவும் ஞான குருவாகவும் ஏற்றிப் போற்றி வருகிறேன். என் மீது அவர் ஏதேனும் தப்பபிப்பிராயம் கொண்டிருந்தால் அது அவருடைய தவறாக இருக்க முடியாது" என்றான்.

முத்தரையர் முகத்தைக் கனித்துக் கொண்டு, "அப்படியானால் மன்னரவர்களின் முடிவான தீர்மானம்தான் என்ன?" என்று கேட்டார்.

"முன்னர் நான் கூறியது போல், என் மீது ஏற்பட்டுள்ள சந்தேகங்களும் தப்பபிப்பிராயங்களும் நீங்கும் வரையில் எனது வீராபிஷேக முடிசூட்டுவிழா வைபவத்தைத் தள்ளி வைத்துவிட வேண்டும் என்பதே தீர்மானம்."

"சத்தியத்தின் அடிப்படையில் எழும் நியாயமான சந்தேகங்கள் தீர்க்கப்படுவதும் தீர்ந்து போவதும் சாத்தியமாகலாம்; ஆனால் தாழ்வு மனப்பான்மையினாலும், பொறாமையினாலும் ஏற்படுகிற சந்தேகங்களைத் தீர்த்து வைக்க யாராலும் முடியாது; எக்காலத்திலும் அவை தீரா!" என்று உள்ளடங்கிய ஆத்திரத்துடன் முணுமுணுத்த முத்தரையர், ஒருகண மௌனத்துக்குப் பின், திடுமெனத் தலை நிமிர்ந்து சொன்னார்: "அரசே! நல்ல காரியம் எது செய்தாலும் அதற்கு எங்கேனும் ஒரு மூலையிலிருந்து ஏதேனும் எதிர்ப்பு எழத்தான் செய்யும். அதையெல்லாம் பொருட்படுத்திக் கொண்டு நமது நடவடிக்கைகளிலிருந்து பின்னடைவது விவேகமாகாது. அடிமைப்பட்ட ஒரு நாட்டைப் போரிட்டு மீட்டதும், அதன் மன்னர் வீராபிஷேகம் செய்து புதிதாக முடிசூட்டிக் கொண்டு அரியணையில் அமர வேண்டியது நெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஓர் அரசியல் சம்பிரதாய மாகும். அத்துடன், பல்லவப் பேரரசின் புகழ் பெற்ற சிம்மாசனத்தை அதிக காலத்துக்குப் பிரமசரியத்தோடு தனித்து வைத்துப் பார்க்கவும் மக்கள் விரும்ப மாட்டார்கள். எனவே, இவ்விரண்டு காரியங்களையும் தாமதமின்றி நடத்தியே தீர வேண்டும். இவை விக்கினமின்றியும் வெற்றிகரமாகவும் நடந்தேற நான் ஒரு யோசனை சொல்வேன்..."

உலாவிக் கொண்டிருந்த பரமேசுவரவர்மன் மெல்லத் திரும்பி அவரை ஆவலுடன் ஏறிட்டுப் பார்த்து, "சத்

வாட்டர்பரீஸ்

வைட்டமின் காம்பவுண்ட்

சாப்பிடவேண்டியது எப்பொழுது?



■ எந்த சீதவெப்ப நிலையிலும், எப்பருவத்திலும் வயதுவந்தோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு உகந்த பொது டானிக் வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட்.

■ வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், மால்ட் எக்ஸ்ட்ராக்ட் மற்றும் உடல் நலம், தென்பு ஆகியவற்றுக்கு அவசியமான பொருள்கள் செறிந்தது வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட். பசியைத்தூண்டுவதுடன், ஆரோக்கிய உணர்வை ஊட்டுகிறது அது.

வாட்டர்பரீஸ்

வைட்டமின்

காம்பவுண்ட்

வார்னர் - லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி. (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

WLY-9 TAM

திரலேகைச் சிற்றரசரின் அந்த மேலான யோசனை என்னவோ?'' என்று வினவினான்.

உற்சாகத்தோடு நிமிர்ந்த முத்தரையர் உறுதியான குரலில் சொன்னார்: ''ஆம், அரசே! நம்மையும் நாட்டையும் வீணான குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கும் அந்தப் பழையாறைச் சோழரையும், பல்லவ இளவரசரையும் இன்றே கைது செய்து சிறையில் அடைக்கவேண்டும். தங்களது வீராபிஷேக முடிசூட்டு விழாவும், திருமண வைபவமும் நடந்து முடிந்தபின் அவர்களை விடுதலை செய்து விடலாம். இது ஒன்றுதான் எனக்குத் தெரிந்த ஒரே வழி.''

''நல்ல வழி! நயமான யோசனை!'' என்று அமைதியாகக் கூறி அழகாகப் புன்னகை பூத்தான் பரமேசுவரவர்மன். ''ஆனால், அதிலே ஒரு சிறு சங்கடம் இருக்கிறது; அதாவது, நானே என்னுடைய வலது கரத்துக்கும் இடது கரத்துக்கும் விலங்கு பூட்டிக் கொண்டபின் என்னால் எப்படி முடி சூட்டிக் கொள்ளவும், திருமணம் செய்து கொள்ளவும் இயலும்?''

முத்தரையரின் முகம் பேயறைபட்டது போல் வெளிறிச் சிறுத்தது. மூச்சு விடவும் முடியாமல் திக்கித் திணறினார் அவர்.

வாடாத புன்முறுவலுடன் மேலும் சொன்னான் பரமேசுவரவர்மன்: ''நண்பரே! பழையாறைச்சோழரும் கோவிந்த வர்மனும் என் மீது துவேஷம் பாராட்டுவதை இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. வீராபிஷேக முடிசூட்டு விழாவையும், எனது திருமணத்தையும் உள்ளடக்கிய ஏதோ ஒரு மாபெரும் நலனுக்காகவே அவர்கள் இப்படி எனக்கு எதிராகச் செயல்படுகிறார்களோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. எனவே, இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பொறுமையைக் கடைப் பிடிப்பதென்று நான் தீர்மானித்து விட்டேன்.'

மலையடிவாரத்துக்குச் சென்ற ஓட்டகத்தின் மன நிலையை அடைந்த முத்தரையர் அவனை நிமிர்ந்து பார்க்கவும் திராணியின்றித் தலை குனிந்தார்.

பரமேசுவரவர்மன் மெல்லப் பெருமூச்செறிந்தான். அவனுடைய ஒளி பொருந்திய கண்கள் இலேசாகப் பனித்தன. ஆயினும் அதே இளநகையுடன் அமைதியாகச் சொன்னான்: ''நான் இப்போது வருந்துவதெல்லாம் ஒரே ஒரு விஷயத்துக்காகத்தான் அன்பரே! அதாவது என் அன்புத் தம்பியான கோவிந்த வர்மனையும், என் அருமை நண்பரான பழையாறைச் சோழரையும் சளுக்கியப் படையெடுப்புக்குப் பின் நேரில் பார்க்கும் வாய்ப்பே எனக்குக் கிடைக்க வில்லை. அதனால் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று நான் அளவுகடந்த ஆவலுடன் காத்திருந்தேன். வெற்றிக்குப் பின்னும் அந்த நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைக்க வில்லையே என்ற வருத்தம்தான் என் மனத்தை வெகுவாக வாட்டிப் பிழிகிறது.''

பதிலேதும் சொல்லாமல் அங்கிருந்து அகன்றார் பெரும்பிடுகு முத்தரையர்.

அத்தியாயம் பதினாறு

நெஞ்சம் பொறுக்கவில்லை

பிறர் முன்னிலையில் மனிதன் தன் உணர்ச்சிகளை எளிதில் கட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது; ஆனால் தனிமையில் இருக்கும் போது அந்த அளவுக்கு அவனால் அவற்றை வெல்ல முடிவதில்லை. நெருப்பில் கொட்டிய நெய்யாகத் தனிமை அவனுடைய உணர்ச்சிகளைக் கொழுந்து விட்டெரியத் தூண்டி விடுகிறது. பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனும் இப்போது அவ்விதிக்கு விலக்காக முடியாமல்தான் வெய்துயிர்த்துக் கொண்டிருந்தான்.

எதிர்பாராத விதமாக ஏற்க வேண்டி நேரிட்டு விட்ட அருவிதமான பிரச்சினைகளைப் பற்றி முத்தரையரிடம் அவன் எவ்வளவுக்கெவ்வளவு அமைதியாகவும் நிதானமாகவும் பேசினானோ அவ்வளவுக்கவ்வளவு இப்போது அமைதியிழந்து மனம் பேதலித்துத் தவித்தான். அதனால் இரவு வெகு நேரமாகியும் அவனுக்கு உறக்கம் பிடிக்க வில்லை. அரண்மனை மேன் மாடத்தில் சலிப்பின்றி உலாவிக் கொண்டே இருந்தான்.

தான் அடைந்த மகத்தான வெற்றிக்குப் பின் வீராபிஷேக முடிசூட்டு விழா நடைபெறாமல் நின்று போனதைப் பற்றிக் கூட அவன் அவ்வளவாகக் கவலைப்பட வில்லை; தன் ஆருயிர்க் காதலி உத்தமசீலியை உலகறியக் கரம் பற்றித் தனக்குரியவளாக்கிக் கொள்வதில் அநாவசிய எதிர்ப்பும் கால தாமதமும் ஏற்பட்டு விட்டதை எண்ணித்தான் பெரிதும் கலக்கமடைந்தான்.

முத்தரையர் சொன்னது போல் அந்த எதிர்ப்பையும் தடங்கலையும் ஒரு

நொடியில் தகர்த்துத் தன் திட்டப்படி காரியங்களை நடத்திக் கொள்ள அவனால் இயலும் என்றாலும், அப்படிச் செய்ய அவன் சிறிதும் விரும்பவில்லை. காரணம், அவனது உன்னதமான காதல் திருமணத்தை எதிர்ப்புப் புயல்களுக்கிடையே அவசரக் கோலத்தில் முடித்துக் கொள்ளக் கூடாது என்பதுதான்! அவ்வாறு செய்தால், தான் கொண்ட காதலுக்கு மட்டுமல்ல, தன்னால் காதலிக்கப்பட்டவளுக்கும் அது ஏதோ ஒரு வகையில் இழிவை ஏற்படுத்தி விடும் என்று உயரிய பண்பில் ஊறிய அவனது உள்ளம் சஞ்சலப்பட்டது. தன் காதலையும் தன்னால் காதலிக்கப்படுபவளையும் அத்தனை புனிதமாகப் போற்றினான் அவன்.

இதுவும் தவிர, அவனுடைய திருமணத்துக்கு எதிர்ப்புக் காட்டி நிற்பவர்களும் சாதாரண மனிதர்கள் அல்ல. ஒருவன் அவனது ஒன்றுவிட்ட சகோதரன்; இன்னொருவர் பல்லவ சாம்ராஜ்யத்தைத் தாங்கி நிற்கும் தூண்களில் பிரதானமானவர்; மற்றவர் அண்டையில் உள்ள பெரியதொரு நாட்டின் பேரரசராகவும், சைவ உலகில் வணக்கத்துக்குரிய சிவநேசச் செல்வராகவும் விளங்குபவர். தமிழ் மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் பெற்றுள்ள இவர்கள் தங்களது எதிர்ப்புக்கு எடுத்துச் சொல்லும் காரணமோ சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. இவர்களைப் பகைத்துக் கொள்வது எளிது ஆனால் அதிலிருந்து எழும் இன்னல்களைச் சமாளிப்பது என்பது அத்தனை எளிதாயிருக்க முடியாது. ஏனென்றால், அவர்கள் சமயத்தின் பெயரால் நாட்டு மக்களிடையே வெகு வேகமாக வெறுப்பையும், துவேஷத்தையும் வளர்த்து விட முடியும். வல்லமைகளும் அதிகாரங்களும் படைத்த ஒரு மாபெரும் நாட்டின் மன்னனாக இருந்தாலும், மக்களின் அபிப்பிராயத்துக்கு முன்னால் அவன் தலை வணங்கிப் போக வேண்டியவனாகத்தானே இருக்கிறான்!

இதைப் பற்றிக் கூட அவன் இப்போது அதிகம் கவலைப்படவில்லை. இவ்வளவுக்கும் காரணமான ஆந்திர இளவரசி உத்தமசீலிக்கு — அவளை அடியோடு வெறுப்பவர்களான பழையாறைச் சோழராலோ, கோவிந்தவர்மனாலோ, அல்லது போரில் தோற்ற பின்னும் இங்கே தலை மறைவாகத் திரிந்து வரும் வில்வேலியாலோ, விநயாதித்தனாலோ- ஏதேனும் இன்னல்கள் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் தான் அவனை வெகுவாக அலைத்துக் குலைத்துக் கொண்டிருந்தது.



"ஒரு காலத்தில் நான் நாளொன்றுக்கு நூறு பேருக்கு உணவு போடும் அளவுக்குப் பணக்காரனாய் இருந்தேன். தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாது."

"முதல் மந்திரி என்னோடு படித்தவர். அதாவது தெரியுமா?"

"தெரியாது."

"பின் என்னதான் என்னைப் பற்றித் தெரியும் உங்களுக்கு?"

"பொய் கூறுவதில் சிறிதும் தயங்காதவர் என்று!"

'சேதியக் கலைஞர் பரவாதிமல்லர் இப்போது பெருவள நல்லூரில் உத்தமசீலிக்குத் துணையாக இல்லை; அவர் தம் மாளிகையைக் கூரத்தில் நிர்மாணிப்பதற்காகத் திருப்பருத்திக் குன்றத்துக்கு வந்து விட்டிருக்கிறார். உத்தமசீலி மட்டும்தான் இன்னமும் அந்தச் சின்னஞ்சிறு புதர்க் குடிலில் தன்னந் தனியே இருந்து வருகிறாள். என்னுடைய அழைப்பையும், நான் அனுப்புவதாகச் சொன்ன பரிவாரத்தையும் எதிர்பார்த்துக் கொண்டு அவள் காத்திருப்பாள். இந்நிலையில் அவளுக்கு எவ்விதத் தகவலும் தெரிவிக்காமல் அவளைத் தனியே அங்கு இருத்தி வைத்திருப்பது ஆபத்து அல்லவா?'

பரமேசுவர வர்மனுக்கு இருப்புக் கொள்ளவே முடியவில்லை. அங்குமிங்குமாக அலைமோதித் தவித்த அவன், நீண்ட நேர யோசனைக்குப் பின் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய், அரண்மனையில் யாரிடமும் ஏதும் சொல்லிக்கொள்ளாமல் அந்த இருண்ட இரவின் இரண்டாம் சாம நேரத்திலேயே எங்கோ புறப்பட ஆயத்தமானான். (தொடரும்)

ஆக்ஸிஜனுல் சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பு





நீங்கள் போலிப் பற்களை அணிந்திருந்தால் 'ஸ்டெரடென்ட்' உபயோகித்து ஆக்ஸிஜனுல் சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பைப் பெறுங்கள். அது, போலிப் பற்களை நன்ருகத் துலக்குகின்றது. 'ஸ்டெரடென்ட்' தண்ணீரில் கரைத்ததும் ஆக்ஸிஜன் கலந்த திராவகமாகி, சீக்கிரத்திலே போலிப் பற்களின் மிகச்சிறிய இடைவெளிகளுக்குள் புகுந்து உணவுப் பருக்கைகளை அப்புறப் படுத்துகிறது. பற்களில் படிந்துள்ள கறைகளையும் அழுக்குகளையும் கழுவி விடுவதுடன், தொத்து நோய் வராமலும் துர்நாற்றம் அடிக்காமலும் இருக்கச் செய்கின்றது. இதன் விளைவு, 'ஆக்ஸிஜனுல்' சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பு-ஒளி மிகுந்த போலிப் பற்கள்!

பழைய வல்கனேட் போலிப் பற்களுக்கும் புதியதாணப்ளாஸ்டிக் வகைகளுக்கும் 'ஸ்டெரடென்ட்' சமமாகவே பயன்படுகிறது.



ஸ்டெரடென்ட் ஆக்ஸிஜன் முறை போலிப்பல் துலக்கி

கடிதம் எழுதினுல் இலவச சாம்பிள் அனுப்பப்படும்.
விலாசம்: அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
தபா.பெ.எண் 9009 கல்கத்தா-16.

அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

[WTST-3 TM




பொன் விலங்கு

நாற்பதாவது அத்தியாயம்

மஞ்சள்பட்டியாரின் மாளிகை எல்லையில் மறுபடியும் தன் தந்தையை அந்த அவலமான நிலையில் தான் சந்திக்க நேரிடும் முன்பே அங்கிருந்து புறப்பட்டு வெளியேறிவிட வேண்டுமென்று தான் சத்தியமூர்த்தி அவ்வளவு அவசரமாகப் புறப்பட்டிருந்தான். அவனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுப் பூபதியும் அவர் மகள் பாரதியும்கூடத் தோட்டத்தில் ஜமீன்தார் கண்ணாயிரம் ஆகியவர்களோடு போய் அமர்ந்து கொண்டார்கள். ஜமீன்தாரும் கண்ணாயிரமும், பூபதியும், பாரதியும் தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த பகுதியிலிருந்து அரட்டைப் பேச்சுக்களும் பெரிதாக எழுந்து ஒலிக்கும் வெடிச் சிரிப்புக்களுமாக அந்தக் காம்பவுண்டிலிருந்து வெளியேறிச் சென்று கொண்டிருந்த சத்தியமூர்த்தி-யின் செவிகளில் கேட்டு அவனை அருவருப்படையச் செய்தன. அங்கிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்து சேரும்வரை அவன் மனத்தில் பலவிதமான சிந்தனைகள் அலைமோதிக் கொண்டிருந்தன. வீட்டுக்கு வந்து இரவுச் சாப்பாட்டை முடித்த பின்பும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. அம்மா அவனிடம் எதை யெதைப் பற்றியோ பேச முயன்றும் கேட்க முயன்றும் அவன் சரியாக மறுமொழி கூறாததனால் தானாகவே ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்து விட்டுச் சிறிது நேரத்தில் தூங்கப் போய்விட்டாள்.

இரவு பதினொரு மணிக்கு மேல் தந்தை வீட்டுக்குத் திரும்பி வந்த போதும் சத்தியமூர்த்தி விழித்துக் கொண்டுதான் இருந்தான். திருத்தம் செய்து மதிப்பிடுவதற்காகக் கல்லூரி மாணவர்களின் பரீட்சை விடைத் தாள்கள் சிலவற்றை மல்லிகைப் பந்தலிலிருந்து கையோடு எடுத்துக் கொண்டு வந்திருந்தான் அவன். அன்றிரவு



தன்னால் முடிந்த நேரம் வரை கண் விழித்து அந்த விடைத் தாள்களில் பெரும் பகுதியைத் திருத்திவிடவேண்டும் என்று அவற்றை எடுத்து வைத்துக் கொண்டு வேலையைத் தொடங்கியிருந்த போதுதான் தந்தை வந்து கதவைத் தட்டினார். வீட்டில் அம்மா உள்பட எல்லோரும் தூங்கிப் போய்விட்டதால் சத்தியமூர்த்தி, தான் திருத்தத் தொடங்கியிருந்த விடைத் தாள்களைக் கீழே வைத்துவிட்டு எழுந்து சென்று தந்தைக்குக் கதவைத் திறக்க வேண்டியதாயிற்று. அப்போது அவரும் அவனிடம் ஒன்றும் பேசவில்லை; அவனும் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. தந்தையின் மேல் கோபமும் பரிதாபமும் மாறி மாறி ஏற்பட்டன அவனுக்கு. திருமணமாக வேண்டிய தங்கைகளையும், இடித்துக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வீட்டுக்கு ஆகும் செலவுகளையும் தந்தையின் கவலைகளையும் நினைத்தபோது அவனுக்குப் பரிதாபமாகவும் இருந்தது; அதே சமயத்தில் ஊர் உலகம் மெச்ச வேண்டும் என்ற போலிக் கௌரவத்துக்காக ஜமீன்தாருக்கு ஏதோ டியூஷன் நடத்துவதாகப் பொய் சொல்லிவிட்டுத் தன் தந்தை அங்கே எடுபிடி வேலையாளாகச் சுற்றிக் கொண்டிருப்பதை நினைத்து அடக்க முடியாத சீற்றமும் எழுந்தது. அன்றிரவு அந்த வீட்டின் எல்லையில் தந்தையும் நிம்மதியாக உறங்கவில்லை; மகனும் நிம்மதியாக உறங்கவில்லை. ஏறக்குறைய இரவு இரண்டு மணி வரை கல்லூரிப் பரீட்சை விடைத் தாள்களைத் திருத்தி மதிப்பெண்களைக் (மார்க்) கூட்டிப் போட்டுக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. அதற்கு அப்புறமும் உறக்கம் வராமல் சிறிது நேரம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். ஆழ்ந்த உறக்கம் அன்றிரவு அவனுக்குக் கிடைக்கவேயில்லை. மறுநாள் காலையில் அவன் எவ்வளவு விரைவாக எழுந்திருந்தானோ அவ்வளவு விரைவாக எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டு விட்டான். பஸ்ஸிலிருந்து இறங்கி ஆஸ்பத்திரிக் காம்பவுண்டுக்குள் அவன் நுழையும் போது ஆறு அல்லது ஆறேகால் மணி இருக்கும். அப்போதுதான் ஆஸ்பத்திரி மெல்ல மெல்ல விழித்துக் கொள்ளத் தொடங்கியிருந்தது. நர்ஸுகள் சுறுசுறுப்பாக நடமாடிக் கொண்டிருந்தார்கள். பிளாஸ்கும் கையுமாக நோயாளிகளுக்குக் காப்பி எடுத்துக் கொண்டு வருகிறவர்களும், பழங்களும் கையுமாக நோயாளிகளைப் பார்க்க வருகிறவர்களுமாக ஆஸ்பத்திரி வாசலில் கலகலப்பு ஆரம்பமாகியிருந்தது. மோகினி இருந்த ஸ்பெஷல் வார்டில் அவன் நுழைந்தபோது ஓர் அற்புதமான கண்ணுக்கினிய காட்சியைக் கண்டான்: அப்போதுதான் பல் விளக்கி முகம் கழுவிக்கொண்டு வந்திருந்த மோகினி தன்

மணிவண்ணன்

அடர்ந்த கருங் கூந்தலை அவிழ்த்துக் கோதிக் கொண்டிருந்தாள். தலையை ஒரு புறமாகச் சாய்த்து வளைவிளையாடும் பொன்னிறக் கைவிரலால் கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டிருந்த கோலத்தில் தோகை விரித்தாடும் அழகிய மயிலைப் போல் காட்சியளித்தாள் அவள். முகத்தில் சரிபாதி வந்து விழுந்து மேகக் காடு கவிழ்ந்தாற்போல் தொங்கி மறைத்துக் கொண்டிருந்த நிலையில் கருமை மின்னிச் சிற்றலையோடி நெளியும் அந்தக் கூந்தலின் நறுமணம் சத்தியமூர்த்தியைக் கிறங்கச் செய்தது. தனிமையில் தன்னிச்சையாகக் கூந்தலை அவிழ்த்து விட்டுக் கோதிக் கொண்டிருந்தவள் திடீரென்று அங்கு அவனைப் பார்த்ததும் நாணத்தோடு சிரித்துக் கொண்டே அவசர அவசரமாகக் கூந்தலை அள்ளி முடியத் தொடங்கினாள். அந்த அவசரத்திலும் பரபரப்பிலும் நாணத்திலும் கூட அவள் மிக அழகாக இருந்தாள். கைகளுக்கு அடங்காத அந்தப் பெருங் கூந்தலைக் கோணல் மாணலாகச் சுற்றிக் கொண்டை போட்டுக்கொண்டபோது அவன் கண்களுக்கு அவள் இன்னும் அழகாகத் தெரிந்தாள்.

''வாருங்கள்!... நேற்று வருகிறேனென்று சொல்லி ஒரேயடியாக ஆசைப்பட வைத்துக் கடைசியில் என்னை ஏமாற்றி விட்டீர்களே?.... பையன் வந்து அர்ச்சனைப் பிரசாதத்தைக் கொடுத்து விவரம் சொல்கிறவரை தவியாய்த் தவித்துப் போனேன்.''

''நேற்றே வந்திருந்தால் உன்னை இன்று காலையில் இப்போது பார்த்தேனே; இந்த அழகிய கோலத்தில் பார்த்திருக்க முடியாது மோகினி! பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையா என்பதைப் பற்றி நக்கீரர் சிவபெருமானோடு கருத்து மாறுபட்டு வாதிட்டதாக ஒரு பழைய கதை உண்டு. உன்னுடைய கூந்தல் நறுமணமோ இந்த ஆஸ்பத்திரி வார்டையே* கமகமக்கச் செய்து கொண்டிருக்கிறது. கரிய மேகங்களினிடையே பாதி மறைந்தும் பாதி மறையாமலும் தெரியும் சந்திர பிம்பத்தைப் போல் கூந்தலில் மறைந்தும் மறையாமலும் தெரிந்த உன் முகத்தைப் பார்த்ததும் நான் கவிஞனாக இல்லையே என்ற வருத்தம்தான் எனக்கு ஏற்பட்டது.''

''கேலி செய்யாதீர்கள்....''

''உன்னைத் தாராளமாகக் கேலி செய்யும் உரிமை எனக்கு உண்டோ இல்லையோ?''

''எல்லா உரிமைகளும் உங்களுக்குத்தான் உண்டு. ஏதோ அம்மா என்று ஒருத்தி இருந்தாள். அவளும் போய்ச் சேர்ந்து விட்டாள்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவளுடைய கண்களில் நீர் பெருகி விட்டது. மிகவும் பாசத்தோடு அருகில் சென்று மேல் துண்டால் அவளுடைய கண்ணீரைத் துடைத்தான் சத்தியமூர்த்தி. அவன் கண்ணீரைத் துடைத்த பின்னும் விலகிச் செல்லாமல் ஒட்டினாற் போலவே அவனருகில் தயங்கி நின்று கொண்டிருந்தாள் அவள். சிரித்தபடியே அவன் அவள் முகத்தை ஏறிட்டு நோக்கிக் கூறினான்:

''நீங்கள் இப்படிச் செய்வதற்காகவே நான் இன்னும் கண்ணீர் விட்டு அழ வேண்டும் போல ஆசையாயிருக்கிறது!''

''கவலைப்படாதே! உன்னுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு இந்தக் கைகள் எப்போதும் தயாராக இருக்கும்'' என்று அவளுக்குப் பதில் சொல்லிய போது தான் சொல்லிய வார்த்தைகளின் பொருளாழத்தை நினைத்து மெய்சிலிர்த்தான் அவன். ''நேற்று மாலையில் அந்தப்பையன் கொண்டு வந்து கொடுத்த கோவில் பிரசாதத்தை இன்னும் அப்படியே வைத்திருக்கிறேன். உங்கள் கையால் இந்தக் குங்குமத்தை என் நெற்றியில் இட்டுவிடுங்கள்'' என்று சொல்லி இடுப்பிலிருந்து அந்தப் பொட்டலத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள் மோகினி. தன் நெஞ்சருகே வந்து மேல் நோக்கி நிமிர்ந்த அவள் முகத்திலிருந்து கமகமக்கும் சந்தனச் சோப்பின் வாசனையை நுகர்ந்தவாறே அவளுடைய அழகிய நெற்றியில் கோவில் குங்குமத்தை இட்டான் சத்தியமூர்த்தி. ''இந்தக் குங்குமம் உன்னுடைய அழகிய நெற்றியில் என்றும் இப்படியே இருக்க வேண்டும்'' என்று விளையாட்டாக அவளை வாழ்த்துவதுபோல் அப்போது அவன் கூறினான்.

''நீங்கள் இருக்கிறவரை இந்தக் குங்குமமும் இப்படியே இருக்கும்!'' என்று உறுதி தொனிக்கும் குரலில் மோகினியிடமிருந்து பதில் வந்தது. நர்ஸ் காபி கொண்டு வந்தாள். ஆஸ்பத்திரிக் காபியை மோகினியும் சத்தியமூர்த்தியும் ஆளுக்குப் பாதியாகப் பருகினார்கள். முதல் நாள் தன் தந்தை மோகினிக்கும் ஜமீன்தாருக்கும் ஏற்பட்டிருக்கும் உறவைப் பற்றியும் வேறு சில கசப்பான உண்மைகளைப் பற்றியும் தன்னிடம் கூறி எச்சரித்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் அப்படியே மோகினியிடம் சொல்லி எது உண்மை? எது பொய்? என்று இப்போது அவளையே விசாரித்துவிடலாமா என்று ஒரு கணம் எண்ணினான் சத்தியமூர்த்தி. ஆனால் அடுத்த கணமே மகிழ்ச்சிகர



நான் எப்பொழுதும் சிறந்ததையே
உபயோகிக்கிறேன்
நான் தேர்ந்தெடுப்பது எவரெஸ்ட்
• எளிதாக, நம்பகமாக உழைக்கிறது.
• நியாயமான விலை
• பூராவும் உத்திரவாதமுள்ளது
• எடுப்பான தோற்றமுள்ளது
• விற்பனைக்குப் பிறகு உடனுக்குடன் பராமரிப்பு கிடைக்கிறது.
EVEREST
EVEREST
EVEREST
எவரெஸ்ட் தையல் மெஷின்
தயாரிப்பாளர்கள்: சாரதா மெஷினரி கார்ப்பொரேஷன்
தலைமை ஆபீஸ்: 11, பூஸா ரோடு, புதுடில்லி-5.
பாக்டரி: டிரங்கு ரோடு, குரோம்பேட், மதராஸ்.

மான இந்த வேளையில் அந்தக் கசப்பான உண்மைகளை அவனிடம் சொல்லி விசாரிப்பதனாலேயே அவன் மனம் வேதனைப்படுமோ என்று நினைத்து, 'இப்போது அவற்றைப் பற்றி அவனிடம் விசாரிக்காமல் இருப்பதே நல்லதென்று' அவள் தன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. அவளோ மிகவும் ஞாபகமாக 'வஸந்தசேனையையும் சாருதத்தனையும்' பற்றி மறுமுறை சந்திக்கும்போது அவன் சொல்வதாக ஒப்புக்கொண்டிருந்த கதையை உடனே சொல்லியாக வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். அந்தக் கதையை அவளுக்கு எந்த விதமாகத் தொடங்கி எப்படிச் சொல்லலாமென்று முதலில் சிறிது தயங்கினான் சத்தியமூர்த்தி.

'வஸந்தசேனை என்பவள் உச்சயினி நகரத்தில் பேரழகும் பெருஞ் செல்வமும் நிறைந்திருந்த ஓர் இளம் கணிகை' என்று ஆரம்பிக்கலாமா, அல்லது 'ஓர் இளம் தாசி' என்று ஆரம்பிக்கலாமா எப்படி ஆரம்பித்தால் மோகினியின் மனம் புண்படாமல் இருக்கும்? என்று எண்ணி ' 'மிருச்சகடிகம்' காவியத்தை அவளுக்கு மிக மிக நாசூக்காகச் சொல்லி முடிப்பதற்குச் சீரான கதை உருவத்தைத் தன் மனத்தில் முதலில் அமைத்துக்கொள்ள முயன்றான் அவன். 'வஸந்தசேனை ஓர் இளம் கணிகை' என்று தொடங்கினால் நல்லதா அல்லது 'ஓர் இளம் தாசி' என்று தொடங்கினால் நல்லதா? எப்படிச் சொன்னால் மோகினி தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாமலிருப்பாள் என்று நினைத்து நினைத்துத் தயங்கிய பின் முதல் வாக்கியத்தைச் சொல்லி முடித்த சுவடு நீங்குவதற்குள்ளாகவே 'ஆனால் அவள் செய்த காதல் புனிதமும் பரிசுத்தமும் நிறைந்தது' என்று அடுத்த வாக்கியத்தையும் உடனே சேர்த்துச் சொல்லி விடுவதென்று முடிவு செய்துகொண்டான் அவன். தன்னுடைய வாழ்க்கைக்கும் வஸந்தசேனை சாருதத்தன் கதைக்கும் ஏதோ ஓர் ஒற்றுமை இருப்பதனால்தான் முன் தினம் பேசிக் கொண்டிருந்தபோது சத்தியமூர்த்தி அதைப் பற்றித் தன்னிடம் குறிப்பிட்டிருக்கவேண்டுமென்று மோகினி நினைத்ததனால் அந்தக் கதையைப் பற்றிய ஆவலைத் தன் மனத்தினுள் தானாகவே வளர்த்துக் கொண்டிருந்தாள் அவள். சத்தியமூர்த்தியும் அவளுடைய ஆவலைப் புரிந்து கொண்டிருந்தான். அவளுடைய மனத்தில் வேற்றுமையாக எதுவும் தோன்றாதபடி வஸந்தசேனை — சாருதத்தன் கதையை அவளுக்கு நாசூக்காகவும் மென்மையாகவும் வளர்த்துச் சொல்லத் தொடங்கிவிட்டான் அவன்.

வஸந்தசேனையின் எழில் கொஞ்சும் இளமைப் பருவத்தைப் பற்றியும், உச்சயினி நகரத்தின் அரண்மனையையும் விடப் பெரிய அவளது செல்வ மாளிகையைப் பற்றியும், சாருதத்தனிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த பரிசுத்தமான காதல் பிடிவாதத்தைப் பற்றியும் ஒருவிதமாகச் சொல்லி முடித்தாகி விட்டது. சாருதத்தனுடைய குண நலன்களைப் பற்றியும், பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து அந்தக் கொடையின் மிகுதியினாலேயே அவன் ஏழையாகிவிட்டதைப் பற்றியும் இப்போது சத்தியமூர்த்தி அவளுக்குச் சொல்லத் தொடங்கியிருந்தான்.

''ஆண் மகனின் அழகும், அந்த அழகுக்குத் துணையான ஒரு சிறந்த குணமும் சேர்ந்துதான் பேரழகியான ஒரு பெண்ணை நிரந்தரமாகக் கவர முடியுமே தவிரத் தனி உடலழகு மட்டுமே ஒரு பெண்ணை நிரந்தரமாகக் கவர்ந்துவிட முடியாது. சாருதத்தன் இணையற்ற ஆணழகன். அழியக் கூடிய இந்த அழகைத் தவிர வந்தவர்க்கெல்லாம் தன்னிடமிருந்த செல்வத்தை வரையாது கொடுத்துக் கொடுத்து அந்தக் கொடைப் பெருமிதத்தினாலே அழியாத குண அழகையும் பெற்றிருந்தான் அவன். கொடுத்துக் கொடுத்துத் தான் ஏழையாகி விட்டதற்காக வருத்தப்படாமல் தன்னைத் தேடி வருபவர்களுக்குக் கொடுக்கத் தன்னிடம் இனி ஒன்றும் மீதமில்லையே என்று வருந்திக் கொண்டிருந்தான் சாருதத்தன். அவனுக்குத் திருமணமாகி இல்லறவாழ்வில் ஓர் ஆண் மகவு இருந்தும்கூட இளம் கணிகையான வஸந்தசேனை அவனையே தன் நாயகனாகப் பாவித்து அவனுக்கு ஆட்பட்டு உருகிக் கொண்டிருந்தாள். சாருதத்தன் ஏழையாயிருக்கிற அதே உலகத்தில், தான் செல்வத்தோடிருப்பதற்கே வெட்கமாக இருந்தது அவளுக்கு. 'கொடியை வளைத்துப் பூப்பறிக்க நேர்ந்தால்கூடக் கொடி நோகுமோ என்று தயங்கிப் பூக்களைக் கொடியிலிருந்து பறிக்கவும் விரும்பாத அளவு மென்மையான மனம்

பொன் விளக்கு


ஒரு பெண்ணின் அதிகப் பேச்சுக்குச் சில சமயங்களில் ஓர் அர்த்தமும் இல்லாமல் போகலாம். ஆனால் ஒரு பெண்ணின் அதிக மௌனத்துக்கு மட்டும் எத்தனையோ பல அர்த்தங்கள் உண்டு.

படைத்த சாருதத்தனை இப்போது வறுமையால் எப்படி எப்படி வாடியிருப்பானோ' என்று எண்ணும்போதெல்லாம் வஸந்தசேனை கண்கலங்கித் தவித்தாள். உச்சயினி நகரத்துக் காமன் கோவிலில் முதன் முதலாகச் சாருதத்தனைச் சந்தித்து அவனிடம் தன் மனத்தைப் பறிகொடுத்த முதல் விநாடியிலிருந்து அவள் அவனுக்கு மானசிகமாக வாழ்க்கைப் பட்டிருந்தாள். சாருதத்தன் உலகத்துக்கு முன் பரம ஏழையாகி யிருந்தாலும் வஸந்தசேனையின் இதயத்தில் அவன் ஒருவனே உலகத்தின் மிகப் பெரிய செல்வனாகக் கொலுவீற்றிருந்தான். அவனுடைய வீதியிலேயே அவனுக்கு அருகே இருந்த வீடுகளிலுள்ள பல இளம் கணிகைகள் தங்கள் அழகை முதலாக வைத்து வாணிகம் செய்து பெரும் பொருள் குவித்துக் கொண்டிருந்த அதே வேளையில், அவள் சாருதத்தனை நினைத்து உருகிக் கொண்டிருந்தாள். உச்சயினி நகரத்தின் செல்வச் சிறப்பு மிக்க ஆடவர்கள் அவளுடைய தெருவைத் தேடி வருகிற மாலை வேளைகளில் அவள் தெய்வத்தைச் சந்திக்கப்போகும் பரம பக்தையாகச் சாருதத்தனுடைய தெருவைத் தேடி அலைந்து நடந்து கொண்டிருந்தாள். அப்படிச் சென்று கொண்டிருந்த மாலை வேளை ஒன்றில் அப்போது உச்சயினியை ஆண்டு கொண்டிருந்த பாலகன் என்ற கொடுங்கோலரசனுக்கு ஆசைக் கிழத்தி ஒருத்தியிடம் பிறந்த மகனாகிய சகாரன் என்ற காமுகன் வசந்தசேனையைத் துரத்துகிறான். சகாரனுடைய கொடுமைக்கு ஆளாகாமல் தப்பிப் பிழைப்பதற்காகச் சாருதத்தன் வீட்டிலேயே அடைக்கலம் புகுந்து தன்னுடைய விலைமதிப்பற்ற அணிகலன்களையும் பாதுகாப்பாக அங்கேயே ஒப்படைத்து விட்டு மீள்கிறாள் வஸந்தசேனை.

''இதயத்தையே ஒப்படைத்துவிட்ட இடத்தில் அணிகலன்களை ஒப்படைப்பதா பெரிய காரியம்?'' என்று இந்த இடத்தில் மோகினி கதை கூறிக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியிடம் நடுவே குறுக்கிட்டுப் பேசினாள். சத்தியமூர்த்தி அவளுடைய இந்த வாக்கியத்தில் எதையோ புரிந்துகொண்டவனைப் போல் ஒரு கணம் தான் சொல்லிக் கொண்டிருந்த கதையை நிறுத்திவிட்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்துப் புன்னகை பூத்தான். பின்பு கதையை மேலே வளர்த்துச் சொல்லிக் கொண்டே வருகையில் 'இருளிலும் மழையிலும் தவித்து வஸந்தசேனை சாருதத்தனைச் சந்திக்கப் போன இரவைப் பற்றியும், 'சாருதத்தனின் மகன் தெருவில் மண்வண்டி வைத்து விளையாடும் ஏழைமையைப் பொறுக்க முடியாமல், வசந்தசேனை தன்னுடைய பொன் நகைகளையெல்லாம் கழற்றி அந்த மண் வண்டியில் வைத்து, ''இப்போது என் அன்பரின் மகனும் தங்க வண்டி வைத்து விளையாடுகிறானே'' என்று பெருமைப்படும் சம்பவத்தைப் பற்றியும் சத்தியமூர்த்தி மிகவும் உருக்கமாகக் கூறியபோது மோகினி கண் கலங்கி விட்டாள். கதையை முழுவதும் சொல்லிய பின், ''உலகம் நிரந்தரமாகப் பழித்துக்கொண்டிருக்கிற ஒரு பகுதியைச் சேர்ந்த அழகிய பெண்களிடையே யிருந்துதான் வசந்த சேனை, மாதவி, மணிமேகலை — கடைசியாக மோகினி — எல்லாரும் தோன்றி யிருக்கிறார்கள்'' என்று சத்திய மூர்த்தி சிரித்துக் கொண்டே சொல்லி முடித்தபோது அந்தப் பட்டியலில் அவன் தன் பெயரையும் சேர்த்துக் கொண்டதற்காக மோகினி நாணித் தலை குனிந்தாள். கன்னம் சிவக்க அவள் இதழ்களில் நகை கனிந்தது. அந்த நகை மாறாத முகத்தோடு அவனை நிமிர்ந்து பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டே எங்கோ பார்ப்பது போல் பராக்குப் பார்த்தபடி அவள் மெல்லச் சொன்னாள்:

''மணிமேகலையை விட்டு விடுங்கள்! அவள் துறவி. அவளைத் தவிர மற்ற இருவருக்கும் கிடைத்த காதலர்களை விட என்னுடைய காதலர் எவ்வளவோ மேலானவர். சாருதத்தனும், கோவலனும் தங்கள் அன்புக்கு ஆட்பட்டவர்களைச் சாகமுயல்வதிலிருந்து காப்பாற்றி வாழ வைக்க வில்லை. என்னுடைய காதலர் யாரோ அவரால்தான் நான் சாவிலிருந்தும் காப்பாற்றப்பட்டு இப்போது உயிர் வாழ்கிறேன். இல்லையா?''


அவளுடைய அந்த அன்புப் புகழ்ச்சியில் அவன் மெய்ம்மறந்திருந்த போது வார்டு அறையின் முன்புறம் ஏதோ கார் வந்து நிற்கிற ஓசை கேட்டது. அந்த ஓசையைக் கேட்டதுமே மோகினியின் முகத்தில் மகிழ்ச்சியும் சிரிப்பும் மறைந்து பயம் வந்து நிறைந்தது. புலியின் வருகையால் நடுங்கும் மான் குட்டி போல் பதறினாள் அவள். ''ஜமீன்தாருடைய காராகத்தான்இருக்கும்'' என்று அவள் பரபரப்பாகக் கூறவும் சத்தியமூர்த்தி எழுந்து ஸ்கிரீன் மறைவுக்கு மேல் தலை நிமிர்ந்து வெளியே எட்டிப் பார்க்கவும் சரியாக இருந்தது. ஜமீன்தார் மட்டுமல்லாமல் அவரோடு மல்லிகைப் பந்தல் கல்லூரி அதிபர் பூபதி, அவர் மகள் பாரதி, கண்ணாயிரம், எல்லாரும் ஒரு பெரிய காரில் வந்து இறங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். பிரமுகர் பூபதிக்குப் பத்மஸ்ரீ விருது



கேட்டு வாங்குங்கள்

FARGO


தரமிக்க தயாரிப்புகளை



தயாரிப்பாளர்கள்:

அவைகள்
நம்பகமானவை,
சிக்கனமானவை, நீடித்து
உழைக்கக்கூடியவை.

ஃபார்கோ மான்டில் ப்ராடக்ட்ஸ்
343-B, ...
... 3-50



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க பெரிய புத்தகம்.
விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஐசுவரியம் (குடிசைத் தொழில்)
சோப், இங்கி, பத்தி, ஸ்னோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது.
விலை ரூ. 4-00. வி. பி. 0-85.

தமிழ் ஹிந்தி சுபோதினி
தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும்.
விலை ரூ. 2-25. வி. பி. 0-85.

குடும்ப இலகு வைத்தியம்
பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக்கியம், பலம் பெற வழிகாட்டும்.
விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)
கால்நடைகளின் நோய்களை போக்கும்.
விலை ரூ. 2. வி. பி. 0-85.

வாணி புக் டிபோ (K)
3, மல்லையபெருமாள் தெரு, ரூம் நெ. 5
சென்னை-1

ருசிக்கும்
தரத்திற்கும்
புகழ் பெற்றது

அம்பீஸ்

ஊறுகாய்கள்

சுவை மிகுந்த

ஆவக்காய்,
எலுமிச்சை,
வெட்டு மாங்காய்,
வடு மாங்காய் ....

*



தயாரிப்பாளர்

அம்பீஸ் கபே

6, பிராட்வே : சென்னை-1


PARAMOUNT/AC-20

அமுல் வெண்ணெய் எவ்விதத்தில் அலாதியானது?

அது 5 மணி நேரத்தில் தயாரிக்கப்படுகிறது.

தினந்தோறும், காலையிலும் மாலையிலும், பாஸ்ச்சரைஸ் செய்யவும் வெண்ணெய் தயாரித்து, பாக் செய்யப்பட்டு வெளியனுப்புவதற்குத் தயாராவதற்கென புதுப் பால் அது சேகரிக்கப்படும் இடங்களிலிருந்து அதிவேகமாக அனுப்பப்படுகிறது.

பால் பாத்திரத்திலிருந்து பாக்கெட்டுக்குள் செல்ல அமுலுக்கு மட்டுமே 5 மணி நேரத்திற்குள் முடிகிறது.



அமுல் வெண்ணெய் புதுமையுடனும், சுத்தமாகவும் போஷாக்கு உள்ளதாகவும் இருப்பதில் வியப்பில்லை!

கெய்ரா டிஸ்டிரிக்ட் கோ-ஆப்பரேடிவ் மில்க் ப்ரொடியூஸர்ஸ் யூனியன் லிட்., ஆனந்த்.

கிடைத்ததற்குப் பாராட்டுத் தெரிவிப்பதற்காக அவருடைய படத்தை அட்டையில் தாங்கி வெளி வந்திருக்கும் புதிய 'குத்து விளக்கு' இதழை நடந்தவாறு புரட்டிக் கொண்டே கடைசியாக வந்துகொண்டிருந்தாள் பாரதி. கண்ணாயிரமும், பூபதியும் ஜமீன்தாரும் சிரித்தபடி பேசிக் கொண்டே வார்டுக்குள் நுழைந்தனர். முதலில், 'இதென்ன? வேண்டாத இடத்தில் வேண்டாத சந்திப்பாக வந்து வாய்க்கிறதே!' என்று மனம் குழம்பிய சத்தியமூர்த்தி பின்பு சிறிதும் தயங்காமல் மிக அருகே வந்து விட்ட பூபதியை நோக்கி, ''ஹல்லோ, சார்! குட்மார்னிங்....'' என்று வரவேற்கவும் நிமிர்ந்து அவனைப் பார்த்த பூபதி, ''நீங்கள் எங்கே..... இப்படி... இங்கே.....?'' என்று எதிர்பாராமல் அவனைச் சந்தித்து விட்ட திகைப்போடு வினவினார். அவனுடைய குரலை அடையாளம் கண்டு பத்திரிகை படித்தபடி நடந்து வந்த பாரதியும் அதே திகைப்போடு எதிரே நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். 'மோகினியைத் தனக்குத் தெரியும் என்றும் அவள் கார் விபத்தில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதை — அறிந்து பார்த்து விட்டுப் போக வந்ததாகவும்' பூபதியிடம் சிறிதும் தயங்காமல், தெளிவாகவும் பொதுவாகவும் அவன் மறுமொழி கூறினான். அவர் அதை எப்படி வரவேற்றார், எவ்வளவுக்கு நம்பினார் என்பதைப் பற்றி அவன் அதிகமாகக் கவலைப்படவில்லை. கண்ணாயிரமும், ஜமீன்தாரும், சத்தியமூர்த்தி இருந்த பக்கம் திரும்பிப் பார்க்கவும் இல்லை; அவனை இலட்சியம் செய்யவும் இல்லை. பூபதியும்கூட அவ்வளவாகச் சுமுகமான நிலையில் அந்தச் சந்திப்பை ஏற்றுக் கொண்டதாகச் சத்தியமூர்த்திக்குத் தெரியவில்லை. பாரதியோ அவனிடம் ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக, ''இதில் அப்பாவைப் பற்றி வந்திருக்கிறது. பார்த்தீர்களோ?'' என்று தன் கையில் வைத்துக் கொண்டிருந்த புதிய 'குத்து விளக்கு' இதழைச் சத்தியமூர்த்தியிடம் நீட்டினாள். அதை வாங்கிச் சிறிது நேரம் புரட்டிப் பார்த்து விட்டு அவளிடமே திருப்பிக் கொடுத்து விட்டான் அவன். ''நீங்கள் எங்கே..... இப்படி.... இங்கே?'' என்று அவளுடைய தந்தை வினவினாற் போலவே அவளும் அவனை வினவ நினைத்திருக்கலாம். ஆனால் நினைத்ததைக் கேட்காமல் அவள் அழுத்தலாகவே இருந்து விட்டாள். ஒரு பெண்ணின் அதிகப் பேச்சுக்குச் சில சமயங்களில் ஓர் அர்த்தமும் இல்லாமல் போகலாம். ஆனால் ஒரு பெண்ணின் அதிக மௌனத்துக்கு எத்தனையோ பல அர்த்தங்கள் உண்டு. இந்த விதத்தில் பார்த்தால் ஒரு பெண்ணின் பேச்சை விடப் பேசாமை பயங்கரமானது! பாரதியின் மௌனமும் அப்போது அப்படிப்பட்டதாகத்தான் இருந்தது. பூபதியிடம் ஒரு விதமாகச் சொல்லி விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து மெல்லக் கிளம்பி வீட்டுக்கு வந்துசேர்ந்தான் சத்தியமூர்த்தி. பகலில் மீதமிருந்த பரீட்சை விடைத் தாள்களைத் திருத்த முடியாமல் முக்கியமான நாலைந்து நண்பர்கள் அவனைத் தேடி வந்து விட்டார்கள். அவர்கள் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு போவதற்குள் மாலை நேரமாகி விட்டது. மாலையில் அவன் பூபதியை வழியனுப்ப விமான நிலையத்துக்குப் போக வேண்டியிருந்தது. ஜமீன்தார் சார்பில் கண்ணாயிரம் மட்டும் விமான நிலையத்துக்கு வழியனுப்ப வந்திருந்தார். பூபதிக்குப் பெரிய ரோஜாப்பூ மாலையைப் போட்டு வழியனுப்பினார் கண்ணாயிரம். புறப்படுவதற்கு முன்னும் பூபதி, தாம் திரும்பியவுடன் நடைபெற வேண்டிய ஸ்தாபகர் தின விழாவைப் பற்றியும், அதற்கு வருகிற மந்திரிக்குக் கொடுக்க வேண்டிய வரவேற்பைப் பற்றியுமே அவனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். சத்தியமூர்த்தி மனத்திலோ முகத்திலோ மலர்ச்சியின்றிக் கேட்டுக்கொண்டிருந்தான். தந்தைக்குப் போடப்பட்ட மாலைகளைக் கையில் சுமந்து எங்கோ பார்த்தபடி நின்றிருந்தாள் பாரதி. நகரிலிருந்து வெகு தொலைவு தள்ளியிருந்தும் விமான நிலையத்துக்குப் பூபதியின் நண்பர்களும், பிரமுகர்களுமாகப் பலர் வழியனுப்ப வந்திருந்தார்கள்... ''நானும் அப்பா கூடப் போகலாம் என்றிருந்தேன். திடீரென்று காலையில் ஜமீன்தார் மாமா வேண்டாம் என்றார். டிக்கெட்'டைக் கான்ஸல் செய்து விட்டேன். அப்பா டில்லியிலிருந்து வருகிற வரை ஜமீன்தார் மாமாவுடன் மதுரையில்தான் இருக்கப் போகிறேன்'' என்று பாரதி யாரிடமோ வந்திருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் சத்தியமூர்த்திக்கு அவள் தந்தையோடு டில்லிக்குப் போகவில்லை என்று தெரியும். உரிய வேளையில் பிரயாணிகளை விமானத்தில் ஏறிக் கொள்ளச் சொல்லி வேண்டுகிற அறிவிப்பும் ஒலித்தது. பூபதி எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு விமானப் படிக்கட்டை நோக்கி நடந்தார். ''என்னம்மா? கடைசிப்படி ஏறுவதற்குள் மறுபடி 'நானும் டில்லிக்கு வருவேன்' என்று மாறிவிட மாட்டாயே? நிச்சயமாக நீ வரவில்லைதானே?'' என்று இறுதியாக மகளிடம் வேடிக்கையாகக் கேட்டு விட்டு நடந்தார் அவர். (தொடரும்)

இக்கதையில் வரும் நிகழ்ச்சியைத்தான் ஓவியர் விஜயா அட்டைப் படமாகத் தீட்டியிருக்கிறார்.

அன்னையின் முன்னே...

ஸ்ரீப்ரியா

வண்டி டெல்லியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. முதல் வகுப்பில் தன் ஆசனத்தில், சாய்ந்து கொண்டு படிக்க முயன்ற டாக்டர் சுந்தரின் மனம் புத்தகத்தில் பதிய வில்லை. ஏதோ ஒரு வெறியில் வீட்டை விட்டுப் புறப் பட்டாகி விட்டது. ஆனால் கிளம்பி இரண்டு நாட்களுக்குள் ஏன் இந்த ஏக்கம்? போர் முனையை அடைந்து விட்டால் மறுபடியும் தன் வீட்டை மிதிக்க எத்தனை நாட்கள் ஆகுமோ! அது வரை வயதான பெற்றோர்கள் ஆயுசோடு இருப்பார்களா? ரமாவும் சிறு பெண்தானே? அவளால் பெற்றோர்களையும் பேணி, படிப்பையும் கவனித்துக் கொள்ள முடியுமா?

ஏனோ அவரையறியாமல் சுந்தரின் கண்கள் கலங்கின. மற்றவர்கள் பார்க்கு முன், கரி விழுந்து உறுத்துவது போல் துடைத்துக் கொண்டார். ஆனால் நெஞ்சில் உறுத்தும் ஏக்கத்தை — அந்தப் பெற்றோர்களை, அன்புச் சகோதரியை என்று பார்ப்போம் என்ற ஆவலைச் சுலபமாகத் துடைத்துவிட முடியுமா? எல்லாவற்றையும் விடப் புறப்பட்ட தினம் அவர்கள் பேச்சு அவர் நினைவில் மறுபடி மறுபடி உறுத்தியது! எல்லாவற்றுக்கும் மூல காரணம் அந்த ஜானகி !

''சுந்தர், நீ ஜானகியை நினைத்துப் புண் பட்ட மனத்துடன் புறப்படுவது எனக்குப் பொறுக்க வில்லையடா....'' ஹோல்டாலை வரிந்து கட்டி விட்டு, நெஞ்சின் பாசத்தையும் இறுக்கிக் கட்டிவிட்ட மகனைத் துயரத்துடன் நோக்கினாள் தாயார். ''மனைவி போனால் வாழ்வே போய் விடுமா? நாங்கள் — இரண்டு கிழங்கள் — இருப்பது உனக்கு நினைவில்லையா? யாரைக் கேட்டு யுத்த முனைச் சேவைக்குப் பெயர் கொடுத்தாய்? எங்களுக்கு இனி யாரடா ஆதரவு? நீ நல்லபடி வரும்வரை என் மனசு....'' பெற்ற வயிறு குலுங்கியது.... பேச்சு விம்மலாகியது.

''என்னம்மா, ரமா இல்லையா உங்களைக் கவனிக்க? நான் என்ன ஓடியா போகிறேன்? தவிர நான் போவதற்கும், ஜானகி போனதற்கும் சம்பந்தமே இல்லை. நம் வீட்டுக் கவலைகளையே பட்டுக் கொண்டிருந்தால், நாட்டுக்குச் சேவை செய்ய வாய்ப்பேது? அதனால்தானம்மா போகத் துணிந்தேன்.... நாம் ஆளும் நாட்டைக் காக்க நாம் ஒவ்வொருவரும் புறப்பட வேண்டும் என்று சொல்கிறேன்....'' சுந்தர் சொற்களை வீசினார். ஆனால் உள்ளம்?

பெற்றவருக்குத் தெரியாதா மகனை? ''சுந்தர் !'' தந்தையின் அழைப்புக் கேட்டதுமே மகனின் பேச்சு வேகம் தடைப்பட்டது.

''என்ன, அப்பா!''

''அவள் போனதற்கும் நீ யுத்தகளம் செல்வதற்கும் சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ! முதலில் ஜானகி இங்கிருந்து சென்றதே, அவளை அனுப்பியதே தவறு என்கிறேன்.''

''அது கடந்த கதை அப்பா....''


''இல்லை, கடக்க முடியாத உறவு! முதலில் அவளை நீ மணக்க விரும்பிய போது நாங்கள் மறுத்தோம். உன் கீழ் வேலை பார்ப்பவள் என்பதால் சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட பழக்கத்தைக் காதல் என்று கணக் கிட்டு விட்டாய் என்று தடுத்தோம். ஆனால் பிடிவாதமாக அவளை மணந்தாய். ஆனால் மருமகளாக வந்த அவள் எந்தவிதக் குறையும் சொல்ல முடியாதபடி, புக்ககத்தார் புகழும் புதுமைப் பெண்ணாகத்தான் திகழ்ந்தாள். அப்படி வீட்டில் அடி எடுத்து வைத்த லக்ஷ்மி தேவியை ஒரு சொல்லினால் புண்படுத்தி விரட்டினாய் மூர்க்கமாக! அது நம்பவே முடியாத விதிதான்! சுந்தர், நர்ஸாகப் பணி புரியும் மனைவி வேலையில் இன்னொரு டாக்டருடன் பேசினாள் என்பதற்காகக் குற்றம் காணும் குறுகிய மனம் என் மகனுக்கு இருப்பதைக் கண்டு வெட்கப்படுகிறேன். வீட்டில் உள்ள பெண்ணை மதிக்கத் தெரியாதவனா நாட்டைக் காக்கப் போகிறான்! வயதான என் பொறுப்பை ஏற்க வேண்டிய நீ புறப்படுகிறாய்! நீங்க ளெல்லாம் படித்த மேதாவிகள். சேர்ப்பது உடைப்பது எல்லாம் உங்கள் கையில். ஆனால் ஒன்று நினைவு வைத்துக் கொள், சுந்தர். டாக்டர் நறுக்கி வெட்டி விட்ட எந்த அங்கமும், ஒரு சிறு நரம்புகூட எத்தனை ஒட்டினாலும் மறுபடி தன் சுய பலத்தை அடையாது. வெட்டி எறிந்து ஒட்டித் தைப்பது தற்கால வைத்திய முறையாக இருக்கலாம்....''

''அப்பா...'' சுந்தர் குறுக்கிட்டார். ''அப்படியானால் நான் இல்லாத வேளையில் அவள் டிஸ்பென்சரியில் நுழைந்து டாக்டர் சுரேஷுடன் சிரித்துப் பேசியது நியாயம் என்று உங்களுக்கு, பழமையில் ஊறிய உங்கள் மனத்துக்குக் கூடத் தோன்றுகிறதா? அப்பா, அதைப்பற்றி நானும் அதிகமாக அவளை என்ன கேட்டேன்.... ஏன் உங்கள் எதிரே தானே அவளை விசாரித்தேன்.....''

''அண்ணா, அதுதான் பெரிய தவறு.'' தங்கை ரமா இடையென்று இதில் குறுக்கிட்டது சுந்தருக்கே அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ரமா மீண்டும் தொடர்ந்தாள்: ''அண்ணா, உன் மனைவிமேல் தவறு என்றாலும் அவளைத் தனிமையில் கண்டித்துத் திருத்து. மற்றவர் முன் இந்தக் கேவலமான விஷயத்தைப் பேசி அவமானப்படுத்தி, அப்பாவைச் சாட்சி வேறு கேட்கிறாயா?''

''ரமா.... உனக்கு என்ன தெரியும்? அது பற்றி....பேசாதே.....!'' சுந்தர் தந்தை மீது காட்ட முடியாத கோபத்தைத் தங்கை மீது காட்டினார்.

''ரமா.... நீ பேசாமல் இரேன்....'' தாயார் குறுக்கிட்டு நிலைமையைச் சமாளித்தாள். நீ நல்லபடி வந்து எங்கள் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும் என்று நினைத்



"சார்! இந்த ரயில் கிடைக்குமோ கிடைக்காதோன்னு ஓடி வந்தேன்."
"என்ன, அப்புறம் கிடைத்து விட்டதா?"

பிரார்த்திப்போம். காலமாவது உன் மனத்தை மாற்றினல் வந்த பின்னுவது என் இருக லக்ஷ்மி திரும்பி வந்து இவ்வீட்டில் விளக்கேற்றுவாள்...."

"போகுமிடத்தில் ஜாக்கிரதையாக இரு, சுந்தர்....." தந்தையின் குரலும் தணிந்து தான் இருந்தது. "வேதனையுடன் வருவோரிடம் சுமுகமாகப் பழகு. மனத்தின் மாசுகளை அகற்றி விடு. உன் கடமையில் கண்ணும் கருத்துமாக இரு.... வேறு உனக்குச் சொல்ல என்ன இருக்கிறது...."

"ஆகட்டும், அப்பா..." சுந்தரின் குரலும் கரகரத்தது.

"அண்ணா...." மறுபடியும் ரமாதான் ஆரம்பித்தாள். "புது இடத்தில் எத்தனையோ அநுபவங்கள் ஏற்படலாம். அங்கு வரும் நர்ஸ்கள்! அவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பாவம், பிழைப்பு, சௌகரியம் என்று பல கவலைகளுக்கு இடம் கொடுத்துப் பணியாற்றுகிறார்கள். மயிலை விரட்டிய நீ இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். உன் தூய்மையையும், மற்றொரு பெண்ணின் வாழ்வையும் பாதுகாப்பதில் தான் உன் வீரம் இருக்கிறது. அந்தப் போர் முனையில் நீ நேரிடையாக ஈடுபட வில்லை. உயிரைப் பணயம் வைக்க வில்லை. ஆனால் மற்ற உயிருக்காக உழைக்க உன் உள்ளத்தைப் பதப்படுத்திக் கொள்.... எவரையும் உன் சகோதரியாக — அந்த நர்ஸ்களை — எண்ணி உன் நெறியை நீ காக்க வேண்டும் என்பது என் ஆசை. அண்ணா, அதில்தான் மன்னியை நீ தண்டித்த நியாயம் இருக்கிறது....பத்திரம்...." சிரித்துக் கொண்டே தான் சொன்னாள் ரமா.... ஆனால் அது ஆழமான பேச்சுதான்!

"ரமா...." — சுந்தரின் குரல் நெகிழ்ந்தது. "பெரியவர்கள் சொல்ல முடியாமல் மென்று விழுங்கியதை நீ சொல்லி விட்டாய்....நான் உன் சகோதரன். எனக்காக நீ பிரார்த்திப்பது வீண் போகாது...."

'ரமா கெட்டிக்காரி! அலைப்பது போலப் பேசி தனக்கு ஒரு சாட்டை, வீரர்களுக்கு ஒரு 'ஷொட்டு' கொடுத்து விட்டாள். ஆனால் இத்தனை வாயாடியான பெண்ணுக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகளை — கல்யாணம் குடும்பம் என்று ஏற்படுத்தும் தருணத்தில் நல்லபடியாகத் திரும்பி வர வேண்டுமே' என்ற கவலையும், வீட்டு நினைப்பும் சுந்தரின் நெஞ்சிலே புகைந்து கண்களைக் கரித்தது.

"என்ன டாக்டர் சாப்! அதற்குள் வீட்டு நினைவு வந்து விட்டதா?" சக பிரயாணியின் குரல் கேட்ட பின்தான் தம்மை மறந்த தனது குடும்ப நினைவுகளில் தான் கரைந்து நெகிழ விட்டதை டாக்டர் சுந்தர் உணர்ந்தான்.

"இன்றையத் தபால்கள் வந்து விட்டனவா?...." நர்ஸ் சரளா ஆவலுடன் மேஜை மீது கண்களை ஓட்டினாள். டாக்டர் சுந்தரின் இதழ்க் கடையில் புன்னகை அரும்பியது. "இதோ" தன் கட்டுடன் வந்த விட்ட கவரை நீட்டினார். ஆவலுடன் அதைப் பெறும் தந்தக் கரங்களும், தாமரை முகமும், அவர் மனத்தில் பதிந்து விட்டன. தமிழில் கட்டிய கைக் குட்டையின் ஓரத்தில் கருவண்டு படபடத்த குறுகல் கதறலையில்... அவளது அழகும், ஆர்வமும் புரிந்தன. சுந்தரின் இதயத்தில் ஏதோ குறுகுறுத்தது. பார்டரிலிருந்து அவள் கடிதத்தை எதிர்பார்க்கிறாள்?

"என்ன டாக்டர், அப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களுக்கு ஒன்றும் இல்லையா இன்று? அந்த ரமாவிடமிருந்து கூட?" சரளா கலகல வென்று சிரித்தாள். வெட்கப் பனியைப் பழித்த பற்கள்!

"ரமா, என் சகோதரி, சரளா...."

"ஓ.... ஸாரி...." சட்டென்று அவள் சிரிப்பின் 'வேகம்' பறந்தது. முகத்தில் ஏதோ தம் நிலையது. "அப்படியானால்....?" — அந்தக் கண்கள் என்ன கேட்கின்றன?

சுந்தரால் தாங்க முடியவில்லை! "எனக்கு உங்களைப் போல அன்பும் ஆதரவும் காட்டி எழுதுவோர் யாரும் இல்லை, சரளா." அவர் சொல்லின் பொருள் என்ன? சரளா அதைப் பற்றிச் சிந்திக்க வில்லை. ஆனால் மறுபடியும் ஒரு மின்வெட்டுச் சிரிப்பு......

"எனக்கு எழுதுவதும் என் அம்மா தான் டாக்டர். சகோதரிக்காகத் தினம் பிரார்த்தித்து விட்டு ஒரு ஆசிக் கடிதம், தன் வீடு குழந்தைகள் பற்றி — எனக்கு ஏக்கம் தெரியாமல் இருக்க எழுதுகிறாள்..." அவளுடைய தந்தக் கரம் கடிதத்தை இப்போது கண்களில் ஒற்றின.

சுந்தர் ஒரு கணம் உடலைச் சிலிர்த்து விகார எண்ணங்களை விரட்ட முயன்றார். "சரளா, நானும் தவறாக நினைத்து விட்டேன்...." என்றார்.

"நர்ஸ்.... நர்ஸ்...." சுந்தரின் குரல் உச்ச ஸ்தாயியில் ஒலித்தது. "எஸ், டாக்டர்" தன் எதிரே நின்ற பெண்ணை ஒரு முறை

திரும்பி நோக்கினார் சுந்தர். ஒரு கணம்! அவர் கை தர்மா மீட்டரை நழுவ விடாதது அதிசயம்தான்.

"இந்தப் பேஷண்டுக்குப் பிற்பகல் டெம்பரேச்சர் எடுத்தது யார்?" கடுமையாகத்தான் கேட்க நினைத்தார் சுந்தர். ஆனால் ஏன் அந்தக் குரல் அப்படிக் குழைகிறது. கேரளத்தின் எடுப்பான அழகும், அளவாக அமைந்த உடையும், முகத்தில் தவழ்ந்த புன்னகையும் லக்ஷ்மி களை ததும்பும் வதனமும் இத்தனை சக்தி வாய்ந்ததுதானா?

"பிற்பகல் நான்தான் எடுத்தேன். நார்மலாகத்தானே இருந்தது?" படுக்கையில் புரண்ட நோயாளியை — நாட்டுக்காகக் காலை இழந்த வீரனை — ஒரு முறை பார்த்தாள் நர்ஸ் மேனன். அந்த முகத்தில் ஏன் இத்தனை சோகம் திடீரென்று!

சற்று நேரத்தில் மேஜையருகே வந்தாள் பார்வதி மேனன். மீண்டும் சோதனைதான்! அவளது வாடிய முகமும், ஏங்கும் விழிகளும், எதைக் குறிக்கின்றன?

"டாக்டர்....

"என்ன ஸிஸ்டர் ஜுரம் ஏறி விட்டதும் பயந்தாயா?"

"இல்லை டாக்டர், அவன் பிழைப்பானா?"

"ஏன், நர்ஸ்?"

"இப்படித் துடித்துச் சாகும் ஒவ்வொரு வீரனையும் எதிர்பார்த்து அவன் வீட்டில் எத்தனை உயிர்கள் துடித்து நிற்கும் என்று நினைக்கும் போது.... டாக்டர்.... என் வேதனை அதிகரிக்கிறது....".

".... நீ இந்தத் தொழிலுக்கே லாயக் கற்றவள். வாழ்வுக்கும் சாவுக்கும் போராட்டம் நடக்கும் இடம் இது. பார்க்கப் போனால் வாழ்வைவிடச் சாவு நிச்சயம் என்ற நிலை.... அப்படியிருக்க ஜுரத்தைக் கண்டு நடுங்கும் நீங்கள்... பேசாமல் கல்யாணம் செய்து கொண்டு கணவன், குடும்பம் என்று அமைதியாக வாழ்வது மேல்...." மறுபடியும் அதே சின்னச் சிரிப்பு!

"ஆம்... அப்படித்தான் இருந்தேன். டாக்டர்..... ஆனால் அதுதான் மறுபடியும் என்னை இம்சித்து விட்டது...." கனவில் பேசுவது போலப் பேசினாள் பார்வதி மேனன்.


"என்ன. நீங்கள் மணமானவரா?....? அப்படியானால் ஏன் இங்கு வந்தீர்கள்?"

"என் கணவர் ஒரு போர் வீரர். திடீர்த் தாக்குதலாக யுத்தம் ஏற்பட்ட அவசரக் கோலத்தில் என் கணவரும் இங்கு வந்தார். அதன்பின் அவரைப் பற்றிய செய்தியே இல்லை. யுத்தக் கைதியானார் என்றார் சிலர். சேலா கணவாயில் அவர்... அவர் மறைந்தார் என்றார் சிலர். மணமாகி ஒரு வருஷமே ஆன நான் துடிதுடித்து இங்கு ஓடி வந்தேன். அவரை ஒரு நாள் விடுதலையான கைதியாக, நோயாளியாகக் காணலாம், அல்லது அவர் இறந்த இடத்திலேயே என் உயிரையும் விடலாம் என்ற எண்ணத்தில் மறுபடியும் பழைய தொழிலான நர்ஸ் வேலையை ஏற்றேன்." பார்வதி மேனனின் குரல் கரகரத்தது.

பார்வதி மேனன் இப்போது கண்டோரைக் கவரும் கேரளத்துக் கட்டழகியாக சுந்தருக்குத் தோன்றவில்லை. கணவனைத் தேடி வந்த கண்ணகி போல ஒரு கற்பரசியாகத் தோன்றினாள்.

மூன்றே தினம் கால் இழந்து துடித்த வீரன் அமரனாகிவிட்டான். இன்று அக்கட்டில் வேறொருவனுக்குத் தயாராக இருந்தது.

டாக்டர் சுந்தர் ஏதோ ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தார்.



மதம்தான் நம் நாட்டு வாழ்வின் சாரம். நம் மக்கள் எந்தச் சீர்திருத்தத்தை ஏற்க வேண்டுமாயினும் அது மதத்தின் மூலமே வந்தாக வேண்டும். அவர்களுடைய சிந்தனையை மத உணர்விலிருந்து மாற்ற முயலுவது கங்கையை அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய ஹிமாலயத்தை விட்டுத் தள்ளி வேறொரு புது மார்க்கத்தில் பிரவகிக்கும்படிச் செய்வதைப் போன்ற சாத்தியமற்ற செயலேயாகும்.

— ஸ்வாமி விவேகானந்தர்

'டக் டக்' என்ற பூட்ஸ் ஒலி வராந்தாவில் 'நைட் டியூடி' நர்ஸ் வருவதை அறிவித்தது.

''குட் ஈவினிங், டாக்டர்....''

''குட், ஈவினிங்....'' இடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தார் டாக்டர் குரல் வந்த திசை நோக்கி. ''ஆ.... நீயா, ஜானு?....''

அவளும் ஒரு கணம் ஆடித்தான் போனாள். ''இல்லை.... மிஸஸ் ஜானகி ராமசந்திரம் என்பது என் பெயர். இன்று பார்வதி மேனனுக்கு உடல் நலமில்லாததால் நான் வர வேண்டியிருந்தது.'' அவள் குரல் அமைதியாகவே ஒலித்தது.

''மற்றவர்களுக்கு அந்தப் பெயர்....ஆனால் எனக்கு?...'' சுந்தரின் ஏங்கும் விழிகள் ஆசை காட்டின.

''அது அந்த வீட்டில். இது போர் முனை. நான் பணியாற்றும் நர்ஸ்....''

''உன் கோபம் தணியாததில் நியாயம் இருக்கிறது. ஆனாலும் நான் உன் கணவன். உன்னை இங்கு சந்தித்ததில் எனக்கு ஏற்பட்ட ஆறுதல் சொல்லில் அடங்காது, ஜானு....''

''டாக்டர்.... எனக்கும் கலக்கந்தான் செய்தது. கட்டிய கணவனைப் போர் முனையில் கண்டதும்.... ஆனால்....டாக்டர்... இனி அந்த உறவைப் பற்றி நினைக்கவோ, பேசவோ, புதுப்பிக்கவோ இது இடமல்ல. மன்னிக்க வேண்டும்....'' அவள் தலை நிமிரவில்லை. மாநிற மேனியில் 'பளிச்'சென்று தூய உடை. இடது கையில் ஒரு 'ரிஸ்ட் வாட்ச்'! நெற்றியில் சிறு பொட்டு; அதன் கீற்று நடு வகிட்டின் நுனியிலும் தெரிந்தாற் போலத்தான் அவனுக்குத் தோன்றியது.

வெள்ளைக் கவுனுக்குள்ளே மஞ்சள் கயிறும், அதில் தொங்கும் அவர்கள் உறவின் சின்னமும் அவர் கண்களுக்குப் புலப்படத்தான் செய்தன! ஆனால் அவள்....''ஜானு?''

''ஸிஸ்டர்.'' — ஈனக் குரல் ஒன்று அழைத்தது. 'டக் டக்'கென்று விரைந்தாள் நர்ஸ்.

டாக்டர் சுந்தர் சொல்லமுடியாத வேதனையில் தவித்தார். ஆத்திரமா? அவமானமா? அடக்க முடியாத ஆவலா?

மெல்ல அவரும் தொடர்ந்து வார்டுக்குள் நுழைந்த போது....

நர்ஸ் ஜானகி வாலிபன் ஒருவனைத் தோளில் சார்த்தியபடி அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தாள். கீழே அவன் வாந்தி எடுத்த பீங்கான் தட்டு இருந்தது. டாக்டர் வந்ததையே அவள் கவனித்ததாகத் தெரியவில்லை. அவளது இனிய குரல் நிதானமாக எதையோ சொல்லி நோயாளியைத் தேற்றிக் கொண்டிருந்தது.

ஆனால் சுந்தர்? அவர் உடல் பற்றி எரிந்தது. 'ஜானு' என்று உள் மனம் அலறிய போது உதடுகள் 'நர்ஸ்' என்று கூவின.

''நர்ஸ்.....'' — ஆம், ஜானகியின் ஒதுக்கம் அவளைப் பெயர் சொல்லி அழைக்கும் துணிவைக் கூடக் குறைத்ததோ?

''எஸ்; டாக்டர்....''

''ஒரே தலைவலி. அந்தப் 'பெயின் பாமை' எடுத்து வா....''

இதமாகத்தான் இருந்தது அவள் மருந்து தடவிய போது. ஆனால் தன் உணர்ச்சிகளின் எதிரொலி அங்கு இல்லாதது ஏன்?

'ஜானு....' அந்தக் கரங்களைச் சட்டென்று பற்றினார் சுந்தர். ஒரு கணம்! பிடிபட்ட கரம் பிணைப்பில் தயங்கியது. மறு விநாடி 'வெடுக்'கென்று கைகளை உதறினாள் ஜானகி.

''டாக்டர்....'' அவள் பதறினாள்.

ஜானகியின் குரல் உணர்ச்சி வேகத்தில் படபடத்தது. பதை பதைத்தது. ''நம் உறவைக் கொண்டாடவும், துண்டாடவும் இது நம் வீடல்ல; இது போர் முனை. இது உங்கள் தாய் வீடல்ல; என் தாய் வீடும் அல்ல! 'நம்' தாய் வீடு! அதாவது ஆபத்தில் உள்ள நம் தாயைக் காண, அவளுக்குச் சேவை செய்ய, உபாதையைப் போக்க வந்திருக்கும் நாம் இருவருமே இப்பாரதத்தாயின் குழந்தைகள்!''

''ஜானு....''

''இல்லை, ஜானகி......''

''ஜானகி, அப்படியானால் நீ என் சகோதரியா?....''

''ஆம், இந்தத் தாயின் சன்னிதியில் இருக்கும் வரையில் அதில் பாவ நினைவுகளுக்கு இடமில்லை. மன்னிக்கவும். உங்களுக்கு அது கஷ்டமாயிருந்தால்... நாளை பார்வதிமேனன் வந்ததும் நான் வேறிடத்துக்குச் செல்கிறேன்....''

''உனக்கு அத்தனை திட மனசு இருக்கிறதா, ஜானு? நான்... உன்னைச் சந்தேகித்த நான் முட்டாள்....''

''ம்.... டாக்டர்.... இன்று ஒரு நாள்... நாளை நான் வேறிடம்....''

''இல்லை. நர்ஸ். நீ போக வேண்டாம். இங்கேயே இரு. உன் அண்மைதான், சகோதரர்கள் என்ற தூய ஒளியை என் மனத்தில் சுடர் வீசச் செய்யும். அந்த சத்திய ஜோதியில் நாம் பேரின்பத்தை, மாபெரும் வெற்றியை, தாயை யமனிடமிருந்து மீட்ட சாதனையைக் காண முடியும்.'' சுந்தரின் குரல் தழு தழுத்தது. கண்கள் பனித்தன.

''ஸிஸ்டர்!'' வார்டில் குரல் ஒலித்தது.

ஒரு முறை நிமிர்ந்து நோக்கினாள் ஜானகி. சுந்தரின் கண்களில் அமைதி ஒளி வீசியது. வெறி மறைந்திருந்தது! திருப்தியுடன் டாக்டர் சுந்தர் வார்டுக்குள் நுழைந்த போது பாரதத் தாயின் தவப் புதல்வன் ஒருவனை அவள் ஆசுவாசப்படுத்தும் காட்சி அவருக்கு ஆத்திரமூட்டவில்லை! அந்தத் தூய தொண்டு அவர் உள்ளத்தைத் தூய்மைப் படுத்தியது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

மக்ளீன்ஸ் பற்களை

வெண்மையாக்குகிறது என்பதற்கான ஆதாரம்

1 அதை உணருங்கள்

பற்களில் கறை படிந்திருக்கிறதா? அது இயற்கையான வெண்மையை மறைக்கிறது. இப்போது மக்ளீன்ஸ் கொண்டு பல்துலக்கி அது கறையை எவ்வாறு அகற்றுகிறது என்று உணருங்கள்.

2 அதை ருசியுங்கள்

நீங்கள் அனுபவிக்கும் அநத குளுமையான ருசிக்குக் காரணம் மக்ளீன்ஸில் இருக்கும் 3 கலவைப் பொருள்களும் திறம்பட வேலை செய்வதால்தான். அவை பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கி பாதுகாக்கின்றன.

3 அதைப் பாருங்கள்

உங்கள் புன்முறுவலில் காணும் வெண்மையைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். உங்கள் பற்களை முன்பிருந்ததைவிட மக்ளீன்ஸ் பற்பசை இன்னமும் வெண்மையாக்குகிறது. . நீங்களே இதைப் பரீட்சித்துப் பாருங்கள்.

வெண்மை
யான
பற்களுக்கு
மக்ளீன்ஸ்



MTP/1/P/1/63 TM A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



